ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 2 மே-1939 கதிர் 10

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
உலகத்தில் என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	10
கிராம வேலை—சில யோசனைகள்	தே. ஏகாம்பரம்	13
மனிதனின் அந்தரங்க மாளிகை	மு. முத்து வீரப்பன், B.A., L.L.B.,	17
ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்	சங்கர குமாரன்	22
மழை	வித்வான் எஸ். உமைதாணு பிள்ளை	27
ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள்	—	30
கர்ம பலன்—ஒரு சிறு கதை	ஜி. கே. சுந்தரம் B.A., B.T.,	31
மனோ தர்மம்....ஒரு சிறு நாடகம்	வெ. சா.	33
ஞானக் களஞ்சியம்	ரா. ஸ்ரீனிவாசன்	40
நல்ல புத்தி—தொடர் கதை	எஸ். கிருஷ்ணன்	43
பண்டித விஷன் நாராயண தர்	காங்கிரஸ் வாதி	50
கிரானடாவில் இந்தியர்கள்	"வாதூலன்"	53
வீழ்ந்துபட்ட அல்பேனியா	—	55
'தக்ளி'யினால் உண்டாகும் சாதகங்கள்	க. அருணாசலம்	57

சூயஸ் கால்வாய் அதன் வரலாறு	ஜெ. சி.	60
ஊக்கமாக வேலை செய்!	வ. பார்த்தசாரதி	63
ஜெர்மானியர்கள் நினைப்பது என்ன?	எச். பவிஸ் க்ரீன்வுட்	65
மின்சார உழவு	"விஞ்ஞான போதகர்"	69
நாஜி கட்சியின் வேலைத் திட்டம்	....	77
முசோலினியின் அன்றாட வேலை	—	81
தமயனின் கடிதம்-2	"தேவி தாசன்"	82
நமது நிருபர்களுடன்	—	83
துலாக்கோல்	—	87
புலவரை அரசராக்கிய சோழன்	வ. மு. இ.	90
அன்றாட உலகம்	—	93

நமது வேண்டுகோள்.

நமது சந்தா நேயர்கள் சிலர் "ஜோதி" இதழ் வெளியான இரண்டு மூன்று மாதங்கழித்து, தங்களுக்குப் பழைய இதழ்கள் கிடைக்க வில்லையென்று தெரிவிக்கிறார்கள். பத்திரிகை, சாதாரணமாக பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் சந்தாதார்கள் கையில் கிடைக்குமாறு நாம் அனுப்பிக்கொண்டு வருகிறோம். எனவே, அந்த மாத முடிவிற்குள் பத்திரிகை கிடைக்கவில்லை யென்று தெரிவித்தால், அதற்குத்தக்கது செய்யலாம். இப்படியே விலாச மாற்றங்களையும், பத்திரிகை வெளியாவதற்குப் பத்து தினங்களுக்கு முன்னடி தெரிவித்தல் நல்லது.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்..

47, 31வது வீதி. இரங்கூன்.

ஜோதி

சுடர் 2 மே 1939 கதிர் 10

ஏன்?

‘நாம் ஏன் சுயராஜ்யம் கேட்கிறோம்?’ என்ற கேள்வியை இப்பொழுது ஒரு பொது மேடையிலோ, அல்லது நண்பர்களின் கூட்டத்திலோ ஒருவன் எழுப்பினால், அவனை அனைவரும் பரிகசிப்பர்; கை கொட்டிச் சிரிப்பர்; “அட பேதாய்! காங்கிரஸ் சென்ற ஐம்பத்திரண்டு வருஷங்களாக அரிய தொண்டாற்றி வந்திருக்கிறது; காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கமோ சென்ற இருபது வருஷங்களுக்கு மேலாக தேசத்திலேயே ஒரு மாறுதலை உண்டுபண்ணி வந்திருக்கிறது. இங்ஙனமெல்லாமிருக்க, இந்த இருபதாவது நூற்றாண்டில்-அதிலும் 1939 வருஷத்தில்—நீ, ‘நாம் ஏன் சுயராஜ்யம் கேட்கிறோம்’ என்ற கேள்வியைக் கேட்கிறாயே; உன்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கன்றோ, அனுப்பவேண்டும்” என்று கூசாது கூறவும் செய்வர். இந்த மாதிரியாகப் பேசுவோரைத்தான் நாம் இப்பொழுது பெரும்பாலோராகக் காண்கிறோம். ஆனால், உண்மையில் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு யார் அனுப்பப்பட வேண்டுமென்ற பிரச்னையை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தோமானால், பெரும் பான்மையோரைத்தான் என்ற முடிவுக்கு வருவோம். ‘உலகம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியாக மாறிக்கொண்டு வருகிறது’ என்று யாரோ ஒரு மேனாட்டுப் புலவன் கூறியது இந்தச் சமயத்தில் நமது நினைவுக்கு வருகிறது. பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு யார் போவது என்பது இப்பொழுது முக்கிய பிரச்னையல்ல. ஆனால் நம்மிலே எத்தனை பேர், ‘நாம் ஏன் சுயராஜ்யம் கேட்கிறோம்’ என்ற கேள்விக்கு விடை தெரிந்து கொண்டிருக்கின்றனர் என்பது தான் முக்கிய பிரச்னை. தலைவர்களை தரிசிக்கிறோம்; அவர்களுடைய பிரசங்கங்களைக் கண்மூடி மௌனியாயிருந்து செவிமடுக்கிறோம்; ‘ஹா! ஹா! என்ன அருமையான தத்துவங்களை யெல்லாம் கூறுகிறார்!’ என்று அவர்கள் சென்ற பிறகு, வாயாரப் பேசுகிறோம். ஆனால் இதயம் மட்டும் எப்பொழுதும் போல் சூனியமாகவே இருக்கிறது. அதில் எவ்வித மாற்றமும் ஏற்படக்

காண்கிறோமில்லை. இதற்குக் காரணமாயிருப்பது என்னவென்றால், நமது அபிப்பிராயத்தில், 'நாம் ஏன் சுயராஜ்யம் கேட்கிறோம்? அது நமக்கு ஏன் தேவை?' என்பவைகளை அறிந்துகொள்ளாமலே, நாம் சுயராஜ்ய இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதுதான். சட்டத்தை அறிந்துகொள்ளாமலே சட்டத்தோடு போராடுகிற பேர்வழிகளைப்போல், சுயராஜ்யத்தின் தேவையை உணராமலே நாம் சுயராஜ்யச் சேனையில் சேர்ந்திருக்கிறோம். இதனாலேயே நமது முன்னேற்றம் மிக மெதுவாக இருக்கிறது; நமது தியாகங்கள், உதயகால சந்திரனைப்போல் பிரகாசம் மழுங்கிப்போகின்றன; மெதுவாகச் செல்லுகிற நாம், வேகமாக ஓடிக்கொண்டிருப்பதாக மயக்கங் கொள்கிறோம். இது காரணமாகவே ஒருவர்க்கொருவர் முட்டிக்கொள்ளவும், மோதிக்கொள்ளவும் ஏதுவுண்டாகிறது. 'பிரிட்டனுக்கு ஆறுமாதத் தவணைக்கொடுத்து நமது கோரிக்கைகளைக் கிளத்தவேண்டும்' என்று யாராவது சொன்னால் 'ஹா' என்று மருள்கிறோம்.

நாம் ஏன் சுயராஜ்யம் கேட்கிறோம்? உலக நன்மைக்கு என்ற ஒரே வார்த்தையில் சுருக்கமாக இதற்கு விடை கூறிவிட விரும்புகிறோம். மேல்பார்வையாகப் பார்க்கிறபோது, 'இதென்ன பைத்தியக்காரத்தனம்? இவனுடைய நன்மைக்கே இவனால் வழிதேடிக்கொள்ள முடியவில்லை; உலகநன்மைக்காக வழிதேடப்போகிறானாம்' என்றுதான் பரிகாசமாகத் தோன்றும். ஆனால் இதனைக் கொஞ்சம் ஆழ்ந்து பார்க்கவேண்டும். பாரமார்த்திகத் துறையிலே உலகத்தை முன்னேற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லை. நாம் பட்டினிகிடந்து, உலகத்தின் வயிற்றை நிரப்பிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தாராள மனப்பான்மையும் நமக்குக் கிடையாது. இவையெல்லாம் நமது மூதாதையரின் உரிமைப் பொருள்களென்று மதிப்புக் கொடுத்து, ஒரு மூலையில் தற்காலிகமாக ஒதுக்கிவைக்க விரும்புகிறோம். உலகியலிலே—அதாவது ரூபா, அணா, பைசா கணக்கில்—உலகம் செம்மையாக வாழவேண்டுமென்பதற்காகத்தான் நாம் வாழ விரும்புகிறோம்; அதாவது சுயராஜ்யம் தேவையென்று கதறுகிறோம். இதைச் சிறிது விளக்கிக் கூறிவிடுதல் நல்லதல்லவா?

உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு ஜனங்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள். இந்த ஐந்தில் ஒரு பங்கு ஜனங்களில், பத்தில் ஒன்பது பேர், இறந்துபோகாமல் உயிர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய ஆறில் ஒரு பங்கு ஜனங்கள், உயிர், இவர்களை விடமாட்டேனென்கிறதா, அல்லது இவர்கள்தான் உயிரைப் பிடித்துவைத்துக்கொண்டிருக்கிறார்களா என்ற சந்தேகக் கேள்விக்கிடையே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மரணத்தைவிட இந்த வாழ்க்கை கொடுமையானதல்லவா? இதுதான் இவர்களுடைய தலைவிதி, இதுதான் இவர்களுடைய சாசுவதமான வாழ்க்கையென்று யாரும் துணிந்து கூறமுடியாது. இவர்களுடைய வாழ்க்கையில் ஒருவித பிரகாசத்தை மேலே கூறப்பட்ட ஒரு பங்கினர் புகுத்த முயலவேண்டும். அப்படி, இவர்கள், வாழ்க்கையில் ஒரு பிரகாசத்தைக்

காண்பார்களானல், அது காரணமாக உலகத்திலே அபரிமிதமாக உற்பத்தியாகி விநியோகத்திற்கு இடமில்லாமல் குவிந்துகிடக்கும் பொருள்கள் அனைத்தும் ஒரு கணத்தில் கரைந்துவிடும். ஏழை மக்கள் எப்பொழுதுமே நன்றியுடையவர்கள். அவர்களுக்கு ஒரு நன்மை செய்யப்படுமானல் அதற்குப் பதிலாக அவர்கள் பத்து நன்மைகளைச் செய்து, கரையாத மனத்தைக்கூட கரையச் செய்வார்கள்.

உலகத்தின் தற்போதைய பொருளாதார தத்துவமானது எதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்றல், நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்திருப்பவர்களுக்கே அதிகமான உணவு வழங்கப்படுகிறது. ஆடம்பரமான உடைகள் அணிவோருக்கு ஏற்றதான ஆடைகள்தான் உற்பத்தி செய்து விநியோகத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த அடிப்படை மாருமல் இருக்கிறவரை, உலகத்தில் அடிக்கடி வியாபார மந்தம் ஏற்படத்தான் செய்யும்; பொருளாதாரச் சிக்கல்களும், ஒருவரை யொருவர் சுரண்டுகிற மனப்பான்மையும் இருக்கவே செய்யும்; ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையே சுங்கவரிச் சுவர்கள் நாளுக்கு நாள் உயரமாக எழும்பிக்கொண்டுதானிருக்கும். பசியுள்ளவர்களுக்கு உணவு வழங்கப்படட்டும்; அப்பொழுது முதலாளிகள் குவித்துவைத்திருக்கும் உணவுப் பொருள்களெல்லாம் எவ்வாறு நாலாபக்கங்களுக்கும் பரவவேண்டுமோ அவ்வாறு பரவிவிடும். கேட்பாரில்லையே யென்று கூக்குரலிட்டுக்கொண்டு, கானடாவிலுள்ளவர்கள் அதிகமாக விளைந்துவிட்ட கோதுமையை எரித்துவிட வேண்டாம்; தென்னமெரிக்காவிலுள்ளோர், காப்பிக்கொட்டையைச் சமுத்திரத்தில் எறியவும் வேண்டாம். பெருவாரியாகப் பொருள்களை உற்பத்திச் செய்வோரை நாம் கேட்டுக்கொள்வதெல்லாம், 'ஐயா! நிர்வாணமாயிருப்பவர்களுக்கு உடை வழங்குங்கள்; அழுக்கு கலைக்குத் தொண்டு செய்தவர்களாவீர்கள். இந்தியாவில் தேவையுள்ளவர்கள் பெரும்பாலோராகஇருக்கிருர்கள்: அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள். மற்ற நாடுகளிலுள்ள தேவையில்லாதவர்களுக்கு உங்கள் பொருள்களைக் கொண்டு திணிப்பதில், தீர்க்கமுடியாத பொருளாதாரப் பிரச்னைகளின் ஜாபிதாவை இன்னும் அதிகப்படுத்திக்கொண்டு போகிறீர்கள்' என்பதுதான். உலகத்தின் வியாபாரச் செழிப்புக்காகவும், பொருளாதார க்ஷேமத்தை முன்னிட்டும், இந்தியாவின் பொருளாதார அஸ்திவாரம் பலமாக்கப்பட வேண்டும். இந்தியாவின் பொருளாதாரம், உலகப் பொருளாதாரத்தோடு பின்னிக்கொண்டிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிலர்க்கு ஒரு சந்தேகம் உண்டாகலாம். ஏன் இந்தியாவின் பொருளாதாரத் தேவையைமட்டும் கவனிக்க வேண்டும்? மற்ற நாட்டிலுள்ளோர்க்கும் தேவைகள் பல இல்லையோ? இந்தமாதிரியான சந்தேகங்கள் உண்டாவது இயற்கைதான். ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்து, எவ்வளவு உச்ச நிலைக்கு வரவேண்டுமோ அவ்வளவு உச்ச நிலைக்கு வந்து விட்டது. ஜனங்களின் வாங்கும் சக்தியானது அதிகப்பட்டிருக்கிறது. ஏனென்

னால் அவர்களுடைய சராசரி வருமானமும் மிக அதிகம். அவர்களுடைய வாங்குஞ் சக்தியையோ, சராசரி வருமானத்தையோ இன்னும் அதிகப்படுத்திக்கொண்டு போவதென்பது முடியாத காரியம். அதனால் விளையும் பயனும் இல்லை. இந்தியாவிலோ, பெரும்பான்மையான ஜனங்களுக்கு வாழ்க்கை யென்பதே தெரியாது. வாழ்க்கை அந்தஸ்தென்பது தெரிய எங்கே இடமிருக்கிறது? ஆகையால், இவர்களுடைய—இந்திய ஏழை ஜனங்களுடையே—இருளடைந்த வாழ்க்கையிலே ஒரு பிரகாசத்தைப் புகுத்தி இவர்களுடைய வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்துவோமானால் உலகத்தின் பொருளாதார நிலை உயர்வடையும்; பொருளுற்பத்தி செய்வோருடைய ஏக்கமும் குறையும்.

இந்தியாவிலே இப்பொழுது சராசரி ஒரு நபர் ஒரு வருஷத்திற்குச் சுமார் பத்தரை கஜம் துணி உடுத்துகிறார். இந்தச் சராசரியில் வருஷத்திற்கு ஒரு கஜம் அதிகப்படுமானால், உலகத்திலுள்ள துணி மில்களின் சக்கரங்கள் எப்பொழுதும் சுழன்று கொண்டே யிருக்கும். ஒவ்வோர் இந்தியனும், தன்னுடைய தினசரி உணவில் ஒரு கிட்டிகை சர்க்கரையை அதிகமாகச் சேர்த்துக் கொண்டானானால்—அந்தோ! இந்தியாவில் எத்தனை ஏழை மக்களுக்கு சர்க்கரை இனிப்பான பொருள் என்பது தெரியும்?—க்யூபா தேசத்திலும் ஜாவா தீவிலும் உற்பத்தியாகிற சர்க்கரை போதுமா? ஆகவே, உலகத்தின் பொருளாதார க்ஷேமத்தை முன்னிட்டு, இந்தியாவின் பொருளாதாரத்தில் ஒரு க்ஷேமம் ஏற்பட வேண்டும். அதற்கு அரசியல் சுதந்திரம் அவசியமில்லையா? இதனாலேயே இந்தியாவின் விடுதலை, உலகத்தின் விடுதலை யென்று நாம் கூறுகிறோம்.

இங்கு ஓர் ஆட்சேபம் கிளப்பப்படலாம். அதாவது, 'மேலே நீங்கள் கூறிவந்த வாதத்தைப் பார்த்தால், உலகத்திலுற்பத்தியாகும் பொருள்களை இந்தியாவில் கொண்டு திணிக்கப் பார்க்கிறீர்களே தவிர, இந்தியாவின் பொருளுற்பத்தி சக்தியை அதிகப் படுத்த மாட்டீர்கள் போலிருக்கிறதே' என்று கூறலாம். இந்தியாவின் பொருளுற்பத்தி சக்தியை அதிகப் படுத்துவதற்குத் தான் அரசியல் சுதந்திரம் வேண்டுமென்கிறோம். இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் ஏராளமாக வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கும் மூலப்பொருள்களை நிறுத்தி, அவற்றை முழுப்பொருள்களாக—அதாவது ஜனங்களின் உபயோகத்திற்கு ஏற்ற பொருள்களாக—மாற்றி இந்தியாவிலே விநியோகிக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகவே, அரசியல் சுதந்திரம் அவசியமாயிருக்கிறது. ஆக, நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்ட பிறகுதான் மிகுதிப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம். நம்மிடம் இல்லாத, நம்மால் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களையே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்வோம். சுதந்திர நிலையில்தான், இந்த உரிமை நமக்கு ஏற்படமுடியும். மற்றும், நாம் எப்பொழுதுமே பொருளாதாரத் துறையிலாகட்டும், அரசியல் துறையிலாகட்டும் தனித்து வாழமுடியாது. நமது தனித்துவத்தை இழந்து விடாமல், உலகத்தோடு ஒட்டிவாழ வேண்டும். அந்த நிலையில், நமது பொருளாதார க்ஷே

மத்தை உலக க்ஷேமத்தோடு இணைத்துத்தான் பார்க்க முடியும். எனவே, உள்நாட்டுப் பொருளுற்பத்தி சக்தியை அழித்துவிட்டு, அதன் மீது உலகப்பொருளாதாரக் கட்டிடத்தைக் கட்டவேண்டுமென்று யாருமே கூற மாட்டார்கள். இந்த ஆட்சேபம், அல்லது சந்தேகம் எழவேண்டிய காரணமுமில்லை.

இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கு உலகத்தார் எந்த விதத்தில் உதவி செய்ய முடியும் என்று சிலர் கேட்கலாம். யாருடைய தயவிலும் வாழ நாம் விரும்பவில்லை. அப்படி வாழ்வது என்றைக்கும் ஆபத்துதான். நமது முயற்சியிலேயே நாம் சுதந்திரம் பெற முடியும். நாம் கூறுவதெல்லாம் என்னவென்றால் 'நாங்கள் சுதந்திரம் பெற்றால் உங்களுக்குத்தான் நன்மை' என்று உலகத்தாரைப் பார்த்துக் கூறுகிறோமே தவிர, 'உங்களுடைய உதவிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்' என்று கூறவேயில்லை. ஓர் ஆலோசனையை மட்டும் நாம் உலகத்தாருக்குக் கூறுவோம். அதாவது 'ஏகாதிபத்திய சக்திகளோடு, பாஸிஸ சக்திகளோடு சேர்ந்து கொண்டு, சுதந்திரமில்லாத எங்களையும், எங்களைப் போன்ற நாடுகளையும் அழுத்தப் பார்க்காதீர்கள்' என்பதுதான்.

சுயராஜ்யம் ஏன் தேவையென்ற பிரச்னையை இன்னொரு பார்வையிலிருந்து நோக்குவோம். உலகத்தில் மொத்தம் ஏழு அதிசயங்கள் உண்டென்று சொல்வர். ஆனால் இப்பொழுது இந்தியாவோ, அல்லது அதன் நிலைமையோ எட்டாவது அதிசயமாயிருக்கிறது. இங்ஙனம் அதிசயப் பொருள்களில் ஒன்றாக இருக்க நாம் விரும்பவில்லை. எப்படி நமது புராதனக் கலைகளும், நமது மூதாதையர்களின் நாகரிக வாழ்க்கையும் பொருட் காட்சியில் வைத்துப் பார்க்கப்படுகிற பொருள்களாகி விட்டனவோ, அதைப் போல் சதையும் ரத்தமும் கலந்த நாம், பொருட் காட்சியின் உயிரற்ற பொம்மைகள் மாதிரி ஆகிவிட விரும்பவில்லை. நாம் எந்தெந்த விதமான அதிசய நிலையில் இருக்கிறோம் என்பதை வரிசைக் கிரமமாகச் சிறிது கவனிப்போம்.

1. உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு பேர் வசிக்கிற விஸ்தீரணமான ஒரு நாடு—நீர்வளமும் நிலவளமும் நிறைந்த நாடு—சுதந்திரமில்லாமல் இருக்கிற அதிசயத்தை வேறெங்கேனும் பார்த்திருக்கிறீர்களா?

2. அப்படிச் சுதந்திரமில்லாமலிருந்தும், அதை அந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் உணராமலிருக்கிற—அல்லது உணர்த்தப்படாமலிருக்கிற — விந்தையை வேறெங்கேனும் காண இயலுமா?

3. தேசத்தின் கல்வி முறையானது, அந்த நாட்டுக் கலைஞானப் பெருக்கத்திற்கும் நாகரிக உன்னதிக்கும் வழிகோலாமல் அதனைத் தூர்த்து விடுகிறமாதிரி அமைக்கப்பட்டிருக்கிற அதிசயத்தை வேறெங்கே பார்க்க முடியும்?

4. அப்படிப்பட்ட கல்வியைப் பயின்று, அதிலேயே ஊறிப்போய், தேசியம் வேறு, கலை வளர்ச்சி வேறு என்று பிரித்துக்கொண்டு 'திரிசங்கு ஸ்வர்க்க'த்திலே வாழ்கிற பேர்வழிகளை, அறிஞர்க

என்று போற்றுகிற விநோதத்தை வேறெந்த தேசத்திலேனும் பார்க்க முடியுமா?

5. தேசத்தின் கல்வியானது அந்நிய பாஷை மூலமாகப் போதிக்கப் படுகிற அதிசயம் வேறெங்கேனும் உண்டு கொல்?

6. தேசத்திற்கென்று சொந்தமான கடற்படையோ, தரைப் படையோ, ஆகாயப் படையோ இல்லாமலிருக்கிற போது, அரசாங்கத்தின் மொத்தவருமானத்தில் ஏறக்குறைய பாதி அளவு ராணுவச் செலவுக்கென்று ஒதுக்கப் படுகிற விந்தை வேறெங்கு உண்டு?

இந்த மாதிரி அதிசயங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் நமது மனம் புண்பட்டுப் போகிறது. இந்த அதிசயங்களெல்லாம் நம்மினின்று விலகிப்போக வேண்டுமென்பதற்காக நாம் அரசியல் சுதந்திரம் தேவையென்கிறோம். இதற்காகவே, சென்ற ஐம்பத்திரண்டு வருஷங்களாகக் காங்கிரஸ் வேலை செய்து வருகிறது. ஆனால் இதன் முயற்சி, இதன் உழைப்பு, இதன் தியாகம் போதாதென்பதுதான் நமது குறை. சிறப்பாகக் காங்கிரஸின் பிரசார இலாகா வலுப்படுத்தப்பெற்று அதிகமான வேலை செய்ய வேண்டுமென்பது நமது கோரிக்கை.

இப்பொழுது தேசத்திலே நாம் என்ன காண்கிறோம்? அற்ப விஷயங்களை முன்னிலைப்படுத்திக் கொண்டு தலைவர்கள் மனமாற்றங்கொண்டு விடுகிறார்கள். இவர்களுடைய மனமாற்றங் காரணமாக, ஜனங்கள் இன்ன வழி போவதென்று தெரியாமல் திகைக்கிறார்கள். உலகத்தில் சமரஸ உணர்ச்சி பரவி வருவதாகச் சொல்லப்பட்ட போதிலும், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சமூக வாரியாகவும் ஜாதி வாரியாகவுமே நினைக்கிறார்கள். இதைவிட தேசத்திற்கு ஏற்படுகிற சாபக்கேடு வேறொன்றும் இருக்க முடியாது. உதாரணமாக, பாஷைவாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டுமென்ற கொள்கையில் நாம் பரிபூரணமாகக் கலந்தவர்கள். ஆனால் நமது ஆந்திர சகோதரர்கள் இதற்காகச் செய்கிற கிளர்ச்சிகள் கொஞ்சம் வரம்பு மீறிப்போயிருக்கின்றன வென்று நாம் அஞ்சுகிறோம். ஸ்ரீ. இ. ராகவேந்திரராவின் துணையைக்கூட இவர்கள் நாட வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இங்ஙனமே, நமது முஸ்லீம் சகோதரர்களும், வகுப்புக் கண்கொண்டேதான் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் நோக்குகிறார்கள். இந்தக் காமாலை பார்வையானது எங்கே கொண்டுபோய் விடுமென்று சொல்ல முடியாது. ஆனால் இவையெல்லாம் தேசமுன்னேற்றத்திற்குப் பெருந்தடைகளாகும் என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்வோம்.

ஆக, நாம் ஏன் சுயராஜ்யம் கேட்கிறோம் என்பதைப்பற்றிப் பொது ஜனங்களிடையே இன்னும் அதிகமான பிரசாரம் செய்யப்பட வேண்டும். இதற்கான துண்டுப்பிரசுரங்களையும் நூல்களையும் அறிஞர்கள் எழுதி வெளியிடவேண்டும். படித்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் பட்டதாரிகள், தேசீய இயக்கத்திலிருந்து ஒதுங்கி யிருத்தல், அவர்களே வருந்திக் கற்ற கல்விக்கே துரோகம் செய்வதாகும். இதைவிடக் கடினமான பாஷையை நாம் உபயோகிக்க விரும்பவில்லை. காங்கிரஸின் பிரசார

இல்லாகா, இந்தத் துறையில் அதிக மான கவனத்தைச் செலுத்தும் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

பரிபூர்ண அரசாங்கம்

மாகாணப் பொறுப்பாட்சியைக் கண்டு சிலர் மலைத்துப் போயிருக்கிறார்கள். இந்த மாகாணப் பொறுப்பாட்சியின் கீழ் நடைபெறும் விவகாரங்களைக் கவனிக்கிறபோது, நமது லட்சியத்திற்கு இன்னும் எவ்வளவோ தொலைவில் இருப்பதாகவே நாம் கருதுகிறோம். இங்ஙனமே, சட்ட புத்தகத்திலே ஏறி ஆனால் அமுலில் கொண்டு வரப்படாமல் இருக்கிற சமஷ்டித் திட்டமும், நம்முடைய லட்சியத்தை அப்புறப்படுத்துவதாகவே இருக்கிறது. அப்படியானால் நமது லட்சியந்தான் எது? பரிபூர்ண அரசாங்கம். அஃது எந்தெந்த முக்கிய அமிசங்களைக் கொண்டிருக்க வேண்டும்?

(1) தனது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் மீதும், (2) ராணுவத்தின் மீதும் (3) பொக்கிஷத்தின் மீதும் (4) உள்நாட்டு நிருவாகம், போக்குவரத்து இவைகளின் மீதும் (5) நீதி நிருவாகத்தின் மீதும் அந்த அரசாங்கத்திற்குப் பரி பூரண அதிகாரம் இருக்க வேண்டும்.

இந்த ஐந்து முக்கிய அமிசங்களும் இருக்கிற ஆட்சி முறைதான், சுய ஆட்சி என்பதை நமது அரசியல் பண்டிதர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பது நமது விருப்பம்.

யுத்தங்கள்

தன்னுடைய கட்சி மிகவும் நியாயமானதென்று எடுத்துக் காட்டுவதில் ஹிட்லர் மிகவும் சாமர்த்திய சாலி. 28-4-39ல் இவன் ஜெர்மன் 'ரய்ஹ்ஸ்டாக்' சபையில் பேசிய போது, 1919ம் வருஷத்திலிருந்து 1938ம் வருஷம் வரை பதினொன்கு யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றனவென்றும், இவற்றில் ஒன்றிலுமே ஜெர்மனி கலந்து கொள்ளவில்லையென்றும் கூறியிருக்கிறான். இஃதொரு விதத்தில் உண்மையாக இருக்கலாம். ஆனால் 1938-1939ம் வருஷங்களில் ஜெர்மனி, எல்லாவற்றையும் கிரகணம் போட்டு மறைக்கிற மாதிரி, நாட்டு ஆக்ரமிப்பில் முனைபவில்லையா? 1919ம் வருஷத்திலிருந்து என்னென்ன யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன வென்பதற்குக் கீழே ஒரு ஜாபிதாவைக் கொடுக்கிறோம்.

1918-1919—கலீஷியா மாகாணத்தின் கிழக்குப் பாகத்தைத் தங்கள் சுவாதீனப்படுத்திக் கொள்வதற்காக போலந்துக்காரர்களும் உக்ரேனியர்களும் போராடினார்கள். கடைசியில் இந்தப் பிரதேசம், 25 வருஷ காலம் வரை, போலந்தின் சுவாதீனத்திற்கு விடப்பட்டது.

1919—சைபீரியாவில் தளபதி கோல்சாக்கும், தெற்குப் பாகத்தில் தளபதி டெனிக்கினும், எஸ்தோனியாவில் தளபதி யுடெனிக்கும் நேசக் கட்சியினரால் உதவி செய்யப் பட்டு ருஷ்யாவில் ஏற்பட்ட (வெள்ளை ருஷ்ய) கலகத்தை அடக்கினார்கள்,

1919—1921—ஜர்லாந்தில் போராட்டம். இதன் முடிவு ஜரிஷ் சுதந்திர நாடு ஸ்தாபிதம்.

1919-1922—மொராக்கோவில் ஸ்பானியர்களின் யுத்த ஆர்ப்பாட்டம். 1921ம் வருஷம் ஜூலை மாதம் மெலில்லா என்ற ஊரில் ஒரே நாளில் பதினாயிரம் ஸ்பானியர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

1919-1926—அரேபியாவில் இபுன் சாத்தின் யுக்தமும், மேற்படி நாட்டின் ஆதிக்கமும்.

1920—போலந்தின் மீது ருஷ்யா படையெடுத்தது. ஆனால் அதே வருஷத்தில் தோல்வியுற்றது.

1920—அர்மீனியக் குடியரசு நாட்டின் மீது துருக்கியின் படையெடுப்பு. கார்ஸ், அலெக்ஸாந்த்ரோ-போல் ஆகிய பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டன. இதன் விளைவாக ருஷ்யாவுக்கு நேரான பாதை ஏற்படுத்திக் கொண்டது துருக்கி.

1920-1921—சைனாவில் உள்நாட்டுச் சண்டைகள்.

1921-1922—சின்ன ஆசியாவின் மீது கிரேக்கர்கள் படையெடுத்தார்கள். ஆனால், சகேரியா என்ற இடத்தில் துருக்கியர்களால் பலமாக முறியடிக்கப்பட்டார்கள். ஸ்மிர்னா சூறையாடப் பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. சுமார் 600,000,000 ரூபாய் நஷ்டம். ஆயிரக்கணக்கான பேர் கொலை செய்யப்பட்டார்கள்.

1925—சிரியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் பெரிய கலகம். டமாஸ்கஸ் நகரத்தின் மீது வெடிகுண்டுப் பிரயோகம்.

1925-1935—தென்னமெரிக்காவிலுள்ள பொலிவியா நாட்டுக்கும், பராகுவே நாட்டுக்கும் இடைவிடாத சண்டை.

1926-1928—சீனாவில் பல கட்சியினருக்குள்ளும் மன மாற்றமும் போராட்டமும். நாங்கிங்கில் குடியரசு அரசாங்க ஸ்தாபிதம்.

1931-1932—மஞ்சுகோவின் மீது ஜப்பான் படையெடுத்து, சீன கவர்னரான சாங்-சியோலி-யாங் என்பவனைத் துரத்தி விட்டது. ஹென்ரி-பு-யி என்பவனை சக்ரவர்த்தியாக ஸ்தாபிதம் செய்தது.

1932—ஷாங்காய் நகரத்தில் 50,000 ஜப்பானியர்களுக்கும் 120,000 சீனர்களுக்கும் பலத்த சண்டை. ஷாங்காய் நகரத்தில் மட்டும் சுமார் 1,050,000,000 ரூபாய் நஷ்டம்.

1935-1936 — எதியோப்பியாவை, இத்தலி ஆக்ரமித்துக் கொண்டது.

1936—ஸ்பெயினில், ஜெனரல் பிராங்கோ குடியரசு அரசாங்கத்தின் மீது கலகத்திற்குக் கிளம்பினான். ஜெர்மனியும், இத்தலியும் பிராங்கோவுக்கு உதவி செய்தன.

1937—சீன ஜப்பானிய யுத்தம்.

1938 ஜெர்மனியின் ஆஸ்திரிய ஆக்ரமிப்பு.

ஸுடேடென் பிரதேசம் ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்தது.

1939 ஜெக்கோ ஸ்லோவேகியாவும் மெமல் பிரதேசமும் ஜெர்மனியின் வசப்பட்டன.
அல்பேனியா, இத்தலிக்கு உரிமையாகி விட்டது.

* * *

ராஜீநாமா

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து ராஜீநாமா செய்து விட்டார். காங்கிரஸ் காரியக் கமிட்டியை யமைக்கும் விஷயத்தில் காந்தியடிகளுக்கும் இவருக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதமே இதற்குக் காரணம் என்று அறிகிறோம். உலகத்தின் தற்போதைய கொந்தளிப்பான நிலைமையில், அது காரணமாக் என்ன செய்வதென்று இந்தியா திகைத்துக் கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே, தலைவர்கள் ஒரு வித சமரஸ முடிவுக்கு வரமுடியாமற் போனதைக் குறித்து எந்த இந்தியனும் விசனப்படாமலிருக்க மாட்டான். ஆனால் நாம் அடிக்கடி கூறிக்கொண்டு வந்திருக்கிற மாதிரி நாம் சர்வாது கூலவாதிகள்; எல்லாம் நன்மையாகவே முடியும் என்ற நம்பிக்கையுடையவர்கள்; ஆகலின், இப்பொழுது ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமையானது, பிளவாக மாறி புரைப் புண்ணாகாமலிருக்குமென்றே நம்புகிறோம். அதுவே நமது பிரார்த்தனை. நாம் அச்சுக்குப் போகும் வரை, ஸ்ரீ போஸின் ராஜீநாமா சம்பந்தமான முழு விவரங்களும், அதைப்பற்றி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செய்த முடிவும் தெரியவில்லையாதலால், இதைப் பற்றி, அடுத்த கதிரில் விரிவாக ஆராய்வோம்.

* * *

தமிழில்

சென்னைத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார், ஓர் அறிக்கையைத் தமிழ் நாட்டிலுள்ள எல்லா நகர சபைத் தலைவர்களுக்கும், ஜில்லா போர்ட் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். இந்த அறிக்கையிலுள்ள கருத்துக்களை நாம் அப்படியே மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். அறிக்கை வருமாறு:—

(1) தங்கள் கண்காணிப்பின் கீழுள்ள நகரத் தெருக்களின் பெயர்களெல்லாம் சரியான தமிழில் பிழையில்லாமல் எழுதப்படுதல் வேண்டும்; (வேண்டுமிடத்து அவற்றின் ஆங்கிலப் பெயர்களையும் உடன் சேர்த்துக் கொள்ளலாம்.)

(2) நகராண்மைக் கழகத்தொகை முறைக் கடிதங்க (Standardised forms) ளெல்லாம் சரியான தமிழில் பிழையின்றி எழுதப்படுதல் வேண்டும்.

(3) கழக நடவடிக்கைகள், உட்கழக நடவடிக்கைகள் எல்லாம் இயன்றவரை சரியான தமிழில் பிழையின்றி எழுதப்படுதல் வேண்டும்.

(4) கழகக் கடிதப் போக்குவரத்துக்கள் இயன்றவரை சரியான பிழையில்லாத தமிழிலேயே இருக்குமாறு குறிக்கொண்டு முயலுதல் வேண்டும்.

வேண்டிய அளவுக்கு ஆங்கிலப் பயிற்சியுள்ள தமிழ் வித்வான் ஒருவரை உதவிக்கு அமைத்துக் கொண்டால் மேற்கண்ட நோக்கங்கள் யாவும் எளிதில் நிறைவேறும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் மிகுந்த அன்பு வாய்ந்துள்ள தாங்கள் இத்துறையில் பெரிதும் முயன்று ஆவன செய்யுமாறு மீண்டு மொருமுறை தங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

உலகத்தில் நடப்பதென்ன?



என்ன முஸோலினிப் பெருமானே! என்ன யோசிக்கிறீர்கள்? நீங்கள் பிடிக்கிற நாடுகளெல்லாம் 'யகர' வர்க்கத்தில் முடிய வேண்டுமே யென்று கவலைப் படுகிறீர்களா? எத்தோப்பியா ஆயிற்று! அல்பேனியா முடிந்தது; அடுத்தது யூகோஸ்லேவியாவா? கொஞ்சம் உரக்கத்தான் யோசனை பண்ணுங்களேன்!

பழைய தம்பதிகள் தான். ஆனாலும் விவாக ஒப்பந்தத்தை அடிக்கடி ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் தம்பதிகள் யாரென்று சொல்லுங்கள் பார்ப்போம். இருவருடைய பெயரும் 'ப' கரவர்க்கத்தில் தான் ஆரம்பிக்கிறது.

மாஜி கெய்ஸர்: நான்கூட இப்படி **1914** ம் வருஷத்தில் உலக கண்டனத்தைப் பார்த்துச் சிரித்தேன். இப்பொழுது நான் எங்கே யிருக்கிறேன் பார்த்தாயா?

ஜான்புல் எவ்வளவு ஒய்யாரமாக நடக்கிறார்!

—ஒரு ஜெர்மன் கார்ட்டூன்

கிராம வேலை—
சில யோசனைகள்

——தே. ஏகாம்பரம்

அரசாங்கமென்னும் உயரிய கட்டிடத்துக்குக் கிராமங்களே அடிப்படையானவை என்ற தத்துவமும், கிராம வாழ்க்கையின் பெருமையும், கிராம வாசிகளே நாட்டுக் குடிகளிற் பெரும்பான்மையோர்களாக இருக்கிறார்கள் என்ற உண்மையும் சென்ற ஒன்றரை நூற்றாண்டாக மறக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்தியர்கள் சிறுமையுற்றதற்கு இஃதொரு காரணம் என்று கூறாமலிருத்தற்கில்லை. இதுகாலை பண்டை இந்தியாவைக் கிராமங்களிலேயே காணலாம்; பாரத தேவியின் இயற்கை அழகைப் பட்டினத்திற்குப் புறம்பான இடங்களிலேயே பார்க்கலாம். ஹிந்து மதத்தின் உண்மை, கிராமங்களிலிருக்கும் சிறு குடிசைகளில் இன்னும் விளக்கமுற்றிருக்கிறது. பண்டை நாகரிகம், பண்டை ஆசாரம், பண்டை ஒழுக்கம் இவை யாவற்றையும் இப்பொழுதும் கிராமங்களிலுள்ள நதியோரங்களிலும், வயற்புறங்களிலும், வீட்டுத் திண்ணைகளிலும் பரக்கக் காணலாம். அத்தகைய சிறந்த வாழ்க்கை—இயற்கை அரசியின் ஆட்சிக்குட்பட்ட வாழ்க்கை-இப்பொழுது அநாகரிகமாகக் கருதப்படுகிறது. நகரங்களில், நெருக்கமான இடங்களில், சாக்கடையோரங்களில் குப்பை மேடுகளுக்கு அருகில் வசிப்பதே நாகரிகம் எனக்கருதும் காலம் இப்பொழுது நடைபெற்று வருகிறது. பல்வீச்சாலையும் போஜன சாலையும் ஓரிடத்தில் அமைக்கப்பட்டிருத்தலே சால்புடைத்து எனக்கருதி நாம் மகிழ்கிறோம். கிராமவாசிகள் காலையில் எழுந்து, சிறிது வெளிப்புறமாகச் சென்று கைகால் சுத்தம் செய்து கொண்டு வந்தால், அதனைக்கண்டு நகைக்கும் நகரவாசிகள் கணக்கிலர். இங்ஙனம் நகைக்கும் நகரத்தாரையும் நாட்டாரையும் ஒரு தராசில் நிறுத்துப்பார்த்தால் பல உண்மைகள் புலனாகும். பின்னவர் ஒருவர் ஒரு தட்டில் நின்றால், அதற்குச் சரியாக முன்னவர் இருவர் நிற்க வேண்டும். அந்தோ! பரிதாபம்! நடைபிணங்களாக இருந்து நகரத்தில் வாழ்வதையே பேரின்பமாகக் கொண்டிருக்கும் இந்தக் காலம் மாறுநாள் எந்நாளோ?

* * *

ஆரியர்கள், ஆற்றோரங்களிலும், மலையடிவாரங்களிலும், மர நிழலிலும் இருந்தே வேதத்தைப் பாடினார்கள். தமிழ் முனிவராகிய அகத்தியர் பொதிய மலையையே தம் இருப்பிடமாகக் கொண்டார். சிவாஜீ என்னும் சீரியவரசனின் வீரம் வெளிப்பட்டதற்கு அவன் வனங்களிலும் மலைகளிலும் குகைகளிலும் வாசஞ்செய்து வந்ததும் ஒரு காரணமாகும். எனவே, அறிவின் பெருக்கத்திற்கும், ஞானத் தோற்றத்திற்கும், ஆண்மையின் முதிர்ச்சிக்கும் இன்றியமையாதது இயற்கை வாழ்க்கையே என்பது தெள்ளிதிற் புலனாகிறது. கவிஞர், உயர்ந்த மாடிகளில், மின்சார விசிறியின் கீழிருந்து, அழகிய ஆசனத்திலமர்ந்து, தந்தப்பேனாவைப் பிடித்து தங்கவிகளை எழுதினார்களில்லை. புலவர்களின் பெருமை நகரங்களினின்று வெளியாகவில்லை. அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள் இயற்கையில் ஈடு

பட்டு விட்டார்களானால், அவர்களுடைய அறிவு, புலமை, கவி உடனே உள்ளத்தினின்றும் அவர்களை அறியாமலே கிளம்புகின்றன. ஆனால் செயற்கை வாழ்க்கை அவர்களுடைய அறிவை, ஆற்றலை அமிழ்த்தி விடுகிற தென்பதைப் பலர் அநுபவத்தில் கண்டிருக்கின்றனர். இந்தியர்கள், சிறிது காலமாக இயற்கையில் வெறுப்புற்று, செயற்கையில் விருப்பமுற்று வருகிறார்களாதலின் அவர்களுடைய அறிவு, ஆண்மை முதலிய உயரிய குணங்கள் குறைந்து கொண்டு வருகின்றன. இதற்காக நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

* * *

தற்கால நாகரிகத்திற்கு உட்படாத கிராமங்கள் இன்னும் இந்தியாவில் எண்ணில இருக்கின்றன. பிற்கால இந்தியா நல்வாழ்வையடைய வேண்டுமானால், அதற்கு இந்தக் கிராமங்களே உதவிசெய்ய வேண்டும். தற்கால நாகரிகக்காற்று இந்தக் கிராமங்களையும் அலக்கழித்துக்கொண்டு வருகிறது. பண்டைக்காலத்தில் இருந்ததைப்போல், கிராமங்களில் ஒற்றுமை, சகோதர உணர்ச்சி, விருந்தினரை இன்முகத்துடன் ஏற்றல், கிராம காரியங்களை கிராமத்தவரே நிருவகித்துச் செல்லுதல் முதலியன இப்பொழுது அதிகமாகக் காணோம். முன்காலத்தில் கிராமங்கள் மிக்க அழகுற அமைக்கப் பெற்றிருந்தன. அந்த அழகே இப்பொழுது காணோம். வீடு, நிலம் முதலியன உள்ளோர், அனைத்தையும் குத்தகைக்கோ, வாரத்துக்கோ விடுத்து விட்டு, வீட்டையும் பூட்டிக்கொண்டு நகரங்களில் ஒன்றுக்கு இரண்டு குடிக்கூலி கொடுத்து வாழ்ந்துவருகிறார்கள். இன்றும் கிராமங்களில், முக்கியமாக அந்தணர் வசிக்கும் வீதிகளில், பாழ்மனைகளையும் காலி வீடுகளையும் அதிகமாகக் காணலாம். வீதியின் இயற்கை அழகை இவைகள் முதலில் கெடுத்து விடுகின்றன. மற்றும் கிராமங்களில் குடும்பச் சச்சரவுகளும், நீதிஸ்தல வழக்குகளும் இப்பொழுது பெருகிக் கொண்டு வருகின்றன என்று கூற வேண்டும். கிராமங்களில் வசிக்கும் பல சாதிக்குள்ளும் ஒற்றுமை உணர்ச்சி சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டுவருகிறது. இவைகள் யாவும் சீர்படுத்தப்பட வேண்டும். முற்காலத்தில் கிராமங்களில் அநேக பஞ்சாயத்துகள் இருந்தன. ஒவ்வொரு பஞ்சாயத்தும் குறித்த சில வேலைகளைச் செய்துகொண்டு போயின. இதனால் கிராமவாசிகளுக்குள் எவ்வித பிணக்கும் இல்லாமலிருந்தது; கிராமத்தின் வளமை விருத்தியடைந்து கொண்டு வந்தது. முற்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் சுயராஜ்யத்தைப் பெற்றிருந்தது என்று கூறலாம். இப்பொழுது—?

* * *

ஆதலின் கிராமங்களைச் சீர்திருத்தி அவைகளிடையே சென்று அரசியல் பிரசாரம் செய்யவேண்டுவது ஒவ்வொரு தேச ஊழியருடைய முக்கிய கடமை. கிராமங்களைத் தட்டி எழுப்பினாலன்றி நம்முடைய அரசியல் நோக்கம் நிறைவேறாது. பட்டினத்துப் பெருமக்களை முன்னே கொண்டு ஆரவாரத்துடன் பேசினால், அவர்கள் கைகொட்டுவதனாலுண்டான சப்தமே நமக்குப் பிரதிப்பிரயோஜனம். ஆனால் கிராமங்களில் சென்று அமைதியாக வேலை செய்தால் அரசியல் துறை செழுமையுறும்; இராஜீய வாழ்வு பண்படும். பட்டினத்தாரைச் சீர்திருத்த வேண்டுமானால் முதலில் கிராமத்தாரை நம் வசப்படுத்த முயல

வேண்டும். ஆதலின் அரசியற்காரர், முதலில் தங்கள் கவனத்தைக் கிராமங்களின் மீது செலுத்துவாராக. அதற்கான சில யோசனைகள் வருமாறு:—

மாகாணக் காங்கிரஸ் சபை, தங்கள் மாகாணத்தைப் பல தொகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பிரசாரகர் வீதம் நியமனம் செய்யவேண்டும். இங்ஙனம் நியமிக்கப்படும் சிறு பகுதி உத்தியோகஸ்தர்களுக்கு மேற்பார்வை செய்ய பல தொகுதி உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு மேலாக மாகாணாதிகாரியும் அவருக்கு உதவியாகச் சில உத்தியோகஸ்தர்களும் இருக்கவேண்டும். இந்த முறை யல்லாது வேறுமுறையாக உத்தியோகஸ்தர்களை நியமித்தாலும் சரியே. ஒவ்வொரு சிறு பகுதி உத்தியோகஸ்தர் வசமும் சுமார் இருபத்தைந்து அல்லது முப்பது கிராமங்கள் இருக்கலாம். இந்தக் கிராமங்கள் நல்லுணர்வு பெற்றுத் தேச வாழ்வில் ஈடுபடுவதற்கு அந்த உத்தியோகஸ்தரே பொறுப்பாளியா யிருக்க வேண்டும். இங்ஙனம் கிராமங்களில் சென்று உழைக்கும் உத்தியோகஸ்தர் மாகாணக் காங்கிரஸ் நிதியிலிருந்து பெறும் ஊதியத்தைத் தவிர வேறெவ்வித வருவாயையும் எதிர்பார்க்க கூடாது. பூமாலையையும், ஊர் வலத்தையும், கரகோஷத்தையும் இவர்கள் அறவே வெறுத்துவிடவேண்டும். கிராமப்பிரசாரகர் சாந்தமாயும், அமைதியாயும், பொறுமையாகவும் இருந்து வேலை செய்யவேண்டும். இவர் முதலில் கிராமத்தார்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்கவேண்டும்; சாதிப் பகைமை, சமயப் பகைமை, வகுப்புப் பகைமை முதலியன அடியோடு ஒடும்படி செய்யவேண்டும். கிராமத்தில் ஏற்படும் சில்லறைச் சச்சரவுகளைக் கிராமத்தாரைக் கொண்டே நீக்க வேண்டும். கிராமத்துக்குத் தேவையான விளைபொருள்கள், துணிகள் முதலியவைகளவற்றை அந்தக்கிராமத்திலேயே செய்துகொள்ளும்படியான சக்தி கிராமத்தாருக்கு உண்டாகும்படி பிரயத்தனப்படவேண்டும்.

உதாரணமாக சுதேசியம் வலுவடைய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஒவ்வொரு கிராமத்தாரும் தங்களுக்கு வேண்டிய ஆடைகளைத் தாங்களே செய்து கொள்வார்களானால், நாட்டில் துணிப் பஞ்சமே உண்டாகாது. இங்ஙனமே, அந்தந்த கிராமத்தார் தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்து கொண்டார்களானால், பொருள்களின் விலை இவ்வளவு அதிகமாக உயர்ந்து விடாது. இவைகளை யெல்லாம் செய்து கொள்ளும்படி மேற்கூறப்பட்ட கிராமப் பிரசாரகர் கிராம ஜனங்களைத் தூண்டவேண்டும். பிரசாரம் என்றால் ஆங்கில அரசாங்கத்தாரையும் அதிகார வர்க்கத்தினரையும் தூஷிப்பதென்று கொள்ளற்க. ஒவ்வொரு கிராமத்து ஜனங்களும் பிறருதவியை எவ்விதத்திலும் நாடாமல் தம்மையே தமக்குதவி யெனக் கொண்டு வாழ வேண்டியதற்குரிய வழிகளைச் செய்ய வேண்டுவது இந்தக் கிராமப் பிரசாரகரின் முக்கிய கடமையாகும். முதலிற் கூறப்பட்டவாறு, கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தி, அந்தப் பஞ்சாயத்துகளைப் பல பிரிவுகளாகப் பாகுபடுத்தி ஒவ்வொரு பாகத்தாருக்கும் சிலவேலைகளைப் பொறுப்பாகக் கொடுத்து நடத்திவரும்படி செய்ய வேண்டும். இந்த விஷயங்களில் முற்

காலத்து கிராம நிருவாக முறையைத் தற்காலத்திற்கேற்றவாறு சிறிது மாற்றம் செய்துகொண்டு அநுசரிக்கலாம். பண்டைக்காலத்து கிராம நிருவாக முறையைச் சாஸனங்களில் பரக்கக் காணலாம்.

கிராமப் பிரசாரகர், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடத்தையும், ஒரு வாசகசாலையையும், புத்தக சாலையையும் ஏற்படுத்த முயலவேண்டும். முதன்முதலாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் இவைகளேயாகும். கிராமப் பள்ளிக்கூடங்கள் தேசிய முறையிலேயே நடத்தப்பெற வேண்டும். பிற்காலத்தில் மாணவர்கள், உண்மையான இந்தியர்களாக வாழ்வதற்குரிய படிப்பையே அவர்களுக்குச் சொல்லிகொடுக்க வேண்டும். வாசகசாலைகளிலும், புத்தக சாலைகளிலும், உயர்ந்த பத்திரிகைகளும் சிறந்த நூல்களும் சேமித்து வைக்கப்படவேண்டும்.

மேற்கூறப் பட்டவைகளுக்குப் பணம் வேண்டுமேயென்று சிலர் வினவலாம். தங்கள் கிராமத்துச் செலவுகளுக்கு வேண்டிய பணத்தை அந்தந்தக் கிராமத்தாரே பங்குபோட்டு வசூலித்துக்கொள்ள வேண்டும். இது முதலிற் சிறிது கஷ்டமாகவே தோன்றும். ஆனால் பின்னால், இவைகளினால் ஏற்படும் நன்மைகளைப் பிரசாரகர், கிராம ஜனங்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். கிராம ஜனங்களுக்கு, இந்த வரியினால் அதிக கஷ்டம் உண்டாகாது. அவர்கள் தற்கால நாகரிகப் பழக்கத்தினால் உண்டாகும் சில கொடுமைகளுக்கு உட்படாதிருப்பார்களானால், இந்த வரியைச் செலுத்துவது அவர்களுக்குக் கஷ்டமாகத் தோன்றாது.

கிராமப் பிரசாரகர், மேற்பட்டவாறு ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்து விட்டு, தமது அதிகாரத்திலுள்ள கிராமங்களைத்தினமொன்றுக்கு ஒரு கிராமமாகச் சுற்றுப் பிரயாணம் செய்துவர வேண்டும். இங்ஙனமே மாதத்துக்கொருமுறை ஒவ்வொரு கிராமத்தையும் மேற்பார்வை செய்து கொண்டுபோனால் கிராமங்கள் எளிதில் பண்பட்டு விடும் என்பதில் ஐயமில்லை. இந்தக் கிராமப்பிரசாரகரின் வேலையை மேற்பார்வை செய்வது தொகுதி உத்தியோகஸ்தருடையகடமையாகும். இந்தத்தொகுதி உத்தியோகஸ்தர்கள், தாங்கள் விஜயம் செய்யும் கிராமங்களில் ஏதேனும் குறைகளிருந்தால் அவைகளைப்பரிகரிப்பதுடன், அவ்வப்பொழுது ஏற்படும் இராஜீய சம்பவங்களையும் பிரசங்கங்கள் மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.

இங்ஙனம் தொகுதி உத்தியோகஸ்தர்களின் வேலையை மாகாணாதிகாரி தம் உதவி உத்தியோகஸ்தர்களைக் கொண்டு மேற்பார்வை செய்துவர வேண்டும். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு தலைவர் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தத்தலைவருக்கு ஆலோசனை சொல்ல, ஒரு நிருவாகசபை இருத்தல் வேண்டும். இந்த நிருவாக சபை அங்கத்தினர், மாகாணத்தின் பொதுப்படையான வேலைகளைப் பல இலாகாக்களாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வோர் இலாகாவையும் ஒவ்வோர் அங்கத்தினர் மேற்பார்வைசெய்துவர வேண்டும். உதாரணமாகச் சுதேசிய வேலையை ஓர் அங்கத்தினரும், தீண்டாமை விஷயத்தைப்பற்றிக்கவனிக்க ஓர் அங்கத்தினரும் இருக்கலாம். இங்ஙனமே மற்ற அங்கத்தினர்களுக்கும் வேலைகளைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

மனிதனின் அந்தரங்க மாளிகை

—மு. முத்து வீரப்பன்
B.A., L.L.B.,

நன்மை--தீமை, சீதம்--உஷ்ணம், இரவு-பகல் என்ற எதிர்மறைப் பொருள்கள் பரஸ்பரம் இருப்பது போல மனிதனுக்கும் உள்ளும் புறமும் மாறுபட்ட தன்மையதாக இருக்கிறது. பொதுவாக மனிதர்கள் எல்லோரும் உருவத்தில் வெளிப்படையாக நாம் காண்கிறபடி இல்லையென்பதும் உள்ளத்தின் உள்ளே வேறு மனிதர்களாகவே இருக்கிறார்களென்பதும், இக் காரணத்தினாலேயே ஒவ்வொருவரும் புதிதாக மற்ற யாருடனும் வியவகரிக்கும்போது மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதும், ஒவ்வொருவரும் உள்ளும் புறமும் ஒன்றாக இருக்க ஆசை கொண்டு பாடுபட வேண்டுமென்பதும், ஒழுங்கு தவறாது நடத்தலால் ஆயுசு விருத்தி யென்பதுமே நாம் இங்கு ஆராய்ச்சி செய்யப் புகும் விஷயமாகும்.

மனிதன் அன்றி மற்றைய எல்லா ஜந்துக்களும் மனதில் கரவடமின்றி இயற்கையின் உணர்ச்சியை அநுசரித்து நடக்கின்றன. முன்பின் காரியங்களைச் சற்றும் அவைகள் கவனிப்பதில்லை. அறிவு வளர்ச்சிக்கு, விசாலமான இடமும் சாதனங்களும் அவைகளுக்குக் கிடையா. மனிதனுக்கோ எல்லாச் சாதனங்களும் இறைவன் கருணை கூர்ந்து நன்மைக்காக அருளியிருக்கிறார். அவைகள் சரியாக உபயோகிக்கப் படுகின்றனவெனத்திட்டமாகச் சொல்ல முடியவில்லை. மனதை எந்த விதமான கருவியினாலும் அளவிட முடியாததாக இருக்கிறது. வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும், முகத்தோற்றத்தினாலும், ஓரளவு மனதின் உள்நிலை அறிகுறியால் உணரப்படுகிறது. இந்த மனத்தின் உள்தோற்றத்தையுங் கூட, முதல்தர சாதுர்யம் வாய்ந்த மனிதர்கள் மறைத்து மாறு வேஷமாக நடிக்கச் சக்தி யுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தக்கபட சக்தியை மனிதனன்றி, மற்றப் பிராணிகள் பெறவே யில்லை எனத் திட்டமாகச் சொல்லலாம். மனிதன் மனோநிலையைப் பலவருஷங்கள் உடன் பழகியறிவதே கடின மென்றால் பாடத்தில் படித்தறிய முடியுமோ? பல புத்திரர்களைப் பெற்றெடுத்த தம்பதிகள் ஒருவருக்கொருவர் மனதை முற்றிலும் அறிந்து கொள்ளாமல் அநேக மாறுபட்ட விஷயங்களை ஆயுள் பரியந்தமும் மனதின் இரகசிய மாளிகையின் ஓர் அறையில் புதைத்து வைத்திருக்க ஹேதுவாயிருக்கும் மனிதனுடைய சக்தியின் பலந்தான் என்ன?

அநேகமாக மதத்தின் பாதுகாப்பளர்களாக விளங்க விரும்பும் மதாச்சாரியர்கள், சன்னியாசிகள் முதலானவர்களின் பிரதானமான தன்னேயும் தன் ஹிதத்தைக் கோரும் சிஷ்ய பரம்பரைகளேயும் போஷிப்பதும், அச்சீடர்கள் எல்லோரும் சேர்ந்து தன்னேப் பூஜிக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பதுமானபொதுக்கொள்கையை மனிதன் அந்தரங்க மாளிகையில் மறைத்து வைத்து, தான் உலக உபகாரியென்றும் மதத்தை நிலே நாட்டக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகவும் நடித்துக் காட்ட இடங் கொடுத்தும், இதைச் சாதாரண மனிதர்கள் எத்தனேயோ வருஷங்கள் கூட இருந்து பழகினும் காண முடியவில்லே என்ருல் அம்மனதின் சக்தி எவ்வளவு மகத்தானது? பெரும் வல்லரசுகளும் சுய நலமாக உள்ளொன்று வைத்துக் கொண்டு வெளிப் படையாக பிரஜைகளுக்கு நன்மை செய்வதாகப்பறை யறைதலே ஜனங்கள் நம்பச் செய்தலும், அதை இரவும் பகலும் உடன் கூடி உசாவும் மற்றைய மந்திரிப்பிரதிநிதிகளும் கூட அம்மன மாளிகையில் இருக்கும் களங்கமான விஷயங்களே உணரவிடாது, தோற்றம், வாக்கு செய்கைகளேச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு மாற்றிக் கொள்ள இடம் தரும் மனதின் சக்தியை எக்கருவியாலும் அளக்கக் கூடுமோ? கலாசாலேகளில் மனே தர்மத்தை அறியும் கல்வியை எவ்வளவோ பாடுபட்டுப்போதிக்க முயற்சித்திருக்கிருர்கள். ஆயினும் இதனுல் அடையும் பலன் மட்டும் சந்தேகந்தான். போதகரே, தன் மனதை வஞ்சித்துவிடுகிருர். இவ்வுலகத்தின் க்ஷேமத்திற் காகவோ, நாசத்திற் காகவோ ஒருவர் மனதை மற்றவர் அறியும் சக்தியை ஈசன் ஜனங்களுக்குக் கொடுத்து வைக்க விரும்பவில்லே என நினேக்க வேண்டியிருக்கிறது.

ஒருவர் மனதை மற்றவர் இன்று அறிய முடியுமாளுல் எவ்வித மோசமும் உலகில் இருக்க இடமிராது. ஒவ்வொருவரும் எதிரிகளின் நோக்கத்தை உற்று நோக்கி முன் எச்சரிக்கையாக இருந்து நிச்சிந்தையாக உயிர் வாழ எவ்வளவு சௌகர்யமாக இருந்திருக்கும்? வியாபார விருத்திக்காக கடன் கேட்கும் போதே இதற்கு முன் இவ்விதம் பலரிடமும் வாங்கி வறுமைக் காலத்திற்காக சேமித்து வைத்திருக்கும் பெருந் தொகையை நாம் உடனே கண்டு கொள்ளலாமல்லவா? ரூபாய் பதினுயிரம் செலவானுலும் சரி; நான் நகர பரிபாலன சபையில் அங்கத்தினராக வந்து தொண்டு புரியத்தான் செய்வேனென்று சொல்லும் போதே, அவர் உள்ளத்தில் அங்கத்தினரா யிருந்து இருபதினுயிரம் சம்பாதித்துவிடக் கொண்டுள்ள தீர்மானத்தையும் நாம் கண்டு விடலாமல்லவா? தேவாலயம் மடாலயங்களே ஸ்தாபிக்க திரவியம் கேட்கும் போதே, சுவாமிகள் தனக்கும், தன் சிஷ்ய வர்க்கத்திற்கும் ஒரு வரையும் எதிர்பாராது சௌகர்யமும் ஸ்திரமுமான வழியில் சுதந்திரத்துடன் இடம், பொருள், ஏவல் என்றும் இருந்து வரத்தேடும் மூலதனமென நாம் அறிந்து கொள்ளலா மல்லவா? உண்மையான பெரியோர்களுக்கும் அறிவாளிகளுக்கும் தகுந்த மரியாதை செலுத்த உலகம் தயங்காது. நாம் ஒவ்வொரு புது மனிதனுடனும் பழகும் போது முற்றிலும் பரீட்சித்து அறிந்து பெரியோரெனத் தீர்மானத்திற்கு வராத வரை அவர்களே நம்பி

விடக்கூடாது. நம்மினால் பின் வருந்தவும் நேரும். ஒவ்வொரு முறையும் புத்தி கற்றுக் கொள்ளுவதற்காகச் செலவிட நம்மிடம் திரவியமும் இராது.

மனதில் தோன்று வதை உள்ளதை உள்ளவாறே சொல்வதினாலும் நடப்பதினாலும் சரீரத்தில் பிரதான கருவியான ஹிருதயமானது மிகுந்த சந்தோஷத்தை யடைகிறது. இதனால் ஆயுள் விருத்தி யுண்டாகிற தென்பதை மறுக்க முடியாது. தன் காரியத்தைச் செவ்வனே செய்வதில் அதற்குச் சிறிதும் கஷ்டமுண்டாகிற தில்லை. சீக்கிரம் பலஹீனமடைகிற தில்லை. மனிதன் தன் அறிவின் வல்லமையால் உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று செய்யும் குட்ரயுக்தியை மனதின் மாளிகையில் புகவிடுவதனாலும், தீங்கு விளைவிக்கும் நூதன பிரச்னைகளை மனதில் ஆராய்வதினாலும் ஹிருதயம் மிகவும் முறுக்கேறி துடி துடித்தும், அதனால் மூளையில் கொதிப் பேறியும் நாளடைவில் வாய்களிலும் நுழையாத புதிது புதிதான வியாதிகளால் பீடிக்கப்பட்டு மனித வர்க்கத்தையும் அனுபவிக்க விடாமல் அகால மரணத்திற்குள்ளாக்கி விடுகிறது நமது நாகரிகக்குயுக்தி.

மற்ற மிருகங்களாகட்டும், பறவைகளாகட்டும், எந்தவிதமான வீடுவாசல்களும், மூலதனங்களும், கல்லூரிகளும், வைத்திய சாலைகளும் இன்றியே அதன் முழு வயதும் சௌக்யமாக இருந்து காலங்கழிக்கும் போது எல்லாச் சாதனங்களுடனுமுள்ள மனிதன் மட்டும் இவ்விதம் சீக்கிரம் அழிந்து போவதென்பது பரிதாபமாக இல்லையா? இவைகளுக்குக் காரணம் நேரான் எண்ண மின்மையும், ஒழுங்கான நடத்தை யின்மையும் ஆராய்ந்த ஸ்திரபுத்தி யின்மையும் தன் மனதையே வஞ்சித்து ஹிருதயத்தை பல ஹீனப்படுத்துவதுமே யன்றி வேறு என்னவா யிருக்க முடியும்? நமது நண்பன், சன்மார்க்க பந்து முதன் முறை ஒழுக்கத்தில் தவறி விட்டான். உடனே மிகவும் வருந்தினான். தன்னையே சபித்துக் கொண்டு சகஸ்ர நாம அர்ச்சனைகளைச் செய்து இனி ஒரு நாளும் தவறுவதில்லையென நிச்சயம் செய்து கொண்டான். பின் சில மாதங்கள் கடந்த பின் அக்குற்றத்தையே தான் பல தடவைகள் செய்திருப்பதைக் கண்டு மிகவும் வருந்தி 'இனி ஜனவரி மாதம் முதல் தேதி முதல் நான் மிகவும் கண்டிப்பாக இருப்பேன்; ஒரு கிஞ்சிற்றும் வழுவ மாட்டேன். இந்தச் சாத்தான மனதுடன் ஒரு கை பார்த்துத்தான் விடுவேன்' எனச் சபதம் செய்து கொண்டான். 1935ம் வருஷத்தில் அவனுக்கு வயது ஐம்பது ஆன போது அக்கெட்ட குணங்கள் அவனிடத்திலும் அவன் நண்பர்களிடத்திலும் நிரந்தரம் பரவியிருக்கக் கண்டு, 'ஐயோ கடவுளே, இந்த ஜன்மம் போனது சரி; இனி அடுத்த ஜன்மத்திலாவது என்க்கு ஒரு நல்ல பிறவியைத் தந்து காப்பாய்' என ஈசனை வேண்டினான். நம் நண்பன் சன்மார்க்கனென்றால் இம்மனதின் சக்தியை என்னவென்று சொல்வது? சென்ற தூர்ச் செய்கைகளைக் குறித்து வருந்தி ஓர் சிறிதாவது பச்சாதபப்படும் குணம் ஓர் மனிதனிடத்தில் இருக்கும் வரை, அவன் மனச் சாட்சி என்ற மந்திரிக்கு இன்னும் சற்று உயிர் இருப்பதாகவே கொள்ள வேண்டும். தீவிர புத்தியுடன் தெய்வ நம்பிக்கை யென்னும்

அங்குசத்தால் மனயானையை நல் வழிக்குத் திருப்பிவிட முடியும்.

மனச்சாட்சி, ஈசனின் சார்பாக மனிதர்களின் மனதில் வைக்கப்பட்டிருக்கும் பிரதிநிதியாகும். அம் மனச்சாட்சியானது சந்திரனைப் போன்றது. பாலர்களின் மனதில் எவ்வித மாசுமின்றி பரிசுத்தமாக இருக்கிறது. தினே தினே உலக விஷயங்களில் ஈடுபட்டு அவைகளில் பரவியிருக்கும் மாசுக்களின் சாயம் ஏற—ஏற அந்த மனச்சாட்சியானது கரிப் பிடிக்க ஆரம்பிக்கிறது. பின் ஒரு காலத்தில் முற்றிலும் அமாவாசை இருட்டாகித் தீயவழியில் செல்லும் போது இடித்துரைக்கும் சக்தி முழுவதும் யிழந்து இவனைப் பரம் பரைக் குற்றவாளியாக்கி விடுகிறது. அன்னவனுக்குக் கொலைகளவு முதலான பஞ்சமா பாதகங்களுங்கூட சில காரணங்களால் நியாயமெனத் தோன்றும். கொலை யென்பதும் அதிகாரி—சந்தர்ப்பங்களையும் அனுசரித்து தோஷமில்லை யென்றும், உணவுப் பொருள்களில் தாவர பதார்த்தங்களுக்கும் பிராணிகளைப் போல் உயிர் இருப்பதால் பிராணிகளும் மனித னுணவுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டன வென்றும், வயதின் தர்மத்தையும் அஹிம்சா தர்மத்தையும் நோக்கும் போது விபசாரமும் பாபமில்லை யென்றும், ஆத்மா வேறு சரீரம் வேறு என்பதை ஆராய்ந்தறியும் போது நெருப்பின் மேல் ஈபோல பாபம் அணுகவே அணுகாதென்றும் வாதிக்கிறார்கள். மனச் சாட்சியைக் கொன்ற மனிதர்கள், கடவுளுக்குப் பயந்து குற்றம் செய்யாதவர்கள் ஆயிரத்தில் ஒன்று இருப்பார்களா என்பது கூடச் சந்தேகம். குற்றத்தைக் கண்டு கொண்டால் பொது ஜனங்கள் ஏளனம் செய்வார்களே, அரசாங்கம் தண்டனை விதிக்குமே எனப் பயந்து மட்டும் சிறிது தயங்குகிறார்கள். இவர்கள் கடவுளை நினைத்துத் தொந்தரவு படுவதே இல்லை.

சுய நலப்புத்தி மனித சுபாவம். இது ஒவ்வொருவருக்கும் உண்டு. பெரியோருக்கும் சிறியோருக்கும் வித்தியாசம் அப்புத்தியின் அளவில் தான். காமினி, காஞ்சனம் என்ற பேய்கள் மனிதர்களைப் பிடிக்கவே செய்கிறது. விருத்தியானால் துக்கமும் திருப்தியானால் சுகமும் உண்டாகிறதெனக் கூறுவதிலும் நிரம்பிய உண்மையுண்டு. இவ்விஷயங்களை ஸ்திரமாக ஆராய்ந்து ஓர் எல்லைக்குள் தன் மனோ விருத்தியை கட்டுப் படுத்தி வைக்க வேண்டும். பிறருக்கு நன்மை பயப்பதனால் செய்பவனுக்கும் நன்மை யென்பது ஒரு புறமிருக்க, இவனைப் பார்த்து மற்றவர்களும் நன்மையோ தீமையோ இரண்டும் தொத்து வியாதியைப் போன்றே பரவும் தன்மையது. ஒவ்வொரு செய்கைக்கும் ஓர் லக்ஷியமும் உத்தம காரணமுமாயிருப்பது சாலச் சிறந்தது. தற்புகழுக்காக மட்டும் ஒருவன் ஒரு காரியம் செய்வதென்பது தவறாகாது. புகழுக்காகக் காரியம் செய்வதென்பதும் ஓர் பெரும் குணத்தைச் சார்ந்தது. புகழுக்காக வேலை செய்கிறவர்கள் தாங்கள் செய்யும் காரியாதிகளின் பிரதிபலனை உடனே எதிர்பார்க்கிறார்களென்பதைத் தவிர வேறில்லை.

எல்லாம் முன் வினைப்படியேதான் நடக்குமென்றும் மனிதன் முயற்சியால் தன்னைச் சீர்திருத்திக் கொள்ள

முடியாதென்றும் சிலர் சொல்லும் வாக்கியம் ஓர் சிறந்த உண்மையுடைய தென்றோ, அல்லது அதனால் உலகிற்கு நன்மை யுண்டாகுமென்றோ எந்த அறிவாளியும் ஆமோதிக்க முன் வர மாட்டான். அறிவுக்கு எட்டும் எல்லா விஷயங்களுக்கும் மூல காரணனை ஓர் ஈசுவர சக்தி இருக்கவே இருக்கிறது. இது எந்த ஒரு சாராருக்கும், மதத்தினருக்கும், தேசத்தினருக்கும் பிரத்தியேகமாகச் சொந்தமென்பதின்றி சர்வ ஜந்துக்களுக்கும் பொதுவில் சமத்துவத்துடன் இருந்து வரக்கூடியது. இச் சர்வ வல்லமையுள்ள சக்தியில் ஓர் திட நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் வர வேண்டியது அவசியம். இதனால் மகத்தான நன்மைகள் உண்டு. இச் சக்தியின் ஒரு அம்சமே ஜீவராசிகளின் உள்ளத்திலும் நின்று தவுகிறது. இந்தச் சக்தியானது நாம் நினைக்கும் ஒவ்வொரு காரியங்களையும் செய்யும் ஒவ்வொரு செயலையும் காண்கிறதென் பதை நாம் மறந்துவிடக் கூடாது. பொது ஜனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் பயந்து நடப்பதைவிட இச் சக்திக்குப் பயந்து நடக்கக் கற்றுக் கொண்டால் வேறு சம்பத்து ஓர் உத்தமனுக்குத் தேவையில்லை. ரகசியமாகச் செய்யும் கிருத்தியங்களிலெல்லாம் பெரும்பாலும் பாவம் என்பது கலந்தே இருக்கிறது. இச் செயல்களை இந்த மனச் சாட்சி என்ற புருஷன் தவிர யாரும் காண முடியாது. அப் புருஷனுடம்பில் களிம்பு ஏறிவிடாமல் தினமும் துடைத்து அம்மனச் சாட்சியைப் பளிங்கு போல் வைத்திருத்தல் பெரும் உதவி தரும். தினம் ஒரு முறை ஏகாந்தமான இடத்தில் அமர்ந்து அன்று செய்த நன்மை தீமைகளைப் பற்றி ஆலோசித்து தீச்செயல்களைத் தடுக்க முயலுதல் பெரும்பலனளிக்கும். பேரறிவாளிகளிடமும் கூட சிறு குற்றங்கள் இருப்பது ஆச்சரியமில்லை. அவைகளை அகற்றும் முயற்சியிலிருக்க வேண்டும். தன் குற்றத்தை உண்மையில் ஒப்புக்கொள்வதென்பதும் ஓர் சிறந்த குணம். நாம் செய்த பாபத்திற்கோ குற்றத்திற்கோ வருந்தினால் மட்டும் போதாது. உண்மையில் வருந்துவதற்கு அறிகுறி அக் குற்றங்களை மீண்டும் செய்யாதிருப்பதே யாகும். புதியவர்களுடன் மிக எச்சரிக்கையுடன் பழகினால் அவர்கள் நம்மை ஏமாற்ற முடியாது. தீயகுணமும் நம்மை அணுகாது. நேரான வழியில் நடந்து சந்தோஷமாக இருப்பதுதான் எந்த மனிதருக்கும் மிக சுலபம். தேகத்திற்கும் ஆரோக்கியம். ஆனால் ஆரம்பத்திலிருந்தே இத்தீய குணங்களில் பழகி விடுவதனாலும் பொது ஜனங்களில் பெரும்பாலோர்களும் இத்தீய குணங்களையே கைக்கொண்டு உலவுவதாலும் புதிதாக நற்குணங்களை யனுசரித்து நல் வழியில் நடப்பது சிரமம் போலத் தோன்றுகிறது. உண்மையோ இதற்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. ஒருவன் அஹிம்சா தர்மத்தையும் கடைப்பிடித்து ஈசனுக்குப் பயந்து நேரான வழியிலும் நடந்து உள்ளும் புறமும் ஒருவனயிருந்தால் அவன் ஹிருதயம் நூறு ஆண்டுகளுக்கும் பலம் குன்றாதிருப்பது ஆச்சரியமே இல்லை. நாம் எவ்வளவு தூரம் இத்துறையில் முயற்சித்து முழுப்பயனடைவோம்?

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

—சங்கர குமாரன்

அருட் செல்வம் பொருட் செல்வ மனச் செல்வம் இருவகைப் படும். இவற்றுள் பொருட் செல்வம் இவ்வுலக விவகாரங்களுக்கு இன்றி யமையாதது. 'அருளில்லார்க் கவ்வுலக மில்லை, பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை' என்னும் பொய்யா மொழியே இதற்குச் சான்றாகும். பொருளில்லாதவர்கள் இவ்வுலகத்து இன்பங்களை யனுபவிக்க முடியா தென்பது ஏற்பட்டது. இதனால் பொருட் செல்வத்துப் பெருமையைச் சிலர் பெரிதும் பாராட்டுவர். பொரு ளுண்டானால் எவரையும் ஏவல் கொள்ளலாம்; எதனையும் இயற்ற லாம்; எக்காரியத்தையும் சாதிக்க லாம்; உலகத்தை ஆளலாம் என்று எண்ணுவார் பலர். உண்மையில் இவ்வளவு பெருமை இதற்கு உண்டோ வென ஆழ்ந்து நோக்கின் இல்லை என்பது புலப்படும். தக்க சீரியரிடத்து மாத்திரமேயல்லாமல் இழிவுபட்ட பூரியரிடத்தும் பொருட் செல்வம் இருக்கக் காண்கிறோம். இந்தக் காரணத்தால் பொருட் செல்வத்திற்கு ஏற்படும் சிறுமை ஒருவாறிருக்க, இதனாற் சாதிக்கக் கூடிய காரியங்களும் மிக அற்பம். பொருட் செல்வத்தினால் உலகை ஆள்வது பொய். பொருளைக் கவர்தற் பொருட்டு ஜனங்கள் தற்காலம் செல்வவானுக்கு வசப்பட்டாற் போல நடிக்கிறார்களே யல்லாமல், உண்மையில் வசப்பட்டவர்களல்லர்; இச் செல்வவான் ஜனங்களை ஆள்கிறதில்லை.

உயிர்களிடத்து அன்பு கொண்டு, அவைகளைக் காப்பாற்றி, அவ்வறத்தால் மேம்படுதலே அருளால் வருஞ் செல்வம். இவ்வருட் செல்வம் செல்வத்துட் செல்வ மென்னும் பெருமையுடைத்து. உயிர்களைக் காப்பாற்றுதலாவது, அவைகளுக்குரிய துன்பங்களைந்து இன்பம் விளைவிப்பதேயாம். இஃது வல்லாராலும் சாதிக்கத்தக்க காரியமன்று. துன்ப மூலங்களை ஆராய்தற்கும், பரிகாரம் தேடுவதற்கும் அதிசயமான புத்திக் கூர்மை வேண்டும். உயிர்களிடத்துப் பேரன்பினாலே ஒருவன் இத்துறையில் உழைப்பான். மதியின் வலியால் உலக தத்துவத்தை ஆராய்ந்து, இன்ப துன்பங்களுக்கு மூலகாரணங்களைத் தேடித் திரிந்து, பிராணி கோடிகளிடத்து அன்பு மிகுந்து அக்காரணங்களைத் தாம் கண்டவாறு எடுத்து உரைப்பதே அருளாளன் செய்யுங் காரியமாம். இந்த மதி வலியே உண்மையில் உலகத்தை யாள்கின்றது; ஜனங்களின் மனத்தை இயக்குகின்றது; அரசியல் முறைகளை விதிக்கின்றது;

நியாயா நியாய விவகாரங்களை அமைக்கின்றது; ஜனசாரங்களை ஒழுங்கு படுத்துகின்றது. இவ்வாறு ஜனங்களின் அபிப்பிராயங்களை மாற்றவும் கொள்கைகளைத் திருத்தி யமைக்கவும் சக்தி வாய்ந்த மதிவலியே, உலகத்தை ஆளுகிறதெனச் சொல்லவும் வேண்டுமோ? எளியவராயினும் மதி வலி மிக்கவரே மாண்புடையவர் என்பதற்குக் காட்டாக ஹெர்பர்ட் ஸ்பென்ஸரைச் சொல்லாம்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

இவர் கி. பி. 19-ம் நூற்றாண்டில் விளங்கிய தத்துவ ஞானிகளுள் முதன்மையானவர். இவருடைய ஞான விசேஷம் மிக்க இளம் பிராயத்தே விளங்கியது. திருஞான சம்பந்த ஸ்வாமிகள், மெய்கண்ட தேவர் முதலியோர் அதிபாலியத்திலே அற்புதமான புலமையும் புத்திக் கூர்மையும் காட்டினார்கள். என்பதைச் சங்கிக்கும் நவநாகரீகர்கள், பாடசாலையே யறியாத இவருடைய இளமை மதி நுட்பத்தையும், கல்வித் திறமையும், தத்துவ ஞானத்தையும் சிறிதும் சங்கிக்காமல் ஏற்று இவரை ஏத்துகிறார்கள். ஏறக்குறைய ஐம்பது வருட காலம் தத்துவ விசாரணையிலமர்ந்தவராய் இவர் 1903ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் மரண மெய்தினர். அப்போது இவருக்கு வயது 83. விருத்தாப்பியராயினும் இவர் நோயினால் வருந்தவில்லை; மரணத்தறுவாயினும் நல்ல ஞாபகத்திலாழ்ந்திருந்தார்; மதி சிறிதும் மயங்க வில்லை. இவர் இறந்து போமுன் வேண்டிக் கொண்டபடி இவருடைய உடம்பு (புதைக்கப் பெருமல்) தகனஞ் செய்யப் பெற்றது. இவர் ஆக்கிய நூல்கள் பல; இவருடைய பெயர் அறியாத கலைஞர் அரியர்.

இளமைப்பயிற்சி

இவர் 1820ம் வருஷம் ஏப்ரல் மாதம் 27ந் தேதி டெர்பி நகரத்திற் பிறந்தவர். இவருடைய பிதாவுக்கு வாத்திமைத் தொழில். இளம் பிராயத்தில் இவர் பூச்சிகளைப் பிடித்து வைத்து, அவை உருவம் மாறுவதைக் கவனித்து வந்தனர். பதின் மூன்றும் வயது வரையில் இவர் தந்தையினிடம் கற்று வந்து, பின்னர் மூன்று வருடம் சிற்றப்பனிடம் கல்வி பயின்றனர். சிற்றப்பனாகிய பாதிரியினிடம் இளைஞர் கணிதம் நன்கு கற்றனர். பெற்றப்பன் சிற்றப்பன் ஆகிய இருவரிடம் கற்றதைத் தவிர வேறு பாடசாலைகளி லாயினும் கல்லூரிகளிலாயினும் ஸ்பென்ஸர் வாசித்ததில்லை.

உத்தியோகம்

பதினாரும் ஆண்டில் இவர் நிளவளவை சம்பந்தமான தொரு விஷயத்தை 'சிவில் எஞ்சினீயர்' (Civil Engineer) என்னும் பத்திரிகையில் நிரூபித்தனர். அடுத்த வருடத்தில் (ஸர் சார்ல்ஸ் பாக்ஸ்' (Sir Charles Fox) என்பவருடன் இவர் லண்டன் பர்மிங்காம் ரெயிலில் வேலை பார்த்து வந்தனர். அதே அலுவலில் இவருக்கு அதிக ஊதியம் கிடைக்கக் கூடியதா யிருந்தும் 21ம் பிராயத்தில் இவர் அவ்வேலையை யொழித்து, வீடு நோக்கிச் சென்றனர்.

ஆராய்ச்சி

தம் ஊரில் இவர் கணிதத்தையும், மற்றும் சில்லரைப் படிப்புகளையும் பயின்று வந்தனர். ஒன்றில் மட்டும் தலை கொடுத்து, அதனிலேயே காலத்தைப் போக்குதல் நலமன்றென்று

நினைத்து இவர் பல வழிகளிலும் உழைத்து வந்தனர். ஆனால் எந்த விஷயமாக உழைத்த போதிலும், 'கழையாடிக்குக் கண் காசின் மேல்' என்றபடி, உயிர்த் தோற்றங்களைப் பற்றிச் சாத்திர முறையாக ஆராய்ச்சி செய்வதிலே இவர் கண்ணா யிருந்தார். சொரூபங்கள் வரைவதில் இவருக்கு எப்பொழுது ஆனந்தம் உண்டு. இவர் புற் பூண்டுகளைச் சேர்த்து வைத்துப் பெருங் காட்சி யொன்று அமைத்தனர். புது மாதிரி யாக அச்சு வார்க்கும் கருவியொன்று கண்டு பிடித்தனர். இரண்டாண்டு இவர் இப்படிக் காலங் கழித்தனர்.

வியாசங்கள் வரைதல்

பின்னர், லண்டன்மா நகரத்திற் குச் சென்று இவர் பத்திரிகைகளுக்கு எழுதிப் பொருள் பெற முயன்றனர். போதுமான திரவியம் கிடைக்க வில்லை. இவர் வரைந்து அனுப்பிய விஷயங்களை ஏற்றுப் பதிப்பித்த பத்தி ரிகைகள் 'ஸிவில் எஞ்சினீயர்' 'ஸோபிஸ்ட்' 'பிலோஸபிகல் மகா ஸீன்' 'நான் கன்பார்மிஸ்ட்' என் பனவே. இவர் தலை நகருக்கு வரு முன்னர் 'ஆட்சி முறை' என்னும் விஷயமாகப் பத்திரிகைகளுக்கு அநேக கடிதங்கள் வரைந்திருக்கின்ற னர். அவற்றை ஒருங்கே சேர்த்துப் புத்தகமாகப் பதிப்பித்தனர். கடின மான கருத்துக்கள் அமைந்த புத்தக மாதலால் அது புத்தகச் சந்தையில் விரைந்து விலையாகவில்லை. 1848ம் ஆண்டில் இவர் மறுபடி எழுத ஆரம் பித்தனர். 'எகானமிஸ்டு' என்ற பத் திரிகைக்கு இவர் தவறாமல் எழுதி வந்ததன்றி மற்றும் அநேக பத்திரி கைகளுக்கு அற்புதமான வியாசங் களை வரைந்து அனுப்பினார். இவற் றைச் சிலர் கவனித்தனர். இவர் பெயர் பிரகாசிக்கத் தொடங்கியது.

தத்துவக் கோட்பாடு

ஏனெனில், அரசு முறையையும், குடிமுறையையும் பற்றிய குழப்பம் ஐரோப்பாக் கண்டத்தில் அத்தருணம் உண்டாகி இருந்தது. ஆட்சி முறை இன்னதென்று அறிய விரும்பினர் பலர். இவருக்கு ஒரு கருத்து மட்டும் மனதில் தடித்தது. அவயங்களுள்ள ஜந்துக்கள் ஒன்றினின்று ஒன்று உற் பத்தியாயிருத்தல் வேண்டும்; திடீ ரென்று ஒன்று உண்டானதில்லை; உயி ரானது படிப்படியாக பலவகைப் பிராணிகளில் தோன்றிக் கடைசியில் மனித சொரூபம் அடைகிறது. இக் கருத்து இவருக்கு நாளுக்கு நாள் முதிர்ந்து, இவருக்கு நாற்பதாம் வயதும் எட்டியது. அப்போது இவர் தம்முடைய தத்துவக் கோட் பாட்டை ஒழுங்கு படுத்தினர். அதன் சுருக்கம் வருமாறு:—

'உலகெலாம் பிரகிருதியும் சலன மும் (Matter and Motion) ஓயாமல் மாறி மாறிச் சேர்கின்றன. இப்புதிய சேர்க்கையினாலும் பிரிவினாலும் உண் டானவையே நாம் பார்த்து உணர்ந்து அறியும் பொருள்கள்; பிரகிருதி சேர்தலால் உற்பத்தி. அச்சேர்க்கை யாகும் பொழுது சலனம் குறைகின் றது. சலனம் அதிகரித்தல் பொருள் களுடைய அழிவின் குறி. ஒன்றோ டொன்று சேராதிருந்த வஸ்து இறுகு வதை உற்பத்தியாகும் ஜந்துவின் தேக முழுவதிலும், ஒவ்வொரு பாகத் திலும் காணலாம். வானம், பூமி, மனம், குடி, வழக்கம், சட்டம் ஆகிய இவை யனைத்தும் உண்டான விதம் இதுவே'.

அரசியல் முறை

இவருடைய கொள்கையின்படி அரசியலின் உற்பத்தி இவ்விதம் என்பதைச் சிறிது விளக்குவாம். முதலில் மனிதர் தனியர். அஃதாவது, தனித் தனியே வயிறு வளர்த்துக் கொண்டிருந்தனர்; ஒருவரை யொருவர் ரக்ஷித்தார்; பிறவற்றால் துன்பம் நேரிடும் பொழுது காட்டுத்தனம் மிகுந்த புராதன மனிதர் ஒன்று சேர்தலால் மிக்க நன்மை யுண்டாகுமென்று கண்டனர். பிறர் மீது படை யெடுத்தலிலும் சேர்க்கைப் பலம் மிகுதி என்று தெரிந்தனர். இப்படி மனிதர் கூட்டங்களாகப் பிரியும் போது ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவன் ஏற்பட்டான். திடகாத்திரமும் இயற்கையறிவின் கூர்மையும் உள்ளவனே தலைவனாயினன்; சத்துரு இருக்கும் வரையில் உடல் வலி சிறக்கும். பின்னர், கூட்டத்து ஒழுங்கு ஏற்படும் போது மதி சிறக்கும். இவ்வண்ணமாக நாகரீக விருத்திக்குத் தக்கபடி மதியுள்ளான் மன்னனாயினன். முன்பு, அரச பரம்பரை ஏற்பட்டது. அறிவு வளர வளர ஒவ்வொருவனும் தன்னைத்தானே ஆளச் சக்தி பெறுவான். அப்பொழுது அரசன் என்பது ஏற்படும்; ஆங்காங்கு சுயாதிகாரம் உண்டாகும்.

நியாய மூலம்

மானிட அனுபவத் தொகையே மதத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் மூலம். நியாயம் அநியாயம் என்பன உண்டானதும் இவ்விதமே. அனுபவத்தில், உயிர் வாழ்வதற்கு அனுகூலமானது நியாயம், சன்மார்க்கம்; பிரதிகூலமானது அநியாயம்; கெட்ட ஒழுக்கம்.

டார்வினது கோள்கை

டார்வின் என்பவர் தம்முடைய கொள்கையை வெளிப்படுத்து முன்னரே ஸ்பென்ஸர் தம் கொள்கையை வரையறுத்து வைத்தனர். அவயவ உயிர் (Organic Life) உண்டானது படிப்படியாக என்று மட்டும் டார்வின் காண்பித்தனர். ஸ்பென்ஸரோ, மனோ தத்துவங்களும் மதச் சட்டதிட்டங்களும் உண்டான விதம் அங்ஙனமே என்று விளக்குகிறார்.

அமேரிக்கா யாத்திரை

1882-ம் ஆண்டில் இவர் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களுக்கு யாத்திரை போயினர். ஆண்டுள்ள விநோத சாத்திரப் பயிற்சியே இவரை அவண் போகும்படி தூண்டியது. இவர் ஞானியென்று முதலில் கண்டவர் அமெரிக்கரே. அன்னவரே இவருடைய உள நூலையும் (Psychology), ஜன சமூக சாத்திரத்தையும் (Social Statics) பாராட்டினர். இவர் அமெரிக்காவுக்குப் போயிருந்த காலத்தில் இவரைக் கண்டு பேசாத மனிதர் இலர். பள்ளிப் பிள்ளைகள் அங்கங்கே தெருக்களில் கூடி இவரைப் பார்த்தனர். அமெரிக்கருக்கு இவர் சொல்லிய புத்தி வாதம் கவனிக்கத்தக்கது. "விரைவில் செல்கின்றீர், அவகாசம் கொண்மின்."

போருட் பேறு

இவருடைய புத்தகங்களால் இவருக்கு லாபமில்லை. 1850-ம் ஆண்டில் "ஜன சமூக சாஸ்திரம்" என்னும் நூல் வெளியாயிற்று. 750 பிரதிகளே பதிப்பிக்கப்பட்டன. இவை செலவாவதற்குப் பதினொன்கு வருடங்கள் சென்றன. 1855-ம் ஆண்டில்

"உள நூல் மூலங்கள்" என்னும் நூல் வெளி வந்தது. 750 பிரதிகளை பதிப்பிக்கப்பட்டன. பன்னிரண்டு ஆண்டுகளில் இவை செலவாயின. இவருடைய புத்தகங்களின் முதற் பதிப்புக்களெல்லாம் கையைக் கடித்தன. இருபத்து நான்கு வருடங்கள் சென்ற பின் இவருடைய நூல்களின் வரும்படி அவற்றின் செலவைக் காத்தது. "முயற்சி மெய் வருந்தக் கூலி தரும்" என்ற முது மொழி இவருக்குப் பொருந்தாமற் போயிற்று. கீர்த்தியே கூலியாகுமாயின், இவருக்குக் கிடைத்த கூலிக்குக் கணக்கில்லை.

நண்பர்கள்

இவருடைய நண்பர்கள் பலர். பிரெஞ்சு வித்துவான்களையும் இந்திய வித்துவான்களையுமே இவர் மதித்தனர். இவர் அடிக்கடி "லூயி பிளாங்க்" என்பவரைப் புகழ்ந்தனர். இங்கிலாந்தில் இவருக்கு அத்தியந்த சிநேகராவர், பின் காலத்தில் "ஜார்ஜ் எலியற்று" என்ற பெயரால் விளங்கிய "மேரியான் இவான்ஸ்" என்ற மாதே.

இவரது நூல்கள்.

இவர் ஆக்கிய நூல்களாவன:—

1.	Proper Sphere of Government	1842
2.	Social Statics	1850
3.	Principles of Psychology	1855
4.	Essays	1858-1863
5	Education	1861
6.	First Principles	1862
7.	Principles of Biology	1864
8.	Study of Sociology	1869
9.	Spontaneous Generation	1870
10.	Recent Discussions in Science Philosophy and Morals	1871
11.	Descriptive Sociology	1873
12.	Sins of Trade and Commerce	1875
13.	Ceremonial Institutions Data of Ehics	1879

மழை

வித்வான். எஸ். உமைதாணு பிள்ளை

மழையே! மழையே! வாவா!
மாரி மழையே வாவா
ஏழை மனங் குளிரவா
ஏரி குளங்கள் நிரப்பவா! 1

உழவருன்னைக் காணாமல்
உள்ளங் கன்றி வாடுகிறார்
உழவுத் தொழிலின் உயர்வெலாம்
உலகிற் குன்றச் செய்து விட்டாய் 2

பருவகாலம் பெய்யாமல்
பாரிலுயிரைத் தவிக்க விட்டாய்
கருப்ப முற்ற பயிரை யெல்லாம்
கரிந்து போகச் செய்து விட்டாய். 3

உலகிற்காணி நீயாவாய்
உண்பவருணவும் நீயாவாய்
உலகிலுள்ள தொழில் களெல்லாம்
உன்னா லென்று மியங்கிடுமே 4

தருமம் வளர்வது முன்னாலே
தவத்தோர் வாழ்வது முன்னாலே
கருமம் பெறுவது முன்னாலே
காசினி செழிப்பது முன்னாலே 5

கெட்டவர் உயர்வது முன்னாலே
கேழுடன் தாழ்வது முன்னாலே
கெட்டவர் நல்லவ ரென்னாது
கருணையே யென்றும் காட்டிடுவாய். 6

பெய்ய நீயும் ஆரம்பித்தால்
பெரிது முலகந்தாங்காவே
வையகத்தி லுன்னையல்லாமல்
வாய்த்த நிதியும் வெறொன்றுண்டோ? 7

உன்னைப் புகழ்வது முலகோரே
உன்னை யிகழ்வது முலகோரே
உன்னை யல்லா லிவ்வுலகில்
உயிர்க்குறுதி வேறுமுண்டோ? 8

பருவகாலம் வந்துலகில்
பசியை யெல்லாம் நீக்கியே
தரும மென்றுந் தழைக்கவே
தயைபுரிவாய் மழையே நீ 9

கண்மாரி நீங்கி யென்றும்
கவலையின்றி வாழவே
விண்மாரியே இவ்வுலகில்
விரைந்து நீயும் ஓடிவா. 10



ஆப்பிரிக்கா கண்டத்தில் ஜெர்மனி இழந்த நாடுகளை இந்தப் படம் காண்பிக்கிறது,

ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள்

28-4-1939-ல் ஹிட்லர் ஜெர்மன் பார்லிமெண்டில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில், ஜெர்மனிக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளை யெல்லாம் திருப்பிக் கொடுத்து விட வேண்டுமென்று கூறினன். இந்தக் குடியேற்ற நாடுகள் யாவை என்பன போன்ற விஷயங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டுமானல், வார்சேல் சமாதான உடன்படிக்கைகளின் ஷரத்துகளை ஞாபகத்திற்குக் கொண்டு வர வேண்டும். இந்த வார்சேல் உடன்படிக்கை 410 பிரிவுகளைக் கொண்டது. அவற்றில், ஜெர்மனி சம்பந்தப்பட்ட ஷரத்துக்களின் சாரத்தை மட்டும் சுருக்கமாக இங்குத் தெரிந்து கொள்வோம்.

"ஜெர்மனிக்குச் சொந்தமா யிருந்த ஆல்சேஸ்—லோரெயின் பிரதேசங்கள் பிரான்ஸுக்குப் போய்ச் சேர்ந்தன. யூபென், மால்மெடி ஜில்லாக்கள் பெல்ஜியத்தைச்சென்றடைந்தன. லோரெயின் ஜில்லாவுக்கு அடுத்தாற் போலிருந்த ஜார் பிரதேசம்* பதினைந்து வருஷம் வரை, சர்வ தேச சங்கத்தின் நிருவாகத்துக் குட்படுத்தப்பெற்றது. இந்தக் காலத்தில் ஜார் பிரதேசத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களின் அநுபவ பாத்தியதை பிரான்ஸைச் சேர்ந்தது. யுத்தத்தில் தலையிடாம லிருந்ததற்காக, டென்மார்க்குக்கு ஜெர்மனியின் வட பாகத்திலுள்ள ஷ்லேஸ்விக் பிரதேசம் கொடுக்கப்பெற்றது.

ஜெர்மனியின் கிழக்கெல்லையிலிருக்கிற மெமல் பிரதேசம், முதலில் சர்வ தேச சங்கத்தின் நிருவாகத்திற்குட்படுத்தப்பெற்று 1923ம் வருஷம் லிதுனியாவைப் போய்ச் சேர்ந்தது. மேற்கு ப்ரஷ்யாவின் பெரும் பாகமும் போஸன் ஜில்லாவும் போலந்து என்னும் தனி நாடாக உருக்கொண்டது. ஸிலீஷியா என்னும் பிரதேசத்தை இருதுண்டாக வெட்டி ஒன்றை போலந்துக்கும் மற்றொன்றை ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கும் கொடுத்தார்கள். போலந்து நாட்டுக்குச் சமுத்திரத்தோடு தொடர்பு இருக்க வேண்டுமென்று சொல்லி, கிழக்கு ப்ரஷ்யாவுக்கும் ஜெர்மனியிலுள்ள பொமேரேனியா மாகாணத்திற்கு மிடையே 754 சதுர மைல் விஸ்தீரணமுள்ள டான்ஸிக் பிரதேசம் சுதந்திர பிரதேச மாக்கப்பட்டது. போலந்தின் துறைமுகமாக இது கருதப்பெற்று வருகிறது. கீல் வாய்க்கால், சர்வ தேசங்களுக்கும் பொதுவானதென்று நிர்ணயிக்கப் பட்டது.

* 1935ம் வருஷம் எடுக்கப்பெற்ற பொது ஜன வாக்கின்படி இந்தப் பிரதேசம் ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்தது.

கர்ம பலன்—ஒரு சிறு கதை

—ஜி. கே. சுந்தரம்
B A., B. T.

சாந்தை ஓர் அழகிய பெயர். ஆமாம்; அவளுடைய மாதா பிதாக்கள் உயர்ந்த சத்தியவந்தர்கள், சாந்தம், தயை, தர்மம், தியாகம் முதலிய நற்குணங்கள் அவர்களிடம் குடி கொண்டிருந்தன. இத்தகைய குடும்பத்திற்றோன்றிய சாந்தை இவர்களைப் போலல்லாது வேறெவ்வாறு இருக்க முடியும். இது இயற்கையன்றோ?

ஃ ஃ ஃ

சாந்தையின் கணவன் விஜயன் மிகவும் நல்லவன். அழகிலும் அந்தஸ்திலும் சாந்தைக்கு மிகப் பொருத்தமானவன். ஆனால் சாந்தைக்கு ஒரேயொரு மனக்குறை இருந்தது. அது என்னவெனில் தன் புக்ககத்தில் தர்மம் என்னும் விஷயந்தான் கிடையாது. செல்வம் ஏராளமாயிருந்தும் அவற்றால் தான தர்மம் செய்யாவிட்டால் என்ன பயன்? இவ்விஷயம் சாந்தையை அடிக்கடி துக்கப்படுத்திக் கொண்டேயிருந்தது.

சித்திரை மாதம். நல்ல மத்தியான வேளை. அச்சமயம் "பவதி பிக்ஷாம்

ஜெர்மனியினுடைய மேற் கெல்லைப் புறத்தின் பெரும்பாகத்தில் ஜெர்மானியத் துருப்புகள் நிரந்தரமாக இருக்கக்கூடாதென்று அறிவிக்கப்பெற்றது. ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த குடியேற்ற நாடுகள் யாவும் அதனின்றும் பிடுங்கப்பட்டன. ஆப்ரிக்கா கண்டத்திலிருந்த பிரதேசங்களை, பிரான்ஸ், பெல்ஜியம், கிரேட் பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளும் பங்கிட்டுக் கொண்டன. சீனாவுக்குச் சமீபத்திலிருந்ததும் ஜெர்மனிக்குச் சேர்ந்திருந்ததுமான ஷாண்டங், கியாசௌ பிரதேசங்கள் ஜப்பானுக்கு அளிக்கப்பட்டன. எகிப்து, சயாம், லிபீரியா, மொராக்கோ, சைனா, துருக்கி, பல்கேரியா முதலிய நாடுகளில் ஜெர்மனிக்கென்று இருந்த உரிமைகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன, ஜெர்மனி, ஒரு லட்சம் துருப்புகள், பன்னிரண்டு நாசகாரிக் கப்பல்கள், ஆறு யுத்தக் கப்பல்கள் முதலியவைகளுக்கு மேல் வைத்திருக்கக் கூடாதென்றும் ஆகாயப் படையே இருக்கக்கூடாதென்றும் வரையறுக்கப்பட்டது. யுத்தத்திற்காக ஏற்பட்ட செலவுகளையும் அதனால் உண்டான நஷ்டத்தை ஈடுபடுத்துவதற்கு வேண்டிய செலவுத் தொகையும் ஜெர்மனியின் மீது சுமத்தினார்கள். தவிர, ஜெர்மனியின் ரயில்வேக்கள், துறை முகங்கள் முதலியவை சம்பந்தமாகவும் சில ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

தேஹி" எனச் சொல்லிக் கொண்டே ஓர் யதி சாந்தையின் இல்லத்தினுள் நுழைந்தார். மாமியார் அடுக்களேயிலும் மற்றோர் ரேழியிலும் மிக உல்லாசமாய் உணவருந்திகொண்டிருந்தனர். அந்தயதியின் குரல் கேட்கவே அவர்களெல்லோரும் ஒரே கூச்சல் போட்டனர். "அடி சாந்தா, அதோ வாசல்லே ஒரு சனியன் வந்து கத்தரது; விரட்டித் துரத்து" என்று கட்டளேயிட்டார் மாமனார். மாமனார் கட்டளேயை மறுக்கவும் மாட்டாமல் "தேஹி" என்றவருக்கு 'இல்லே' யென்று சொல்லவும் மாட்டால் வாசலின் முன்னே வந்து தயங்கி நின்றாள் சாந்தா. "அம்மா பசிக்குக் கொஞ்சம் அன்னம் கிடைக்குமா" என்று கேட்டார் யதி. சாந்தை "சுவாமின் இங்கே, நாங்கள் இன்று சமைக்கவில்லே."

யதி:—ஏனம்மா, இதோ அவர்கள் சாப்பிடுகின்றார்களே?

சாந்தை:—சுவாமின், இவர்கள் சாப்பிடுவது நேற்றுச் சமைத்த சாதம்.

யதி பிரமித்துப் போய்விட்டார். சாந்தையின் முகத்தில் கருணேயும் ஞானமும் ஒளி வீசின. அத்தகைய பெண் எப்படி பொய் சொல்லக்கூடும், என்று தன் மனத்துள் எண்ணிய யதி "அம்மா, நாளேக்கு ஆகாரத்திற்கு என்ன செய்வீர்கள்" என்று கேட்டார்.

சாந்தை:—உம்மைப் போல்தான்.

யதி:—என்ன, நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு அர்த்தம் விளங்கவில்லேயே. உங்கள் வசனங்களில் ஏதோ கூடார்த்தமிருப்பதாக அறிகின்றேன். அதை விளக்கிக் கூறுவீராக."

சாந்தை:—சுவாமின், இன்றைக்கு நாங்கள் சமைக்கவில்லே' என்றது, இந்த ஜென்மத்தில் நாங்கள் சத் கர்மங்கள் செய்யவில்லே என்பது. இப்பொழுது நாங்கள் சாப்பிடுவதை நேற்றுச் சமைத்த சாதம் என்றது,போன ஜன்மத்தில் செய்த பலன் என்பதாகும். நாளேக்கு உம்மைப் போல் என்றது, இந்த ஜென்மத்தில் சத் கர்மங்களின் பலன் முடிந்துவிடும்; பின்னால் தங்களேப் போல் பிக்ஷைக்குப் புறப்பட்டுவிட வேண்டும் என்பதே தான்."

சாந்தையின் ஞான மொழிகளேக் கேட்ட மாமனார், மாமியார், கணவர் முதலியோர் திக்பிரமை கொண்டனர் எனச் சொல்லவும் வேண்டுமோ? அவளது விளக்கவுரை கேட்டும் திருந்தாத மனித ஜன்ம மிருக்க முடியுமா? அது வரை கருமிகள் பவனமாயிருந்த சாந்தையின் கணவன் வீடு, அன்று முதல் தரும பவனமாக மாறி ஆனந்த பவனமாகத் திகழ்ந்தது.

ஒரு சிறு நாடகம்

மனோ தர்மம்

—வெ. சா.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

சேர: உஸ்—அதோ பார். அந்த இரண்டு பெண் குழந்தைகளும் அசைத்துக் கொடுக்கிறார்கள்.

உதிய: அவர்கள் எழுந்திருக்கிறார்கள்போல் தோன்றுகிறது.

சேர: பலகணியண்டை வருகிறார்க ளென்று கருதுகிறேன்.

(ஒரு பெண் ஒரு பலகணியண்டையும், மற்றொரு பெண் மற்றொரு பலகணியண்டையும் வந்து இருட்டை உற்று நோக்குகிறார்கள்.)

உதிய: நடுவேயுள்ள இந்த ஜன்னலண்டை எவரும் வரவில்லை.

மாரி: அவர்கள் வெளியே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; உஸ்—சும்மா இரு. அவர்கள் உற்றுக் கேட்கிறார்கள்.

உதிய: தன்னால் பார்க்க முடியாததைக் குறித்துப் பெரியவள் சிரிக்கிறாள் பார்.

சேர: சின்னவளுடைய கண்களில் பயம் நிரம்பி யிருக்கிறது.

உதிய: ஜாக்கிரதை! தேகத்தைச் சுற்றி ஆத்மா எவ்வளவு தூரம் பரவியிருக்கிற தென்று யாருக்குத் தெரியும். [சிறிது நேரம் மௌனம் குடிகொண்டிருக்கிறது. மாரியம்மை, தனது பாட்டனாரைச் சேர்த்துக் கட்டிக் கொள்கிறாள்.]

மாரி: தாதா! [பயத்தினால் அழுகிறாள்]

உதிய: குழந்தாய்! அழாதே! நமக்கும் அந்த நிலைமை ஏற்படக் கூடும். [சிறிது நேரம் மௌனம்.]

சேர: நெடு நேரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே.

உதிய: பாவம்! ஆயிரக்கணக்கான வருஷங்கள் அவர்கள் பார்க்கட்டுமே. இந்த இருட்டில் என்ன தெரியப் போகிறது? அவர்கள் இந்த வழியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேறு வழியாக துரதிர்ஷ்டம் வந்து கொண்டிருக்கிறது.

சேர: அவர்கள் இந்த வழியாகப் பார்த்துக் கொண்டிருப்பது நல்லது தான். [தூரத்தில் உற்று நோக்கி] தூரத்தில் ஏதோ வொன்று—அஃதென்ன தென்று எனக்குத் தெரியவில்லை—வந்து கொண்டிருக்கிறது.

மாரி: அது ஜனக் கூட்ட மென்று நினைக்கிறேன். அஃது அதிக தூரத்

தில் வந்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. அதனால்தான் நமக்குச் சரியாகப் புலப்படவில்லை.

சேர: ஒற்றையடிப் பாதை எப்படி வளைந்து வருகிறதோ அப்படியெல்லாம் அவர்களும் வந்துதானேயாக வேண்டும்? அதோ பார்! அந்தச் சரிவில் இறங்கி வருவது தெரிகிறது.

மாரி: ஓ! எத்தனை பேர் வருகின்றனர்! நான் புறப்பட்டபோதே, வெளியூர்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கோணல் வழியாக வந்து கொண்டிருக்கிறார்களென்று தோன்றுகிறது.

உதிய: எப்படியானாலும் அவர்கள் வந்து சேர்ந்து விடுவார்கள். அவர்கள் மைதானத்தைக் கடந்து வருவது என் கண்ணுக்குக்கூட புலனாகிறது. தூரத்திலிருந்து பார்த்தால் அவர்கள் எவ்வளவு சிறியவர்களாகத் தென்படுகிறார்கள்! இந்த ஜனக் கூட்டத்தைப் பார்த்தால், இக் குடிசையிலுள்ள இரண்டு சிறுமிகளுக்கும் என்னவென்று புலப்படாது. துரதிர்ஷ்டம், சென்ற இரண்டு மணி நேரமாக எவ்வளவு மெது மெதுவாக வந்து கொண்டிருக்கிறது! அதை இப் பெண்கள் தடுக்க முடியாது. அதைக் கொண்டு வருவோரும், அதைத் தடுக்கச் சக்தி யற்றவரா யிருக்கின்றனர். துரதிர்ஷ்டம் அவர்களைத் தன்னுடைய கத்திற் குட்படுத்திக் கொண்டு விட்டது. ஆதலின் அதற்குக் கீழ்ப்படிந்தேயாக வேண்டும். அதற்குத் தனது இலட்சியம் இன்னதென்று தெரியும். அதனை நாடி அது செல்கிறது. அதற்குச் சலிப்பே கிடையாது. அதற்கு ஒரே நோக்கந்தான் உண்டு. ஆயினும், மனிதர்கள் அதற்குக் கீழ்ப்படிந்தேயாக வேண்டும். இந்தத் துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வருகிறவர்கள் மிகுந்த விசன முள்ளவர்களாகவும் பச்சாதாப முடையவர்களாகவு மிருக்கிறார்கள். ஆயினும் அதனுடன் அவர்கள் முன்னோக்கியே வரவேண்டி யிருக்கிறது.

மாரி: தாதா! பெரிய பெண் சிரிப்பதை நிறுத்தி யிருக்கிறாள்.

சேர: ஜன்னல்களினின்று விலகிப் போகிறார்கள்.

மாரி: தங்கள் தாயாருக்கு முத்தங் கொடுக்கிறார்கள்.

சேர: பெரிய பெண், கைக்குழந்தையின் தலை மயிரை அவிழ்ந்திராதபடி தடவிக் கொடுக்கிறாள்.

மாரி: தமக்குக்கூட அந்தக் குழந்தைகள் முத்தங் கொடுக்க வேண்டுமென்று தகப்பனார் விரும்புகிறார்.

சேர: இப்பொழுது மறுபடியும் அமைதி ஏற்பட்டிருக்கிறது.

மாரி: அந்த இரண்டு பெண்களும் தங்கள் தாயாரை மீண்டும் அடைந்து விட்டார்கள்.

சேர: நாழிகை எவ்வளவு இருக்குமென்று தகப்பனார் யோசித்துக் கொண்டிருக்கிறார்.

மாரி: தாங்கள் செய்வ தின்னதென்று தெரியாமலே அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள்போல் தோன்றுகிறது.

சேர: தங்களுடைய ஆன்ம நாதத்தையே அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்போல் இருக்கிறது.

மாரி: தாதா! இன்று, இந்தத் துக்கச் செய்தியை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாமே!

உதிய: பார்த்தாயா, நீ கூட தைரியத்தை இழந்து விட்டாய்! நீ அவர்களைக் கவனிக்கக் கூடாது. எனக்கு இப்பொழுது வயதென்ன தெரியுமா? எண்பத்து மூன்று. ஆனாலும், வாழ்க்கையின் உண்மை இப்பொழுது தான் எனக்கு முதன் முதலாகப் புலனாகிக் கொண்டு வருகிறது. அவர்களுடைய செய்கைகளும் பிறவும் ஏன் எனக்கு நூதனமாகவும் கம்பீரமாகவும் புலப்படுகின்றனவோ தெரியவில்லை. நம்மைப் போலவே அவர்களும் கணப்புச் சட்டியைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் வேறு உலகத்திலிருப்பதாகவும் நான் வேறு உலகத்தி லிருப்பதாகவுமே எனக்குப் புலப்படுகிறது. அவர்களுக்குத் தெரியாத சில விஷயங்கள் எனக்குத் தெரிந்திருப்பதான உணர்ச்சியுமிருக்கிறது. குழந்தாய்! இஃது உண்மைதானா? (பொறுத்து) ஏன் உன் முகம் திடீரென்று வெளுத்து விட்டது? நம்முடைய வார்த்தைகளால் விவரிக்க முடியாதபடி அந்நியமான தொன்று ஏதேனும் இருக்கிறதோ? அதுதான் நம்மை அழச் செய்கிறது போலும். இவ்வளவு துக்கம் வாழ்க்கையி லிருக்கிறதென்று எனக்குத்தெரியாது. மற்றும் அதைப் பார்த்தவுடன் இவ்வளவு பயம் உண்டாகுமென்றும் இதுவரை அறியாமலிருந்தேன். வேறொன்றும் நடவா விட்டாலும், அவர்கள் இவ்வளவு சாந்தமாக உட்கார்ந் திருப்பதைப் பார்த்தே எனக்குப் பயம் உண்டாகிறது. அவர்களுக்கு இந்த உலக வாழ்க்கையில் அதிக நம்பிக்கை இருக்கிறது. துரதிர்ஷ்டம் என்ற சத்துருவுக்குச் சில அடி தூரத்திலேயே அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வீட்டுக் கதவுகளை மூடி விட்டதனால், தங்களுக்கு இனி ஒன்றும் நடவாதென்றும் அவர்கள் கருதுகிறார்கள், போலும். ஆன்மாவுக்குள்ளேயே பலவித சம்பவங்கள் நிகழ்கின்றனவென்றும், தங்களுடைய வீட்டு வாயிற்படியுடன் உலகம் முடிவடையவில்லை யென்றும் அவர்களுக்குத் தெரியாது போலும். தங்களுடைய அற்ப வாழ்க்கை மிகுந்த பத்திரமாக இருக்கிறதென்று அவர்கள் கருதி இருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கையைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்திருப்பதைவிட வெளியாருக்கு அதிகம் தெரியும் என்பதை அவர்கள் அறியார்கள். அவர்களுடைய வீட்டுக்கு இரண்டடி தூரத்தில் இருக்கும் நான், ஓர் அற்பக் கிழவன். அவர்களுடைய சுகத்தையெல்லாம் என் கைப்பிடிக்குள் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

மாரி: அவர்களிடத்தில் கருணை காட்டுங்கள் தாதா!

உதிய: அவர்களிடத்தில் நமக்குக் கருணை இருக்கிறது. ஆனால் நம் மீது கருணை வைப்பார் எவருமில்லையே.

மாரி: இந்தத் துக்கச் செய்தியை அவர்களுக்கு நாளை தெரிவியுங்கள் தாதா! பகற் காலத்தில் தெரிவித்தால் அவர்களுடைய துக்கம் சிறிது குறைந்திருக்கும்.

உதிய: நீ கூறுவது சரிதான் குழந்தாய்! இந்தத் துக்கச் செய்தி, இரவில் கழிந்து போகும்படி விட்டுவிடு

வது நல்லதே. பகற்காலம், தூக்கத்திற்கு மிக இனிமையானது. ஆனால் நாளை, அவர்கள் நம்மைப்பற்றி என்ன சொல்வார்கள்? துரதிர்ஷ்டமானது, ஜனங்களுக்குள் பொறுமையை உண்டுபண்ணி விடுகிறது. யாருக்கு அந்தத் துரதிர்ஷ்டம் வந்து சேர்கிறதோ, அவர், அதன் வரவை மற்றனைவருக்கும் முன்னடியே அறிந்து கொள்ள விரும்புகின்றனர். தங்களுக்குத் தெரியாதவர் கையில் அத்துரதிர்ஷ்டத்தை விட்டு வைக்க அவர்கள் விரும்புவதில்லை. அவர்களிடமிருந்து ஏதோ கவர்ந்து கொண்டு போய்விட்டதாக நாம் கருதப்படுவோம்.

சேர: இப்பொழுது அதிக நேரமாய் விட்டதல்லவா? பிரார்த்தனை தொனி என் செவிகளில் விழுகிறது.

மாரி: அவர்கள் சமீபமாக வந்து விட்டார்கள்.

(பெருந்தேவி பிரவேசிக்கிறாள்.)

பெருந்தேவி: நான் வந்து விட்டேன் தாதா! ஜனக்கூட்டத்தை மெதுவாக இது வரை அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன். பாதையில் காத்துக் கொண் டிருக்கிறது. (கூட்டத்திலுள்ள குழந்தைகளின் கூக்குரல் கேட்கிறது) ஆ! குழந்தைகள் இன்னும் அழுது கொண்டிருக்கின்றன. அவைகள், என்னுடன் வரக்கூடாதென்று தடுத்துவிட்டு வந்தேன். ஆயினும் என் வார்த்தைகளைக் கேட்கவில்லை. தாய்மார்களும் என் வார்த்தைக்கு இணங்க மறுக்கிறார்கள். (பொறுத்து) வேண்டாம். அவர்களே அழுகையை நிறுத்திக் கொண்டார்கள். (உதியமானைப் பார்த்து) எல்லாம் சித்தமாயிருக்கின்றனவா? அவளுடைய விரலிலிருந்த மோதிரத்தையும் கொண்டு வந்திருக்கிறேன். கைக் குழந்தைக்குச் சிறிது பழமும் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன். நானே, அவளைத் தொட்டிலில் (பாடையில்) படுக்க வைத்தேன். அவளைப் பார்த்தால் தூங்கிக் கொண்டிருப்பது போலவே தெரிகிறது. அவளுடைய தலை மயிர்தான் அதிக தொந்தரவைக் கொடுத்தது. அதைச் சரியாக ஒழுங்கு படுத்த என்னால் முடியவில்லை. கூடிய வரை ஒழுங்கு செய்து சில புஷ்பங்களையும் அதில் முடித்து வைத்தேன். தாதா! நீங்கள் ஏன் இங்கே இருக்கிறீர்கள்? அவர்களோடு நீங்கள் ஏன் இல்லை? (பல கணியைப் பார்த்து) அவர்கள் அதிகமாக அழவில்லையே! ஓ! அவர்களுக்கு நீங்கள் இந்தச் செய்தியைச்சொல்லக்கூட இல்லையா?

உதிய: பெருந்தேவி! பெருந்தேவி! வாழ்க்கையின் இரகசியம் இன்னும் உனக்கு நன்றாகத் தெரியவில்லை.

பெருந்தேவி: அதை நான் ஏன் தெரிந்து கொள்ளக் கூடாது? (பொறுத்து) நீங்கள் இம்மாதிரி அவர்களிடம் சொல்லாமலிருக்கக்கூடாது.

உதியமான்: பெருந்தேவி! உனக்கொன்றுந் தெரியாது.

பே: நான் சென்று அவர்களிடம் தெரிவிக்கட்டுமா?

உதிய: இரு, குழந்தாய்; இங்கேயே சிறிது நேரம் பொறு.

பே: இந்தத் துக்கத்தை அவர்களுக்குத் தெரிவியாமலிருந்தால் அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்

கள்? அவர்களுக்கு இன்னுமா தெரிவியாம லிருப்பது?

உதிய: தெரிவியாம லிருந்தால் என்ன?

பே: எனக்குத்தெரியாது. ஆனால் தெரிவியாமல் முடியாது என்று நான் கருதுகிறேன்.

உதிய: குழந்தாய்! இங்கே வா.

பே: அவர்கள் எவ்வளவு பொறுமையுடையவர்கள்!

உதிய: இங்கே வா, குழந்தாய்.

பே: (திரும்பி) தாதா! நீங்கள் எங்கே யிருக்கிறீர்கள்? எனக்கு மிகுந்த துக்கமா யிருக்கிறது? நீங்கள் எங்கே யிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லையே. நான் இன்ன செய்வதென்றும் எனக்குப் புலனாக வில்லை.

உதிய: அவர்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்கும் வரை என்னைப் பாராதே.

பே: உங்களோடு நான் வர வேண்டும்.

உதிய: கூடாது. நீ இங்கேயே இரு. உன் சகோதரியுடன் இந்தக் கல்லின் மீது உட்கார்ந்து கொண்டிரு. நீ மிகச் சிறியவள். ஆதலின் இந்தக் காட்சியை நீ எப்பொழுதும் மறக்க மாட்டாய். மரண தேவதை ஒருவனுடைய கண்களில் தாண்டவம் செய்து கொண்டிருக்கையில், அந்தக் கண்களைக் கொண்ட முகம் எப்படி யிருக்கும் என்பதை நீ இன்னும் பார்த்திருக்க மாட்டாய். நான் சொல்லும் துக்கச் செய்தியைக் கேட்டு, அப்பெற்றோர்கள் உரத்த குரலில் அழுதாலும் அழக்கூடும். அந்தப்பக்கம் திரும்பிப் பாராதே. அல்லது அழுகைக்குப் பதிலாகப் பூரண மௌனமே நிரம்பினும் நிரம்பும். எது எப்படி யிருந்தபோதிலும், சந்தடி யில்லாம லிருந்தால், அந்தப் பக்கம் சிறிது கூடத் திரும்பிப்பாராதே. துக்கம் எந்த வழியைக் கடைப்பிடித்துச் செல்லும் என்பதை முன்னடியே எவரும் நிர்ணயித்துக் கூற முடியாது. அடி வயிற்றிலிருந்து எழும் சிறிது அழுகையுடனும் நின்று விடுதல்கூடும். அவர்களுடைய நிலையைக்கண்டு நான் என்ன செய்வேன் என்பதே எனக்கு இப்பொழுது தெரியவில்லை. குழந்தாய்! அவர்களிடம் போகு முன்பு எனக்கு ஒரு முத்தங்கொடு.

(ஜனக்கூட்டம் இவர்கள் பேசிக் கொண்டிருப்பதற்கு அருகாமையில் வருகிறது. பிச்சன் என்னும் குடியானவனும் வருகிறான்.)

சேரலாதன்: (ஜனக்கூட்டத்தைப் பார்த்து) இங்கேயே நில்லுங்கள். பலகணிக்கு அருகாமையில் போகாதீர்கள். அவர்கள் எங்கே?

பிச்சன்: யார்?

சேர: இறந்துபோன பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள்.

பிச்: அவர்கள் நேர் வழியாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

(உதியமான் செல்கிறான். மாரியம்மையும் பெருந்தேவியும் கல்லின் மீது உட்கார்ந்து கொள்கிறார்கள். கூட்டத்தில் முணு முணுப்புச் சப்தம் கேட்கிறது.)

சேர: உஸ்! எவரும் பேச வேண்டாம்.

(குடிசைக்குள், கதவின் உட்புறமுள்ள தாழ்ப்பாளை ஒரு பெண் போடுகிறாள்.)

பே: அவள் கதவைத் திறக்கிறாளா?

சேர: அதற்கு மாறாக தாழ்ப்பாளை நன்றாகப் போட்டு விட்டாள்.

[அனைவரும் மௌனம்]

பெருந்: தாதா இன்னும் உள்ளே செல்லவில்லையா?

சேர: அந்தப் பெண் மறுபடியும் தாயாரிடம் வந்து உட்கார்ந்து கொண்டு விட்டாள். மற்றவர்கள் அசையாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். கைக் குழந்தை இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறது.

[சிறிது நேரம் மௌனம்]

பெருந்: மாரி! கிட்டே வா!

மாரி: ஏன் அக்கா? [இருவரும் தழுவி முத்தமிட்டுக் கொள்கின்றனர்.]

சேர: உதியமான் கதவைத் தட்டியிருக்க வேண்டும்.—அதோ! அவர்கள் தலை நிமிர்ந்து பார்க்கிறார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

பெருந்: மாரி! மாரி! என் துக்கத்தை அடக்க முடியவில்லையே. [மாரியம்மை மீது தலை சாய்க்கிறாள்.]

சேர: அவர் மறுபடியும் கதவைத் தட்டுகிறார்போலிருக்கிறது. வீட்டுக்காரர் எவ்வளவு நாழிகையா யிருக்குமென்று பார்க்கிறார்—ஆ! எழுந்திருக்கிறார்—!

பெருந்: மாரி! உள்ளே போக வேண்டுமென்று எனக்கு இருக்கிறது. தூக்கத்தில் அவர்களைத் தனியாக விடுவதா?

மாரி: அக்கா! இரு. [போகாதபடி தடுக்கிறாள்.]

பெருந்: உனக்கு.

சேர: என்ன?

பெருந்: பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு வருவோர்—

சேர: சிறிதளவுதான் கதவைத் திறந்தார். ஒரு மூலைதான் தென்படுகிறது. கதவின் மீது கைவைத்து—ஓர் அடி பின் எடுத்து வைக்கிறார்.—ஹா! நீங்களா? என்று கேட்கிறார் போலிருக்கிறது. மெதுவாகக் கதவைத் திரும்பவும் சாற்றுகிறார். உங்கள் தாதா உள்ளே சென்று விட்டார்.

[கூட்டத்தினர், ஜன்னலண்டை வந்து விட்டனர். மாரியம்மையும் பெருந்தேவியும், தங்களிடத்திலிருந்து எழுந்து கூட்டத்தினருடன் கலந்து கொள்கின்றனர். உதியமான் உள்ளே நுழைந்ததும், அனைவரும் எழுந்து நிற்கின்றனர். தாயாரும், இரண்டு பெண் குழந்தைகளும் உதியமானை உபசரிக்க முயல்கின்றனர். ஆனால் உதியமான் அவைகளை மறுப்பதுபோல் பாவனை செய்கிறார். உதியமான் ஜன்னல் பக்கம் பார்க்கிறார்.]

சேர: இந்தச் செய்தியைத் தெரிவிக்கக் கிழவருக்கு மனம் வரவில்லை. ஜன்னல் பக்கம் பார்க்கிறார். [கூட்டத்தில் முணுமுணுப்பு.]

சேர: உஸ்!

[உதியமான் மெதுவாக ஒரு நாற்காலியில் உட்காருகிறான். என்ன சொல்வதென்று தெரியாதுபோல்

முன் தலையைத் தடவித் தடவிக் கொண்டிருக்கிறான்.]

சேர: உட்கார்ந்து கொண்டு விட்டார்.

[உள்ளிருக்கும் அனைவரும் உட்கார்ந்து கொண்டு விட்டனர். உதியமான் ஏதோ மெதுவாகச் சொல்கிறான். எல்லாரும் உற்றுக் கேட்கின்றனர். திடீரென்று தாயார் மட்டும் இடத்தை விட்டு எழுந்திருக்கிறாள்.]

பெருந்: ஓ! தாயாருக்கு விஷயம் தெரிந்து விட்டது.

[தாயார் துக்க மிகுதியால் முகத்தை மறைத்துக் கொள்கிறாள். வெளியிலுள்ள கூட்டத்தில் சிறிது பரபரப்பு உண்டாகிறது.

சேர: உஸ்! இன்னும் அவர் விஷயத்தைத் தெரிவிக்க வில்லைபோலிருக்கிறது.

[தாயார், உதியமானை ஏதோ கேட்கிறாள். உதியமான் பதில் சொல்ல, எல்லாரும் எழுந்து விட்டனர்.]

சேர: அவர் எல்லாவற்றையும் சொல்லி விட்டார்!—சொல்லி விட்டார்—

கூட்டத்தில் சப்தம்: சொல்லி விட்டார்! சொல்லி விட்டார்!—

சேர: எனக் கொன்றும் கேட்கவில்லை.

[உள்ளே, உதியமான் எழுந்து கதவு பக்கமாகத் திரும்புகிறான். தாயார் வெளியே செல்ல முயல்கிறாள். அதை உதியமான் தடுக்கிறான்.]

கூட்டத்தில் சப்தம்: அவர்கள் வெளிச் செல்கிறார்கள்! வெளிச் செல்கிறார்கள்!—

[கூட்டத்தில் கலவரம். கூட்டத்தினர் வெளிக் கதவு பக்கமாகச் சென்று மறைந்து விடுகின்றனர். குடிசையிலிருக்கப் பட்டவரும் வெளியே சென்று விடுகின்றனர். அறையில் கைக் குழந்தை மாத்திரம் தூங்குகிறது.]

சேர: அம்மட்டும் கைக் குழந்தை விழித்துக் கொள்ள வில்லை.

[செல்கிறான்.]

முடிவு.

இங்கிலாந்தில் எல்டன் என்ற ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. இதுதான் இங்கிலாந்திலேயே மிகச் சிறிய கிராமம். இதன் ஜனத்தொகை மொத்தம் ஒன்பது பேர். இதில் மூன்று பேர் குழந்தைகள். இந்தக் கிராமத்தில் மொத்தம் மூன்று வீடுகளே இருக்கின்றன.

ஞானக்களஞ்சியம்

வேதாந்த ரகசியங்கள்

—ரா. ஸ்ரீனிவாசன்

(அன்னார் மகன் ஸ்ரீ ராமசந்திரன் உதவியது)

சமய முணராமை :—

கணவன் முன்னிலையில் கையைக் கடித்த ரஹஸ்யம்

ஒரு ஸ்திரீ தனது நோயாளியாகிய நாயகனுக்குப் பணி விடைகள் செய்து கொண்டிருக்கும் பொழுது ஒருநாளிரவு சுமார் 12 மணி நேரத்தில் திருடுவதற்காக வந்த சோரன் இவர்களுடைய வீட்டிற்குள் தன் படியே குதிக்கும்படி நேர்ந்தது. நோய்ப் படுக்கையிற் கிடந்துழன்ற பர்த்தாவினுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆவலாலும், என்ன நடக்கப் போகின்றதோ என்ற குழப்பத்தாலும் அந்நாரீமணியானவள் வெகு பரபரப்புடன் திருடனது இரு கைகளையும் முறுக்கிப் பிடித்துக் கொண்டு 'கூஹூ' என்று உரத்த சத்தமிட்டாள். திருடன் ஓடிப் போவதற்கு யாதொரு வழியுங் காணாது பரக்கப்பரக்க விழித்துக் கலங்கிக் கொண்டிருக்கும்பொழுது, நோய்ப் படுக்கையில் படுத்திருந்த புருஷன் அத்திருடனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:—

அடே! மூடா! நீ எங்கு தப்பியோடப் பார்க்கின்றாய்? அது ஓர் காலத்தும் நடவாதெனத் தெரிந்து கொள். கையைக் கடிக்கின்ற விஷயத்தில் என் மனைவிக்கிருக்கின்ற சாமர்த்தியத்தைப் போல் மற்று எவர்க்குமில்லையென்பதனை நீ கேள்வியுற்றதில்லை போலும்!

இவ்வளவு கேட்டவுடனே திருடன் அந்த ஸ்திரீயினுடைய கைகளில் பலமாக ஒவ்வொரு கடி கடிக்கவும், கடித்த அக்கணமே திருடனது கைகளை அப்பெண்மணி விட்டு விடவும், சோரன் குபீரென்று பாய்ந்து உயிர்பெற்று ஓடிவிடவும் நேர்ந்தது. இதுபோலவே சில அவிவேகிகள் சந்தர்ப்பத்திற்கு முரணாய்க் கிடைத்த நன்மையையு மழிப்பதாயுள்ள தம் மார்க்கங்களையும் துர்யுக்திகளையும் பற்றிச் சதாபேசுவதும் கேட்பதுமாயிருப்பதால் அவர்களுக்குள் எப்பொ

ழுதும் கெட்ட காரியங்கள் பெருகிக் கொண்டேயிருக்கும். ஆதலால், இக ழுத்தக்கதும் வஞ்சனையுள்ளதுமாகிய வார்த்தைகளைச் செவிகொடுத்துக் கேட்பதற்குக்கூட இடங்கொடாம லிருக்க வேண்டும். அல்லது ஒருக்கால் கேட்கும்படி நேருமாயின் அவற்றை யுடனே மறந்துவிடவும் வேண்டும். ஆனால் நன்மையளிக்கும் நல்வார்த்தைகளைக் கேட்டு அவற்றை மறவாது—ஞாபகத்தில் — வைத்துக் கொள்ள வேண்டிய தத்தியாவசியக மாம்.

சந்தேக பக்தி :—

ஒட்டுமாங்கன்றும் விவசாயியும்

முன்னொரு காலத்தில் ஒரு விவசாயி, தனது நண்பனளித்த வெகு விசேஷமாகிய ஓரொட்டுமாங்கன்றைத் தன் கண்பார்வையிலுள்ளதும் வீட்டிற்குப் பக்கத்தேயுள்ளதுமாகிய தோட்டத்திலொரு குழி தோண்டி அதில் நட்டுத் தண்ணீர் வார்த்தபின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அப்பாலடுத்த நாளன்று விடியுமுன் அச் செடியினது பக்கத்திற்சென்று 'எவ்வளவு தூரம் வேரிறங்கி யிருக்கின்றது பார்ப்போம்; புதிய இலைகளொன்றும் விடவில்லையல்லவா? ஒருக்காலிந்த மண் இதற்குப் பிடியாமலிருக்குமோ?!' என்று சொல்லிக் கொண்டே அம்மாங்கன்றைப் பிடுங்கிச் சோதனை செய்து பார்த்தான். பிறகு தன்னுடைய வேறோர் தோட்டத்தில் அதை முன் போலவே நடலாயினன். பின்னர் இரண்டு நாள் சென்றவுடன் 'மண் பிடித்திருக்கின்றதா?' வேர் நன்றாக இறங்கியிருக்கின்றதா?' என்றறிவதற்காக முன் போலவே கன்றைப் பிடுங்கிப் பார்த்தான். இவ்வாறு அநேகந் தடவை பல தோட்டங்களிலும் நட்டுப் பிடுங்கிக் கொண்டே வந்ததனால் முடிவில் மாங்கன்றின் கதை முற்றுப் பெற்றது.

இவ்விதமாகவே சந்தேகம் நிறைந்த பக்தர்கள் சிலநாள் விஷ்ணுவைஉபாசிப்பார்கள். பிறகு என்ன! விஷ்ணுவை உபாசிப்பதனால் யாதொரு பயனு முண்டாகாது! உபாசிக்க வேண்டுமானால் சிவனை யல்லவோ உபாசிக்க வேண்டும்?' என்று புகன்று சிவனைச் சேவிக்கத் தொடங்குவார்கள். அதன் பிறகும் சிலநாட் செல்லவே தமது கோருதல் நிறைவேறாமையால் சிவனைத் தள்ளி கணபதியையும், சுப்பிரமணியனையும், சூரியனையும், தேவியையும் முன்போலவே மாறிமாறிச் சேவித்தும் தள்ளியும் முடிவில் ஒருவருடைய பிரீதிக்கும் பாத்திரமாகாமல்,

'ஸம்சயாத்மா விநச்யதி'

'சம்சயங் கொண்டவன் சாவான்,

என்ற கண்ணன் திருவாய் மொழிப்படி சம்சயமே யுருவமா யமைந்த அந்த பக்தர்கள் வீணே மடிந்து போகின்றார்கள். ஒட்டுமாங்கன்றை ஒரே யிடத்தி லூன்றி யிருந்தால் அது எங்ஙனம் பெரிய விருக்ஷமாகிச் சாகோபசாகைகளாய் வளர்ந்து அமுதத்திற் கொப்பாகிய கனிகளையளிக்குமோ அங்ஙனமே,

விச்வாச: பலதாயக:

'விசுவாசம் வேண்டியது கொடுக்கும்'

என்ற நியாயப் பிரகாரம் ஏதேனுமொரு தெய்வத்தி னிடத்தில் திடவிசுவாசத்தோடு மனத்தை யூன்றி'

யுபாசித்து வருகின்ற நிர்மல சித்தத்தினை யுடையவர்களாகிய பக்தர்கள் 'சர்வ அபீஷ்டங்களையும் பெற்றுக்' கடைசியில் அமிர்தமாகிய மோக்ஷத்தையும் அடைவார்களென்பதிற் சிறிதும் சந்தேகமின்றும்.

அடாத இறுமாப்பு:—

பலாமரமும் பேய்ச்சுரையும்.

மிகவுஞ் சுவை பொருந்திய தீங்கனிகளால் நிறையப் பெற்றதோர் பலா மரத்தில் ஒன்றுக்கு முதவாத ஒரு பேய்ச் சுரைக்கொடி படர்ந்தேறி அம்மரத்தினது நுனியையுந் தாண்டி, சிரத்தை யுயரத் தூக்கிச் செருக் கடைந்து பலாமரத்தை நோக்கிப் பின் வருமாறு ஒரு கேள்வி போடலாயிற்று:—

'ஓ நண்பனே! நீ பூமியின் சமதளத்தினின்றும் உயரமாக வளர்ந்து வருவதற்குப் பல வருஷகாலமாய் மிகக் கடினமான சீதோஷ்ணங்களை யும்—காற்று, பனி முதலியவைகளையும்—அனுபவிக்க வேண்டியதாய் நேர்ந்ததல்லவா? எனக்கோ வென்றால், அத்தகைய—யாதோர் முயற்சியுமின்றி இச்சொற்ப காலத்திற்குள்ளேயே உன்னுடைய உயர் முடியையுந் தாண்டி (ஏன்? இன்னுஞ் சிறிததிகமாகவே) உயரும்படி நேர்ந்திருக்கின்ற இச்சங்கதியைப் பார்த்தால் உன்னிலும் நானெத்தனையோ பங்கு யோக்கியனும் சாமர்த்தியசாலியுமா யிருக்கின்றேனென்பது ஸ்பஷ்டமாம்.'

இதைக் கேட்ட பலாமரம் சுரைக் கொடியைப் பார்த்து அளித்த விடையாவது:—

'என்னுடைய சரீரமும் என்னிடத்தினின்று முற்பத்தியாகின்ற பழங்களும் எல்லா விதத்தாலும் மானிட வர்க்கங்களுக்கு மிகப் பிரயோஜனகரங்களும் கொண்டாடத் தக்கவைகளுமாம். உன்னாலேயோ வெனில் மனிதர்களுக்கு 'அதிகமாக யாதொரு பிரயோஜனமு முண்டாவதற்கில்லை யென்பதோடு மட்டுமல்ல. ஒரு மழையினாலுண்டாகா நின்ற நீ, ஒரே நாளைய உக்கிர வெயிலினால் வாடி வதங்கிப் பெயர் மாத்திரம் மீந்தவனாய் உனது ஜன்மத்தை அன்றோடு முடித்துத் தீர்ப்பாய். ஆனால் நானோ, மிகுந்த குளிர் வெப்பங்களைச் சகித்திருப்பவனாதலால் ஒரு நாளைய வெயிலினாற் காய்ந்து போகின்றவனல்லேன்.'

இதுபோலவே எத்தனையோ யோக்கியதைகளைச் சம்பாதித்திருக்கின்ற மஹான்களையும் சிலர் பேய்ச் சுரைக் கொடியைப்போல் துராக்ஷேபஞ்செய்து யோக்கியர்களாகிவிட பகீரதப் பிரயத்தனஞ் செய்கின்றார்கள். மஹாத்துமாக்களாவதற்குரிய உபாயங்கள் எவ்வளவோ உண்டு. துராக்ஷேபஞ் செய்வதற்கோ அல்லது பொருத்தமில்லாது வாயில் வந்த வண்ணம் பிதற்றுவதற்கோ அவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லையல்லவா? ஆகவே, இக் கதையினால் பலா மரத்தையும் பேய்ச் சுரைக் கொடியையும்போல் முறையே மஹான்களையும் துர் ஜனங்களையும் மஹா ஜனங்கள் அறிந்து கொள்வார்களாக.

நல்ல புத்தி

(சரத் சந்திர சட்டர்ஜி)

வங்காளி மூலத்திலிருந்து மொழி பெயர்த்தவர்

—எஸ். கிருஷ்ணன்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

இதற்குப் பின் குடம் குடமாக ஜலத்தை நிரப்பி வீட்டு முற்றத்தைச் சேறு ஆக்கி அரசு வைத்து முடிப்பதற்குள் நாராயணி ஆற்றிலிருந்து குளித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தாள். இதுவரை திகம்பரி தனக்குள்ளேயே நீறிக் கொண்டிருந்தாள். அவள் கண் முன்னாலேயே இந்த காரியம் ஆரம்பமாகி முடிவடைந்து கொண்டிருந்தது. பெண்ணைப் பார்த்ததும் கத்தினாள்—உன் மச்சினன் காரியத்தைப் பார். நடு முற்றத்தைத் தோண்டி அரசமரம் வைத்துவிட்டு சொல்கிறான். நிழல் கிடைக்குமாம். அதோ பின்னாலே பார். விஷமக்காரப் பயல் போலாவைப் பார். வீடு முழுவதும் மூங்கிற் காடாய் பண்ணிவிட்டான். அதை மூடப் போகிறானும்.

நாராயணி திரும்பிப் பார்த்தாள். நிஜமாகவே போலா மூங்கிற் கழிகளை கட்டு கட்டாக இழுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். போலாவுக்கும் ராமனுக்கும் ஒரே வயது கிட்டத்தட்ட. நாராயணிக்குச் சிரிப்பு வந்தது. அம்மாவின் கோபாவேசம், ராமனுடைய பைத்தியக்காரத்தனம் எல்லாம் அவளுக்கு வேடிக்கையாகவே தோன்றிற்று. சிரித்துக் கொண்டே கேட்டாள் 'முற்றத்தில் அரசமரம் ஏதுக்கடா?'

ராமன் ஆச்சரியத்துடன் கேட்டான் :—'ஏதுக்கா? நல்ல குளிர்ந்த நிழல் கிடைக்கும். அந்தச் சிறு கிளை பெரிதாகி விட்டால்—அடே கோவிந்தா விரலைக் காட்டாதேடா—பெரிசாகாது—பெரிதானதும் அதில் ஊஞ்சல் போட்டு ஆடுவோம். கோவிந்தனை நன்றாக ஆட்டுவோம். போலா, கொஞ்சம் அரிவாளை எடுத்துவா. நன்றாக மூடாவிட்டால் கருங்குருவி கழுத்தை நுழைத்துத் தின்றுவிடும்.' இவ்வளவு சொல்லிவிட்டு அவன் மூங்கிலை படபடவென்று ஒடிக்க ஆரம்பித்தான்.

நாராயணி சிரித்துக் கொண்டே குடத்தை இறக்கி வைக்க சமையல் அறைக்குப் போனாள்.

திகம்பரி கண்ணில் நெருப்புப் பொறி பறந்தது. பெண்ணைப் பார்த்துக் கேட்டாள். 'ஏன் பேசாமலிருக்'

கிறாய்? இப்படியே மரம் வைக்க விட்டு விடுவதா?

நாராயணி சிரித்துக் கொண்டே சொன்னாள்:—'இவ்வளவு பெரிய மரம் இங்கே வளருமா என்ன? நீ ஏன் பயப்படுகிறாய்? இதிலே வேரிருந்தால்தானே நீர் விட்டால் வளரும்? அது நாளைக்கே வாடிவிடப் போகிறது.

திகம்பரியின் கோபம் தணியவே யில்லை. சொன்னாள்—'வாடவா போகிறது? இதைப் பிடுங்கி எறிய வேண்டும்.'

நாராயணி திடுக்கிட்டுப்போய் சொன்னாள்:—'அப்பாடியோ! பிடுங்கி எறிந்து விட்டால் அப்புறம் வீட்டிலேயே இருக்க முடியாதே.'

திகம்பரி சொன்னாள்—'இஷ்டம் போல் முற்றத்தில் அரசு வைக்க வீடு அவனுடையது மட்டும்தானா? நீ இந்த வீட்டுக்காரி அல்லவா? நம் கோவிந்தன் ஒருவன் இல்லையா? கடவுளே—ஊரிலுள்ள காக்காய் கழுகு பருந்து எல்லாம் குடி இருக்க ஆரம்பிக்குமே. நாராயணி, என்னால் இங்கே இருக்க முடியாது. அவனுக்கு நீ ஏன் இப்படி பயப்படுகிறாய்? இது என் வீடு மட்டுமாயிருந்தால் இவனை ஒரே நாளில் சரிப்படுத்திவிட மாட்டேனா?'

நாராயணி தாயின் மனதைக் கண்ணாடியில் காண்பதுபோல் அறிந்தாள். கொல்லென்று சிரித்தாள். சொன்னாள்—'சின்னப் பையன் தானே அம்மா. இப்போதே இவ்வளவு தெரிந்துவிடுமா? தெரிந்திருந்தால் வீட்டு முற்றத்தில் அரச மரம் வைப்பானா? இரண்டு நாள் பொறுத்துப்பாரேன். தானாகே பிடுங்கி எறிந்து விடுகிறான்.'

திகம்பரி சொன்னாள்—'பிடுங்கி எறிவானா? அவன் ஏன் பிடுங்கி எறிகிறான்? நானே எறிந்து விட்டால் போச்சு.'

நாராயணி சொன்னாள்—'இல்லை அம்மா, அப்படி செய்து விடாதே அம்மா. அவனை உனக்குத் தெரியாது. என்னைத் தவிர அவனுடைய அண்ணாகூட அவனைத் தொட பயப்படுகிறார்கள். இன்றைக்கு இருந்து விட்டுப் போகட்டும். அப்புறம் பார்த்துக் கொள்ளலாமே.'

திகம்பரி கோபத்துடன் சொன்னாள்—'சரி சரி நீ போய் புடவை கட்டிக்கோ.'

மத்தியானம் நாராயணி உட்கார்ந்து தலையணைக்கு உறை தைத்துக் கொண்டிருந்தாள். இதற்குள் வேலைக்காரி வந்து சொன்னாள்—'அம்மா! காரியம் கெட்டுப்போய் விட்டதே. பாட்டியம்மா சின்ன ஐயாவுடைய அரச மரத்தைப் பிடுங்கி எறிந்து விட்டாள். பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்ததும் எங்களை ஒருவரையும் பாக்கி வைக்க மாட்டாரே.'

நாராயணி தையல் வேலையை விட்டு எழுந்து வந்து பார்த்தாள். அரச மரத்தைக் காணவில்லை.

அம்மாவிடம் கேட்டாள்—'ராமனுடைய அரச மரம் எங்கே இருக்கிறது?'

திகம்பரி பானை போல் முகத்தைத் தூக்கிக் கொண்டு சொன்னாள்—'அதோ கிடக்கிறது பார். திகம்பரி, அதைத் துண்டு துண்டாய்

ஒடித்துப் போட்டிருப்பதைக் கண்டாள். பேசாமல் அதை எடுத்து வெளியே எறிந்துவிட்டுத் தன் அறைக்குள் போய் விட்டாள்.

பள்ளிக்கூடத்தி லிருந்து திரும்பி வந்ததும் வராததுமாய் ராமன் தன் அரசமரத்தைப் பார்க்கப் போனான். பார்த்ததும் ஒரே குதி. புத்தகம் சிலேட்டு நோட்டுபுக்கு எல்லாவற்றையும் வீசி எறிந்தான். கூச்சலிட ஆரம்பித்தான்—'மதனீ என் மரம்?'

நாராயணி அறையிலிருந்து வெளியே வந்து சொன்னாள்—சொல்கிறேன் இங்கே வா.

'இல்லை. வர மாட்டேன். மரம் எங்கே போச்சு? சொல்லு?'

'இங்கே வாயேன் சொல்கிறேன்.'

ராமன் அருகில் வந்ததும் கையைப் பிடித்துத் தன் அறைக்குள் அழைத்துச் சென்று மடியில் உட்கார வைத்து முதுகைத் தடவிக் கொண்டே சொன்னாள்--யாராவது செவ்வாய்க்கிழமையுந்தானுமாய் அரச மரம் வைப்பாளா? அசடே!

ராமன் சாந்தமாய் கேட்டான்—ஏன் வைக்கக்கூடாதா? வைத்தால் என்ன?

நாராயணி சிரித்துக் கொண்டே மறுபடி சொன்னாள்—வீட்டுப் பெரிய அம்மா இறந்து போய்விடுவாள். ஆதலால் செவ்வாய் கிழமையன்று அரசு வைக்கிறதில்லை.

ராமனுடைய முகம் ஒரு நிமிஷம் வாடிப் போயிற்று. கேட்டான்—'இல்லை, நீ பொய்தானே சொல்கிறாய்?'

நாராயணி சிரித்துக் கொண்டே சொன்னாள், 'மதனி எப்போதாவது பொய் சொல்லி யிருக்கிறேனா? பஞ்சாங்கத்தில் எழுதியிருக்கிறது பொய் யாகுமா?'

'பஞ்சாங்கத்தைக் கொடு. பார்க்கட்டும்.'

நாராயணி திகைத்துப் போனாள். சட்டென்று ஆச்சரியம் அடைந்தவள் போல் பாவனை செய்து கொண்டு சொன்னாள்—'இப்படியும் ஒரு பையனா? யாராவது செவ்வாய்க் கிழமை பஞ்சாங்கம் பார்ப்பார்களா? போலாவுக்குக் கூடத் தெரியுமே—சரி அவனைக் கூப்பிடு.

தன் அறிவீனத்தை போலா அறியப் போகிறானே என்று பயந்து அன்னை போல் வளர்த்த மதனியின் கழுத்தில் கைகளைப் போட்டுக்கொண்டு தலையை அவள் மார்பில் சாத்திக்கொண்டே சொன்னான்—'தெரியும் இது. எனக்கும் தெரியும். ஆனால் பிடுங்கி எறிந்து விட்டால் பிறகு தோஷம் இல்லையே மதனீ?'

நாராயணி அவன் தலையை மார்போடு அணைத்துக் கொண்டே சொன்னாள்—'இல்லை. இனிமேல் தோஷமில்லை'. அவள் கண்களில் நீர்த் துளி அரும்பிற்று. இனிய குரலில் கேட்டாள் 'ஏண்டா ராமா! நான் செத்துப் போய் விட்டால் நீ என்ன செய்வாய்?'

ராமன் பலமாய் தலையை அசைத்துக் கொண்டே சொன்னான்—'சீ! அப்படி சொல்லக்கூடாது.'

நாராயணி கண்ணைத் துடைத்துக் கொண்டே சொன்னாள்—'கிழவியாய் விட்டேன். இனிச் சாக வேண்டியது தானே'

மதனி வேடிக்கையாய் பேசுகிருள் என்று ராமன் இப்பொழுதுதான் உணர்ந்தான். சிரித்துக் கொண்டு சொன்னுன்—'நீயா கிழவியாய் விட்டாய்? ஒரு பல்லுகூட விழவில்லை. ஒரு தலை மயிர்கூட நரைக்கவில்லை!'

நாராயணி சொன்னுள்— தலை நரைக்காவிட்டால் என்ன? ஒரு நாள் ஆற்றில் மூழ்கிச் செத்து விடுகிறேன். குளிக்கப் போன பிறகு திரும்பி வர மாட்டேன்.

'ஏன் மதனி?'

உன்னாலேதான்! எப்போதும் எங்க அம்மாகூட சண்டை போடுகிருய்—நான் திரும்பி வராதிருந்தால் உனக்குத் தெரியும்.

இந்தப் பேச்சை ராமன் நம்பிவிடவில்லையானுலும் அவன் மனம் உதைத்துக் கொண்டது. ஆனுல் அவள் என்னை ஏன் சண்டைக்கிழுக்கிருள்?

சண்டைக்கிழுக்கட்டுமே. அவள் எங்கம்மா, பெரிய கிழவி. என்னிடம் பிரியமாய் இரேன், இருக்கிருயா?'

ராமன் தன் தலையை மதனியின் மார்பில் சாத்திக் கொண்டான். இதே இடத்தில் முகம்வைத்து பதின் மூன்று வருஷங்களாய் பெரியவன் ஆகியிருக்கிருன். பின் எப்படி இவ்வளவு பெரிய பொய் சொல்ல முடியும்? அவனுல் இது சொல்ல முடியவே முடியாது.

நாராயணி தழுதழுத்த குரலில் கேட்டாள்—'முகத்தை மூடிக்கொண்டால் போதுமா?'

இதே சமயம் திகம்பரி வந்து சேர்ந்தாள்—இனிய குரலில் சொன்னுள்—'உனக்கு வேலை இல்லையா நாராயணி? இங்கே மச்சினனை வைத்துக் கொஞ்சி குலாவு. அங்கே உன் குழந்தை எக்கேடு கெட்டால் என்ன?'

ராமன் தலையைத் தூக்கிப் பார்த்தான். அவன் கண்முன் பசியெடுத்த சிங்கத்தின் கண்கள்போல் பிரகாசித்தன.

நாராயணி அவன் தலையை தன் மார்பில் அணைத்துக் கொண்டு கேட்டாள். 'குழந்தைக்கு என்ன கேடு?'

'என்னவா? நன்னுருக்கு' என்று சொல்லிக் கொண்டே திகம்பரி வெளியே சென்றுள்.

திகம்பரியால் சமயத்துக்கேற்ற பொய்கூட கட்டிச் சொல்ல முடியவில்லை.

ராமன் தலையைத் தூக்கிக்கொண்டு சொன்னுன்—'அந்தப் பிசாசினுடைய கழுத்தைத் திருகி விடுகிறேன் பார்.'

நாராயணி அவன் வாயைப் பொத்திக்கொண்டே சொன்னுள்—'பேசாதே போக்கிரி. அவள் எங்க அம்மா இல்லையா?'

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ராமன் ரொட்டியை சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் வேகமாய் 'உஸ் உஸ்' என்று சத்தமிட ஆரம்பித்தான். இரண்டு மூன்று முறை தண்ணீர் குடித்துவிட்டு தட்டை வீசி எறிந்தான்—எழுந்து நின்று ஆட ஆரம்பித்தான்—இந்தப் பிசாசு பண்ணின ரொட்டியை நான் சாப்பிடவே மாட்டேன். மிளகாய்ப் பழத்தைப்போட்டு வாய் காந்தித் துடிக்கிறது. மதனீ! அடியே மதனீ!

ஜபித்துக் கொண்டிருந்த நாராயணி கூக்குரல் கேட்டு எழுந்து வந்து

கேட்டாள்—'ஏண்டா என்ன வந்து விட்டதடா?'

கோபம் அதிகமாய் ராமன் அழ ஆரம்பித்தான். 'நான் சாப்பிடவே மாட்டேன். அவள் சமைத்தால் நான் சாப்பிடவே மாட்டேன். அவளை வெளியே விரட்டு.' என்று சொல்லிக் கொண்டே விரைவாய் வெளியே போய்விட்டான்.

நாராயணி திகைத்துப் போய்விட்டாள். அம்மாவிடம் சொன்னாள்—'அம்மா கறிக்குக்குறைவாய் மிளகாய் போடு என்று நான் சொல்லிக் கொண்டே வருகிறேனே இல்லையோ? மிளகாயைத்தான் கொஞ்சம் குறைவாகப் போட்டால் என்ன? இவ்வளவு காரம் இங்கு யாரும் சாப்பிட மாட்டார்கள்.'

திகம்பரி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. அவள் சொன்னாள்—'நிறைய மிளகாய் போட்டிருந்தால் தானே. தாளித்துக் கொட்டுகையில் இரண்டு மிளகாய் விழுந்து விட்டால் தான் என்ன? அதுக்கு இந்த ஆர்ப்பாட்டமா?'

நாராயணி கோபத்துடன் சொன்னாள்—'இரண்டு மிளகாய் போதாதா? சாப்பிடவே மாட்டேன் என்கிற போது'.

'பேசாமலிரு நாராயணி. வாயை மூடு. எனக்குச் சமையல் சொல்லிக் கொடுக்க வந்திருக்கிறாள். அடுப்பங் கரையில் உழைத்து உழைத்துத் தலை கூட நரைத்தாகிவிட்டது. இனிமேல் தான் பெண் சமையல் சொல்லித் தரப் போகிறாள். நான் பெண் பிறந்தேனே.'

நாராயணி பேசாமல் சமையல் அறைக்குப் போய் சமையலுக்கு வேண்டிய சாமான்களை மறுபடியும் சேர்த்து வைக்க ஆரம்பித்தாள்.

திகம்பரி வாசற்பக்கம் போய் காலை நீட்டி உட்கார்ந்து கொண்டு கத்த ஆரம்பித்தாள்—'ஐயோ அம்மா! நீ எங்கே போய்விட்டாய்? என்னையும் அழைத்துப் போயேன். பொறுக்கவே முடியவில்லை. வாயில் வந்ததைச் சொல்கிறார்கள். நான் கிழவி! பிசாசு! என்னை வெளியே அடித்துப் பற்றிவிடு. நான் மாப்பிள்ளை வீட்டுச் சோறு தின்ன வந்திருக்கிறேன். தூக்குப் போட்டுக் கொள்ள கயிறுகூட அகப்படவில்லை. வீட்டுக்கு வீடு பிச்சை யெடுத்து வயிறு வளர்த்தாலும் இதைவிட நன்றாய் இருக்கும். ஸரோ! வா குழந்தாய்! இனி இந்த வீட்டுச் சோறு தின்பதும்—'

சுரதுனி அழுமூஞ்சியுடன் தாய் அருகே போய் நின்று கொண்டாள். திகம்பரி அவள் கையைப் பிடித்துக் கொண்டு வெளியே போகப் புறப்பட்டாள்.

கறிக்கு நறுக்கிக் கொண்டிருந்த நாராயணி எழுந்து வந்து வாசலில் நின்று கொண்டாள்.

திகம்பரி அழுது கொண்டே சொன்னாள்—'எங்களைத் தடுக்காதே நாராயணி. விட்டுவிடு. தடுக்காதே நாராயணி. காட்டில் பட்டினி கிடந்து சாகலாம். இந்த வீட்டு ஒரு அரிசி கூட சாப்பிடக் கூடாது.'

நாராயணி கைகுவித்துக் கேட்டாள்—'யாரிடம் கோபித்துக் கொண்டு போகிறாய்? நாங்கள் தவறொன்றும் செய்ய வில்லையே.'

திகம்பரி வாய்விட்டு அழ ஆரம்பித்தாள். விம்மிக் கொண்டே சொன்னாள்—'நான் சின்னக் குழந்தையல்ல. எனக்கு எல்லாம் தெரியும். நீ இடம் கொடுக்கா விட்டால் அவன் இப்படி தலைகால் தெரியாமல் துள்ளுவானா? நான் பிசாசு. அடித்து விரட்டு. நல்லது—நானே போய் விடுகிறேன். நாங்கள் உங்களுக்கு சுமையாய் வந்து சேர்ந்திருக்கிறோம். வழியிலிருந்து ஒதுங்கு. போகட்டும்'.

நாராயணி தாயின் காலைப் பிடித்துக் கொண்டு சொன்னாள்—'இன்றைக்கு மன்னிப்புக் கொடு. அவர் வந்தபின் இஷ்டம்போல் செய்'. கையைப் பிடித்து உள்ளே இழுத்துச் சென்றாள். பிறகு காலைக் கழுவி முன்தானையால் துடைத்து விசிறி எடுத்து விசிற ஆரம்பித்தாள். திகம்பரிக்குத் தற்காலம் கோபம் தணிந்தது. ஆனால் மத்தியானம் சாமலால் சாப்பிட உட்கார்ந்ததும் கதவு மறைவில் உட்கார்ந்து கொண்டு ஏங்கி ஏங்கி அழ ஆரம்பித்தாள். முதலில் சாமலால் பார்த்து அப்படியே திகைத்துப் போய்விட்டார். விஷயம் என்ன வென்று அறிய முடியவில்லை. பிறகு எல்லாம் ஊகித்து அறிந்து கொண்டு வயிறு நிறைய உண்ணாமல் எழுந்து சென்றார்.

இந்தக் கோபம் யார்மேல் உள்ள தென்று நாராயணிக்குத் தெரியும். வேலைக்காரியால் ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. ஒளிக்காமல் மறைக்காமல் உள்ளதைச் சொல்லும் சுபாவம் உள்ளவள். சட்டென்று சொல்லி வைத்தாள்—'பாட்டி வேண்டுமென்றே பாபுவைச் சாப்பிட ஒட்டாமல் அடித்தாள். பாட்டியம்மா மனதில் நினைக்குமுன் கண்ணீர் சொரிந்து விடுகிறது!'

திகம்பரி முகத்தில் கரியைப் பூசினாற்போல் இருந்தது. வாய் திறவாமல் உட்கார்ந்திருந்தாள்.

மத்தியானம் எங்கெல்லாமோ அலைந்து திரிந்துவிட்டு ராமன் வீட்டுக்கு வந்தான். தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டே மதனி அறைக்குள் போய்ச் சேர்ந்தான். மதனி கோவிந்தனை பக்கத்தில் போட்டுக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தாள். மொத்தத்தில் லக்ஷணம் சரியாய் இல்லை என்று கண்டான். மெதுவாய் சொன்னான்—'பசிக்கிறது.'

மதனி பதிலளிக்கவில்லை.

இன்னும் உரக்கச் சொன்னான்—'நான் என்ன சாப்பிடணும்?'

நாராயணி படுத்தபடியே சொன்னாள்—'எனக்குத் தெரியாது. இங்கிருந்துபோ.

'இல்லை போகமாட்டேன். எனக்குப் பசிக்கிறதே.'

நாராயணி திரும்பிப் படுத்துக் கொண்டு துயரம் நிறைந்த குரலில் சொன்னாள்—'என்னைக் கஷ்டப் படுத்தாதே. நித்தோவைக் கேள்.

ராமன் பேசாமல் வெளியே போய் விட்டான். வேலைக்காரியைத் தேட ஆரம்பித்தான். பார்த்ததும் 'சாதம் போடு' என்றான்.

வேலைக்காரி எல்லாம் சரிப்படுத்தித் தான் வைத்திருந்தாள்.

கிண்ணம் நிறைய பாலும் பக்ஷணமும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

ராமனுக்கு கோபம் வந்துவிட்டது. கேட்டான்—'இவ்வளவுதானு?'

வேலைக்காரி சொன்னுள்—பாபு! பேசாமல் சாப்பிடுங்கள். அதுதான் நல்லது. பெரிய பாபு சாப்பிடாமல் கச்சேரிக்குப் போயிருக்கிருர். உங்கள் மதனியும் சாப்பிடவில்லை. உங்கள் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்தால் உங்களுக்குத்தான் கஷ்டம். தெரிந்ததா?'

ராமன் எல்லாவற்றையுக் பார்த்த பின்பே வந்திருந்தான். பேசாமல் பாலைச் சாப்பிட்டுவிட்டு பக்ஷணத்தை பையில் போட்டுக் கொண்டு குளத்துப் பக்கத்திலுள்ள மரத்தடியில் போய் உட்கார்ந்தான். ஒன்றும் சாப்பிடப்பிடிக்கவில்லை. மதனி பட்டினி கிடக்கிருள் என்று அடிக்கடி அவன் மனதில் தோன்றிற்று. அவன் எதையோ நினைத்துக் கொண்டு பொரியைத் தின்ருன். அவன் எண்ணிஞன்—'முன் காலத்து முனிவரைப் போல் மந்திர சக்தி யிருந்தால் அங்கிருந்தபடியே மதனி பசியைத் தீர்த்திருக்கலாம். ஆனுல் மந்திரம் தெரியாதே. இன்னும் ஏதாவது உபாயமிருக்கிறதா? ஒன்றும் தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி வந்து மதனியை சாப்பிடக் கெஞ்சுவது வெட்கக்கேடான காரியம். மேலும் அண்ணு சாப்பிடாதபோது மதனி எப்படி சாப்பிடுவாள்? கெஞ்சிக் கேட்டாலும் பயனில்லை. தின்று கொண்டிருந்த பக்ஷணத்தை குளத்தில் வீசி எறிந்தான். அங்கேயே உட்கார்ந்து விட்டான். 'மதனி பட்டினி கிடக்கிருள்? இதுவே அவன் உள்ளத்தில் எழுந்த நினைவு. இது விதவிதமாய் தோன்றவே அவன் மனதில் பல ஊசிகள் ஒரே சமயம் குத்தி இறங்குவது போன்ற வேதனை!

இரவு, சாமலால் மனைவியிடம் சொன்னுர்—'இன்னும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அவன்கூட இருப்பது முடியாத காரியம்.'

நாராயணி பிரமித்துப் போனுள். கேட்டாள்—'யாரைப்பற்றிப் பேசுகிறீர்கள்?'

'ராமனைப்பற்றி! ராமன் உன் தாயாரை சும்மா அவமானப் படுத்துகிருனும். உங்கம்மா நாலைந்து நாட்களாகவே சொல்லி வருகிருள். பஞ்சாயத்தைக் கூட்டி அவனுக்கு உள்ள பங்கைப் பிரித்துக் கொடுத்து அவனை வேறு படுத்த நினைக்கிறேன். இன்னும் சகிக்க முடியாது.

நாராயணி திகைத்துப் போய்விட்டாள். சில நிமிஷம் பேசாமலிருந்து விட்டு கேட்டாள்—ராமனை வேருக்கி விடுவீர்களா? இதைப்பற்றிப் பேசக் கூடாது. அவன் பால்மனம் மாருத குழந்தை. நிலம், பணம் எல்லாவற்றையும் வைத்து அவன் என்ன செய்வான்? சொல்லுங்கள்!'

(தொடரும்)

பண்டித விஷன் நாராயண தர்

ஜனனம்—1864 மரணம்—1916

—"காங்கிரஸ் வாதி"

1911ம் வருஷம் டிசம்பர் மாதம் 26, 27, 28 தேதிகளில் கல்கத்தாவில் 26-வது காங்கிரஸ் கூடியது. மொத்தம் 446 பிரதிநிதிகள் ஆஜராகியிருந்தார்கள். இந்தக் காங்கிரஸுக்கு உபசரணைக் கூட்டத் தலைவரா யிருந்தவர் ஸ்ரீ பூபேந்திர நாத் பாசு அவர்கள். தலைவராயிருந்தவர் பண்டித விஷன் நாராயண தர் அவர்கள்.

புகழை விரும்பாமல் அமைதியாகத் தொண்டாற்றி ஸ்வர்க்கத்துக்குச் சென்ற மகா புருஷர்களில் இவர் ஒருவர். இவரைப் பற்றி ஸர் தேஜ் பகதூர் சாப்ரு பின் வருமாறு கூறினார்:—

பண்டித விஷன் நாராயணதர், என்னுடைய அரசியல் குருவாகவும் ஸாஹித்ய குருவாகவும் விளங்கினார். அவர் ஆங்கிலப் புலமை நிரம்பியவர். ஐரோப்பிய சரித்திரத்தில் அவருக்கு ஆழ்ந்த ஞானம் உண்டு. ரோம், கிரீஸ், பிரான்ஸ் முதலிய தேசத்தின் சரித்திரங்கள் அவர் வாக்கிலே எப்பொழுதும் தாண்டவம் செய்து கொண்டிருக்கும். மாணுக்கர்கள், அரசியலில் கலந்து கொள்ள வேண்டுமென்று

அவர் சதா கூறிக் கொண்டு வந்தார். அலகாபாத் சர்வ கலாசாலை மாணுக்கர்களுக்கு இந்தச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வில்லையே என்று அவர் வருந்தினுர். காங்கிரஸ் ஆரம்ப காலத்தில், ஐக்கிய மாகாணம், அரசியல் விவகாரங்களில் தூக்கத்திலேயே இருந்தது என்று சொல்ல வேண்டும். பண்டிதர் அவர்கள்தான், இந்தத் தூக்கத்தினின்று மேற்படி மாகாணத்தைத் தட்டியெழுப்பினுர். ஐக்கிய மாகாணத்திலிருந்து, அவர்தான் முதன் முதலாகக் காங்கிரஸ் பிரதிநிதியாகச் சென்ருர். ஸ்ரீ கங்கா பிரசாத் என்பவர், லட்சுமணபுரியில் 'அட்வோகேட்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். இதற்குப் பண்டிதர் தான் முதல் ஆசிரியராக இருந்தார். காங்கிரஸ் பிரசாரத்தை இவர், இப்பத்திரிகையின் மூலம் திறமையாகச் செய்து வந்தார்.'

பண்டித விஷன் நாராயணதர், ஐக்கிய மாகாணத்தில் பாராபங்கி ஜில்லாவில் 1864ம் வருஷம் ஜனனமாஞர். பண்டிதர், காஷ்மீர பிராமண வமிசத்தைச் சேர்ந்தவர். இவருடைய மூதாதையர்கள் பரம்பரையான சமஸ்கிருத வித்துவான்கள். பண்டித விஷன்தர், பாலியத்தில் வீட்டிலேயே கல்வி கற்ருர். அக்காலத்திய வழக்கம் போல் உருது, பர்ஷிய பாஷைகள் இவருக்குப் போதிக்கப்பட்டன. பின்னர், ஆங்கிலக் கல்விக்காக மிஷன் ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார். இங்குப் படித்துக் கொண்டிருந்த போது, ஆங்கில நீதி நூற்கள் பலவற்றை இவர் படிக்க நேர்ந்தது. இது இவருடைய இளமை மனதில் அநேக புதிய எண்ணங்களையும் அநேக புதிய நம்பிக்கைகளையும் உண்டு பண்ணியது. இங்ஙனமே இவர் காலேஜில் படித்த போதும், தமது பாட புத்தகங்களைத் தவிர, வேறு பல ஐரோப்பிய அறிஞர் பலருடைய நூல்களையும் படித்தார். இதனுல் இவருக்கு மேற்படி பாஷையில் ஒரு புலமை ஏற்பட்டதோடு, அந்தப் புலமையை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற ஆவலும் உண்டாயிற்று. இதனுல் இங்கிலாந்துக்கு ஒரு முறை சென்று வர வேண்டுமென்று ஆசை கொண்டார். ஆனுல் அக்காலத்தில் இது, இக்காலத்தைப் போல் அவ்வளவு சுலபமாயிருக்கவில்லை. பண்டித விஷன் நாராயண்தர், இவைகளையெல்லாம் பொருட்படுத்தக்கூடியவரில்லை. ஒரு பிடிவாதமாக இருந்து தமது பிரயாணத்துக்கு விரோதமாயிருந்த தாயாரைச் சரிப்படுத்திக் கொண்டு லண்டனுக்குச் சென்று அங்கே பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினுர். பெயருக்குத்தான் இவர் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினுரே தவிர, ஆங்கிலப் பேராசிரியர்களுடைய நூல்களையும் மற்ற தத்துவ ஞானிகளுடைய நூல்களையும் பயின்ருர். இந்தக் காலத்தில், இங்கிலாந்தில் கிளாட்ஸ்டனுடைய பிரபாவம் மிகவும் அதிகப்பட்டுஇருந்தது. பிரிட்டிஷ் அரசியலில் ஒரு புதியவேகமும் ஒரு புதிய உணர்ச்சியும் காணப்பட்டன. இவற்றையெல்லாம், பண்டிதர் தமது கூர்மையான அறிவோடு கவனித்து வந்தார். இங்கிலாந்தில் இவர் இருந்த போது, லால் மோஹன் கோஷ், நாராயண சந்தாவர்க்கர் முதலியவர்களுடைய பரிச்சயம் கிடைத்தது. இவர்கள் மூலமாக, பண்டிதர் அநேக பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் பழக்கத்தைப் பெற்ருர். கடைசியில்,

1887ம் வருஷம் பாரிஸ்டர் சன்னது பெற்று சுய தேசம் திரும்பி வந்தார்.

இந்தியா திரும்பி வந்ததும், பண்டிதர் காஷ்மீரிகளிடத்தில் ஒருவித ஒற்றுமையை உண்டு பண்ண முயன்றார். இதே சமயத்தில் அரசியல் விவகாரங்களிலும் தலையிட்டுக் கொண்டார். 1887ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸில் இவர் ஆஜராயிருந்தார். அப்பொழுது இவருக்கு வயது இருபத்து மூன்றுதான். ஐக்கிய மாகாணத்திலிருந்து காங்கிரஸுக்குப் பிரதிநிதியாக வந்தவர் இவர்தான் முதலாவதாவர். இந்தச் சிறிய வயதிலேயே இவர் மேற்படி காங்கிரஸில் பேசி பலரையும் பிரமிக்கச் செய்தார். இவர் பேச்சைக் கேட்ட ஹ்யூம் என்பவர், 'இந்த இளைஞர் பிற்காலத்தில் ஒரு பெரிய தலைவராக வருவார்' என்று கூறினார்.

பண்டித விஷன் நாராயணதர், பாரிஸ்டர் பரீட்சையில் தேறினாரே தவிர, அது மூலமாக அதிகப்பணம் சம்பாதிக்கவில்லை. தமது காலத்தை அரசியல் விவகாரங்களிலும், இலக்கிய நூல்களைப் படிப்பதிலும் கழித்தார். அரசியல் உலகத்திலே இவருக்கு அதிகமான செல்வாக்கு ஏற்பட்டது. 1911ம் வருஷம் பேரெல்லியில் நடைபெற்ற ஐக்கிய மாகாணத்து மாகாண மகா நாட்டிற்கு இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். இதே வருஷத்தில் காங்கிரஸ் தலைவராகவும் தெரிந்தெடுக்கப் பட்டார். 1916ம் வருஷம் லட்சுமணபுரியில் நடைபெற்ற காங்கிரஸின் உபசாரணைக் கூட்டத்திற்கு இவர் தலைவராயிருந்தார்.

லட்சுமணபுரி நகர சபையில் இவர் பல வருஷ காலம் அங்கத்தினராயிருந்தார். 1914ம் வருஷம் இவர் இந்தியா சட்டசபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். நமது பண்டிதர் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல; சிறந்த கவிஞர். உருது பாஷையில் அநேக கவிகளையும் நூல்களையும் எழுதி யிருக்கிறார். வடநாட்டு இலக்கிய கர்த்தாக்களில் இவர் ஒரு முக்கியஸ்தராகக் கருதப்படுகிறார் இப்பொழுதும்.

இவர் 1916ம் வருஷம் நவம்பர் மாதம் 19ந் தேதி காலமானார்.

மத்திய ஐரோப்பாவிலுள்ள நாடுகளின் எல்லைகள் அடிக்கடி மாறிக் கொண்டிருப்பதால், இன்னும் சிறிது காலம் வரை ஐரோப்பாவின் பூகோள படத்தையே தயாரிக்க வேண்டாமென்று அமெரிக்கா அரசாங்கத்துக் கல்வி இலாகா உத்திரவிட்டிருக்கிறது.

கிரானடாவில் இந்தியர்கள்

"வாதூலன்"

கிரானடா என்பது, வட அத்லாந்திக் மகா சமுத்திரத்திலுள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்று. இது தென்னமெரிக்காவின் வட பாகத்திலுள்ள பிரிட்டிஷ் கயானுவுக்கு நேர் வடக்கில் இருக்கிறது.

பதினைந்தாம் நூற்றூண்டு முடிவில் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தாரல்லவா? அவர் கண்டு பிடித்தது மேற்கிந்தியத் தீவுகளாகும். அத்லாந்திக் சமுத்திரத்தில் பாய்மரக் கப்பல்களில் தத்தளித்து, கடைசியாகக் காற்றடித்து கொலம்பஸையும் அவரது சகாக்களையும் இத்தீவுகளில் கொண்டு வந்து சேர்த்தது. உலக ஆரம்பம் முதல் ராஜதந்திரத்துடன் வாழ்ந்து வந்த அத்தேச மக்களின் சமாதான வாழ்க்கைக்கு அன்று முதல் முடிவு ஆரம்பமாயிற்று. மேனாட்டு நாகரிகம் அத்தேசத்தில் வந்திறங்கியது. சில வருடங்களில் அத்தேச மக்கள் யுத்தத்தில் தோல்வியடைந்து ஸ்பெயின் தேசத்திலிருந்து அங்கு வந்திறங்கும் ஒவ்வொரு வெள்ளையருக்கும் அடிமைகளாயினர். இவ்விதம் ஸ்பெயினின் ஆதிக்கத்திற்குட்பட்ட தேசங்களில் ஒன்றுதான் 133 சதுர மைல் கொண்ட கிரானடா தீவு.

மேனாட்டார் முன்னேற்ற மடையாத தேசங்களைக் கைப்பற்றி அடக்கியாளுவதற்கு இட்ட போட்டியில் ஸ்பெயின் தோல்வி யடைந்தது. 19ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இத்தீவு 'சூரியன் ஒரு நாளும் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் ராஜாதி ராஜனின்' நேர் பார்வையிலுள்ள குடியேற்ற நாடாக மாறிற்று. இன்று அத்தேசத்தில் 70,000க்கு அதிகம் ஜனங்கள் வசித்து வருகிறார்கள். கோகோ, கரும்பு, பாக்கு முதலியவை ஏராளமாய் விளையும் இத் தீவு, சமுத்திரத்தின் நடுவில் இயற்கை தேவி தாண்டவமாடும் ஒரு பூமியாய் விளங்குகிறது.

பிரிட்டிஷ் மன்னரால் நியமிக்கப்படும் ஒரு கவர்னர் இதனையாளுகிறார். இவருக்குதவியாய் பதினைந்து அங்கத்தினர்கள் கொண்ட ஒரு சபை உண்டு. இப்பதினைந்து பேர்களில் ஏழு பேர் உத்தியோகஸ்தர்களும், மூன்று பேர் நியமிக்கப்பட்டவர்களும் இதரர்கள் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களுமாவார்கள். மேற்கிந்தியத் தீவுகளில் சுக வாழ்வுக்கு முதல் தரமானது கிரானடா தீவுதான். ட்ரினிடாடிலிருந்து 105 மைல் கப்பல் பிரயாணம் செய்தால் இத்தீவில் போய்ச் சேரலாம்.

1858ம் வருஷ முதல் 1865ம் வருஷம் வரை அதாவது சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னுள்ள ஆறு வருடங்களில் இந்தியாவிலுள்ள ஐக்கிய மாகாணத்திலிருந்து சுமார் 200 ஜனங்கள் ஒன்பதினாயிரம் மைல் பிரயாணம்

செய்து இந்தியாவுக்கு பகலாயிருக்கும் போது ராத்திரியாயும், ராத்திரியாயிருக்கும் போது பகலாயுமிருந்து வரும் உலகத்தின் இந்த மூலைக்கு வந்து சேர்ந்தார்கள். சிப்பாய் கலகத்திற்குப்பின் பட்டாளங்கள் செய்த அட்டூழியம் சகிக்க முடியாமல் போக்கு வரவு சாதனங்கள் முன்னேற்றமடையாத அக்காலத்தில் இவ்விதம் செய்யத் துணிந்தார்கள். இவர்களில் சிலர் இந்தியாவிலிருப்பதை சர்க்கார் விரும்பவில்லை யென்றும் சொல்லப்படுகிறது.

முதன் முதலாக அங்குச் சென்றவர்கள் யாரும் இன்று 'ஜீவித்திருக்க முடியாததால் இன்று அங்குள்ள 5000 பேர்களுக்கு மேலுள்ள இந்தியர்கள் என்று சொல்லலாமே தவிர இந்தியாவுக்கும் இவர்களுக்கும் யாதொரு பந்தமும் கிடையாது. இவர்கள் மேனாட்டாரின் நடை உடை பாவனைகளைக் கடன் வாங்கியிருந்தாலும் இவர்களுடைய முகத்தில் குறிப்பிடக் கூடிய மாற்றம் ஏற்படவில்லை. இவர்களிடத்தில் இந்து முஸ்லிம் வேற்றுமையே கிடையாது. இந்தியாவுக்கு வந்த ஒரு குடும்பத்தில், பாக்கி எல்லாருடைய பேரும் ஹிந்து பேராயிருக்க ஒருவர் பேர் மட்டும் யூசுப் என்றிருந்தது. இது ஒரு முகம்மதியப் பேரல்லவா என்று சொன்னதும் அவர் மலைத்துப் போய் விட்டார்.

கிரானடாவிலே இந்தியர்கள் ஒற்றுமைக்காகவோ என்னவோ என்று தோன்றுமாறு ஒருவித கிறிஸ்துவ மதத்தைத் தழுவுகிறார்களென்றாலும், இந்தியக் குடும்பங்கள் மாதிரி வீடுகளில் பூஜை செய்து வருகிறார்கள். நித்திய் பூஜை செய்கிறவர்களும் விசேஷ தினங்களில் மட்டும் பூஜை செய்கிறவர்களுமிருக்கிறார்கள். இவர்களுடைய பொது பாஷை ஹிந்தியே. விவாகங்கள் கோவில்களில் நடத்துவது போல் வீடுகளில், பூர்வீகச் சடங்குகளுடன் நடத்துவதுண்டு. பணக்காரர்கள் வீட்டுக் கலியாணங்கள் இந்தியாவில் நடப்பது போலவே இருக்கும். வாழையிலை போட்டுச் சாப்பாடு போடுவது சர்வ சாதாரணம். கலியாணத்தில் இரண்டு மூன்று தினங்களில் நாட்டியம், பாட்டுக் கச்சேரி முதலியன நடக்கும். ஸ்திரீதனம் என்ற பழக்கமே கிடையாது. தரித்திர தோஷத்தால் யாராவது பணம் வாங்கி விட்டால் வெகு காலத்திற்கு அவளைக் கேவலமாக நினைப்பார்களாம்.

பெண்களுக்கு சிற்சில நிபந்தனைகளெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கல்யாணப் பேச்சு ஆரம்பிக்க வேண்டியது பிள்ளை வீட்டாரே யெனினும் கடைசியாக முடிவு செய்ய வேண்டிய உரிமை பெண்ணுக்குத்தான். நிச்சயிக்கப்பட்ட ஒரு வருஷத்திற்குப் பிறகுதான் விவாகம் நடக்கும். சில சமயங்கள் ஆறேழு வருடங்களுக்குப் பின்கூட நடக்கும். கூடுமானால் தம்பதிகளுக்குப் போதுமான சொத்து ஒதுக்கி வைப்பதுண்டு. அங்கு அவிபக்த குடும்ப முறை கிடையாது. சொத்து பூராவும் தகப்பனாரின் பேருக்கிருக்கும். மரண சாசனங்கள் எழுதும்போது ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் சொத்துக்களைச் சமபாகமாக எழுதுவதுதான் வழக்கம். விதவையான தாயாரிருக்கும் போது பாகம் செய்து கொள்ளுவது சாதாரணமாய் வழக்கத்திலில்லை. இருந்தாலும் இம்முறைகளுக்கு விரோதமாக மரண பத்திரங்களெழுதுவதுமுண்டு.

வீழ்ந்துபட்ட அல்பேனியா

அல்பேனியா என்ற நாடு அட்ரியாடிக் கடலின் கிழக்குக் கரையோரமாக இருக்கிறது. இது ஆயிரம் சதுரமைல் விஸ்தீரண முடையது. 1930ம் வருஷம் எடுத்த ஜன கணிதப்படி இதன் ஜனத்தொகை 1,003,104. இதன் வடக்கிலும் கிழக்கிலும் யூகோஸ்லேவியா நாடும் இதன் தெற்கிலும் தென் கிழக்கிலும் க்ரீஸ் தேசமும் இருக்கின்றன.

அல்பேனியா, 1912ம் வருஷம் வரை துருக்கியின் ஆதீனத்திற்குட்பட்டிருந்தது. பின்னர் 29-11-1912 வலோனு என்ற ஊரில் ஒரு தேசிய சபை கூடி, அல்பேனியா ஒரு சுதந்திர நாடு என்று தீர்மானித்தது. இது பின்னர் 20-12-1912ல் நிறைவேற்றப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் மூலம்

இந்தியர்கள் வோட்டுரிமை பெற்றிருப்பதுடன் ஜுரிகளாயுமிருந்து அரசியல் விஷயங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இதோடு கூட ஸ்தல ஸ்தாபனங்களிலும் ஸ்தானம் பெறுகிறார்கள். பூஸ்திதியுடையவர்களாதலால் இவர்களுக்குச் சில பிரத்தியேக உரிமைகள் கொடுக்கப்படுகின்றன. வியாபாரிக ளென்ற முறையிலும் இந்தியர்கள் முன்னணியில் நிற்கிறார்கள். இக்காலங்களில் கல்வி கற்று டாக்டர் முதலிய தொழில்களிலும் இவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இந்திய உபாத்தியாயர்களும் ஏராளமாயிருந்து வருகின்றனர். மற்றவர்கள் இந்தியர்களின் உரிமைகளைக் கௌரவப் படுத்துவது போல் இந்தியர்களும் அவர்களது உரிமைகளைக் கௌரவப்படுத்தி வருகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் இந்திய ஸ்திரீயை ஒரு நீக்ரோ, கூலி என்று அழைத்து விட்டானும். அதற்கு மான நஷ்டக் கேஸ் தொடுத்ததற்கு ஜட்ஜ் அந்த நீக்ரோவுக்கு ஒரு பவுன் அல்லது மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புச் சொன்னாராம்.

கிரானடாவிலே இந்தியர்கள் சுக வாழ்வு வாழ்கிறார்களென்று சொல்லலாம். இந்தியா என்று பாகுபாடு படுத்திக் காட்டக் கூடிய விதியொன்றும் அங்குக் கிடையாது. இதர பிரிட்டிஷ் தேசங்களில் இந்தியர்களுக்கு ஸ்தானமே இல்லாதிருக்கும் போது இந்தக் குடியேற்ற நாட்டில் இந்தியர்கள் பிரஜா உரிமையைப் பூரணமாய் அனுபவித்து வருகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடியிருக்க வீடும் உழுது பயிரிட நிலமும் உண்டு. இரண்டு ஏக்கர் நிலமிருந்தால் ஒரு சிறு குடும்பம் தாராளமாய் ஜீவிக்கலாம் ஆனால் அங்கு நிலத்துக்கு விலையதிகம்

ஒரு ஏக்கர் நிலத்துக்கு 100 பவுன் வரை கிடைக்கும். 100 ஏக்கர் நிலமுள்ள இந்தியர்களுமிருந்து வருகிறார்கள்.

இன்றைய தினம் அங்குள்ள இந்தியர்களுக்கு இந்தியாவில் பற்றுதலே கிடையாது. இந்தியாவிற்கு வரும்படி அழைத்தால் அதனை ஏற்றுக் கொள்ளுவார்களா என்பதே சந்தேகந்தான்.

ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 1913ம் வருஷம் டிசம்பர் மாதம் 3ந் தேதி சர்வ தேச தூதர்கள் ஒரு மகா நாடாகக் கூடி, வில்லியம் என்ற ஓர் அரச குமாரனை, அல்பேனிய மன்னனாகத் தெரிந்தெடுத்தார்கள். ஆனால் இந்த வில்லியம் என்ற மன்னன், 1914ம் வருஷம் செப்டம்பர் மாதம், தனது அரச முடியைத் துறந்து விட்டான். ஐரோப்பிய யுத்தத்தின் போது, இந்த நாடு ஒரே குழப்பமாயிருந்தது. 1918ம் வருஷம் நவம்பர் மாதம் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. டுராஸ்ஸோ என்ற ஊரில் தேசிய சபை ஒன்று கூடி ஒரு தற்காலிக அரசாங்கத்தை ஏற்படுத்தியது. இந்தத் தற்காலிக அரசாங்கம் ஏற்படுவதற்கு இத்தாலிய ராணுவம் துணை செய்தது. இந்த நாட்டின் சுதந்திரத்தை அப்பொழுதைய நேசக்கட்சி சூப்ரீம் கவுன்சில் அங்கீகரித்தது. இந்தத் தற்காலிக அரசாங்கம் 1920ம் வருஷம் வரையில் அதிகாரத்தில் இருந்தது. பின்னர் இது வீழ்ந்து போய் வேறோர் அரசாங்கம் ஏற்பட்டது. இங்ஙனம் 1924ம் வருஷம் வரை புரட்சிகளும் மாறி மாறி அரசாங்கங்களும் ஏற்பட்டு வந்தன.

கடைசியில் 1925ம்வருஷம் ஜனவரி மாதம் 21ந் தேதி, அல்பேனியா ஒரு குடியரசு நாடாகியது. இதற்கு ஏழு வருஷத்திற் கொருமுறை தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பிரசிடெண்ட் உண்டு. மந்திரிச் சபை, செனெட் சபை, ஜனப் பிரதிநிதி சபை முதலியன அமைந்தன. முதல் பிரசிடெண்டாக அஹமத் பே ஜோக் என்பவர் தெரிந்தெடுக்கப் பட்டார். ஆனால் இந்தக் குடியரசு நீடித்து நிலைக்கவில்லை.

1928ம்வருஷம் செப்டம்பர் மாதம் முதல் தேதி, அல்பேனியா ஒரு முடியரசு நாடாக்கப்பட்டது. முதல் பிரசிடெண்டாக இருந்த அஹமத்பே ஜோக் என்பவரே, ஜோக் என்ற பெயருடன் முதல் அரசரானார். இதன் விளைவாக, மேற்படி செனெட் சபை, ஜனப்பிரதிநிதி சபை முதலியன கலைக்கப்பட்டு, இவைகளின் ஸ்தானத்தில் பத்து பேரடங்கிய ஒரு ராஜாங்க சபை அமைக்கப்பட்டது. இது தவிர, 56 அங்கத்தினர்களடங்கிய ஜனப்பிரதிநிதி சபை ஒன்றும் உண்டு. இதன் அங்கத்தினர்கள் நான்கு வருஷத்திற் கொருமுறை தெரிந் தெடுக்கப்படுவார்கள்.

அல்பேனியா, பெரும்பாலும் மலைப் பிரதேசம். 6,000 அடிக்கு மேற்பட்ட மலைகளே அதிகம். கைத்தொழிலும் விவசாயமும் மிகப்புராதன முறையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு பெட்ரோல் எண்ணெய்க் கிணறுகள் அதிகம். இவைகளைத் தோண்டி எண்ணெய் யெடுத்து விநியோகிக்கும் உரிமை இத்தாலிய ரெயில்வே அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'தக்ளி'யினால் உண்டாகும் சாதகங்கள்

—க. அருணாசலம்

நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் வேலைப் பஞ்சத்தால் கிராம மக்கள் வறுமைப் பிணியில் ஆழ்ந்து கிடக்கின்றனர். அநேக வருடங்கள் வேலை செய்யாமல் பழகியது சோம்பேறித் தனத்திற்கு மனிதனை இழுத்துக் கொண்டு போய்விட்டிருக்கிறது. உடலுழைப் பின்மையின் காரணமாக புத்திமந்தமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. உலகத்தார் வியக்கும்படி கிராமத்துச் சிற்பிகள் செதுக்கிய கல்வெட்டுக்கள் அழியாச் சின்னங்களாக இன்னும் காணக்கிடக்கின்றன. அவர்கள் பாடிய பாட்டுக்களும் ஆடிய கூத்துக்களும் உயர் தனிக்கலைகளென இன்றும் போற்றப் படுகின்றன. ஆனால் இன்று இவ் வேலைப் பஞ்சத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கும் மிடிமையும் அறியாமையும் இத்திறமைகளை விழுங்கிக் கொண்டு வருகிறது. பசிவந்திடப் பத்தும் பறந்து போகுமல்லவா? பசிப்பிணி வாட்டும் பொழுது நாகரிகமும் கலையும் எங்ஙனம் நிலைத்து நிற்கும், வளரும்?

பசியை ஒழித்து அறிவைப் பெருக்கிக் கலையை வளர்க்கும் ஒரு மாணிப் பெருஞ்சாதனத்தைக் கண்டு பிடித்துக் கொடுத்த பெருமை இன்று நம்மகான் காந்தியடிகளைச் சார்ந்தது. காந்தி சொல்லும் இந்த ராட்டை, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விடுமா? இதிலிருந்து சரியான கூலி பெற முடியுமா? இது சரியான உதவிக்கைத்தொழில் தானா? இது மில்களுடன் போட்டியிட முடியுமா? என்றெல்லாம் சரமாரியாகக் கேள்வி போட்டுக் கொண்டிருக்கும் சந்தேக ஆத்மாக்கள் இன்றும் இருப்பார்களேயானால் அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. புள்ளி விவரங்கள் தெரிய வேண்டுமானால் அவர்கள் அறிக்கைகளைப் புரட்டிப் பார்த்துக் கொள்ளட்டும். நாம் இப்பொழுது இம்மகத்தான கதர் இயக்கத்தில் தக்ளி எனப்படும் கைக்கதிருக்கு என்ன ஸ்தானம் என்று ஆராய்வோம்.

தக்ளி ஓர் யந்திரம். இக்கருவியின் ஜனனத்தைக் கணிக்க முடியாது. நூற்றல் தொழில் தோன்றிய காலத்திலேயே இக்கருவியும் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப இதன் உருவமும் மாறுபட்டு வந்திருக்கிறது. இந்தியாவில் மட்டும் பன்னிரெண்டு வேறு வேறுவிதமான கைக் கதிர்கள் உபயோகத்திலிருந்து வந்திருப்பதாகக் காலஞ்சென்ற மகன்லால் காந்தி குறிப்பிட்டிருக்கின்றார். சில

வருஷங்களுக்கு முன்னால் கதிரில் மணிக்கு 100 கஜம் நூற்பதென்றாலே பெரிய ஆச்சரியமாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது இதைப்போல் நான்கு மடங்கு நூற்பது சர்வ சாதாரணமாகி விட்டது. இதுவரையில் எல்லோரையும் விட அதிகமாக நூற்றிருப்பவர் வார்தா சத்யாக்கிரஹ ஆச்சிரமத்தைச் சேர்ந்த சத்ய விரதன் என்பவர். இவர் மணிக்கு 540 கஜம் நூற்கிறார். சென்ற காந்தி ஜயந்தியை ஒட்டி பன்னிரெண்டு பேர்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணி வீதம் ஏழு நாள் நூற்றிருக்கின்றார்கள். அதில் சராசரி மணிக்கு வீசணத்தில் சுற்றுதல் உள்பட 300 கஜம் நூற்றதாகக் கணக்கிட்டிருக்கின்றார்கள்.

ஒரு நல்ல மாதிரிக் கைக் கதிர் ஒரு அணு விலை கொடுத்து வாங்கலாம். இல்லையென்றால் சாதாரணமாக யாரும் தாமே செய்து கொள்ளலாம். உடைந்த ஓடு ஒன்றைக் காலணு வட்டம்போல் தேய்த்து அதன் மத்தி கண்டு பிடித்து அதில் துவாரமிட்டு அதன் வழியே ஒரு மூங்கில் குச்சியைக் கோர்த்துக் கொண்டால் அது நல்ல கைக்கதிராகும். ஆனால் அதிவேகமாக நூற்க வேண்டுமானால் இரும்புக் கதிரே நல்லது. பழைய குடைக் கம்பிகளை உபயோகிக்கலாம். இவைகளெல்லாம் அதிக பணச்செலவில்லாமல் கிடைக்கக் கூடியவைகள். எனவே ஒரு அணவுக்குள் கிடைக்கக் கூடிய கைக் கதிரில் பழகி விட்டால் சாதாரணமாக நான்கு ரூபாய் செலவு செய்து வாங்கும் பெட்டி ராட்டையில் நூற்குமளவு நூற்று விடலாம். இதிலிருந்து உடனே கைக்கதிர் ராட்டையுடன் போட்டிபோடுமா என்று கேட்டு விடாதீர்கள். கொஞ்சமும் பணச் செலவு செய்ய முடியாத ஏழைக்கிராம வாசிகளுக்கு இது ஏற்ற சாதனம் என்பதுதான் இங்கு நான் சொல்ல விருக்கிறது. அத்துடன், ராட்டையில் இல்லாத பல சௌகரியங்களும் இதிலிருக்கின்றன. ராட்டை சில சமயத்தில் சப்தம் செய்ய ஆரம்பித்துவிடும். உடனே சரி செய்வது சிறிது கஷ்டம். யாராவது பேசிக் கொண்டிருக்கும்பொழுது நாம் நூற்க முடியாது. கைக்கதிரில் இம்மாதிரித் தொந்தரவு கிடையாது. இதை உத்தேசித்தே தக்ளியை, ஒருவர், பேசும் திறமையற்றுக் கிடக்கும் கோடிக் கணக்கான இந்திய மக்களின் உண்மைப் பிரதிநிதி என்று சொன்னார். ஆம், இந்த மௌன குருவிடமிருந்து நம் அடையும் நன்மைகள் பல. ஓயாது உழைத்தால்தான் நாம் கருதியதை அடைய முடியும்; இல்லையேல் விழுந்துபட வேண்டியதுதான் என்னும் மகத்தான கர்ம ரகசியத்தை சதா பிரத்யக்ஷமாகக் காட்டிக் கொண்டேயிருக்கிறது. இன்று வேலைப் பஞ்சத்தில் மூழ்கி யிருக்கும் தீனர்களுக்கு உண்மை மித்திரன், சுலபத்தில் அகப்படக்கூடியவன் 'தக்ளி' தவிர வேறு யார்?

இவ்வளவு சக்தி பொருந்திய தக்ளிக்குக் கதர் இயக்கத்தில் ஒரு மகத்தான ஸ்தானம் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இரண்டு ரூபாய் கூடக்கொடுத்து ஒரு ராட்டையை வாங்க முடியாத ஏழைகளுக்கும் ஆடு மாடுகள் மேய்க்கும் சிறு நண்பர்களுக்கும் பள்ளிக்கூடத்துப் பாலர்களுக்கும் உரிய தோழன் தக்ளியே யன்றோ?............இதை

எங்கு சென்றாலும் எடுத்துச் செல்ல லாம். மாடுகளை ஓட்டி விட்டு விட்டு மரத்தடியில் சற்று களைப்பாறும் பொழுது சுற்றுவதற்கு ஏற்றது கைக் கதிர்தான். இதை உட்கார்ந்திருக் கும் பொழுதும் நடக்கும் பொழுதும் உபயோகப்படுத்தலாம். மாணவர்களி டத்து ஸ்பரிச உணர்ச்சி, ஏகாக்கிர சக்தி, பொறுமை முதலிய அருங் குணங்களை உண்டு பண்ணுவதற்கு ஏற்ற இதுபோன்ற வேறு சாதனம் கிடையாது. கல்வி யுககிலேயே புரட்சி யென்று கருதப்படும் வார்தா கல்வித் திட்டத்திலே தக்ளிக்கு முதல் ஸ்தானம் கொடுத்திருப்பது இச்சிறு கருவியினுள்ளே பொதிந்து கிடக்கும் அபார சக்திகளை யுக்தே சித்தே போலும். ஏழை இந்தியா தனது குழந்தைகளின் ஐம்புலன்களை யும் பண்படுத்துவதற்கு கல்வி நிபுணர் களாகிய புரோபல், மாண்டிஸ்ஸோரி முதலியோர்கள் சொல்லுகின்ற உப கரணங்களுக்குப் பணம் செலவிட முடியாத நிலையிலிருக்கின்றது. இப் பண்புகளை உண்டுபண்ண அப்பொருள் கள் அவசியமுமில்லை என்று காந்தி யடிகள் வழி நிற்கும் கலைவல்லுனர் கள் கருதுகின்றனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு பொருளை உண்டுபண்ணும் பொழுது உண்டா கும் சிருஷ்டி உணர்ச்சியும், தன்னம் பிக்கையும் இன்னும் மேலே கூறப் பட்ட பொறுமை, விடாமுயற்சி, ஏகாக்கிர சக்தி முதலிய பல நற் குணங்களும் கைக் கதிரின் உபயோ கமே உண்டுபண்ணுமானால் பின்னர் இந்தியக் குழந்தைகளுக்கு உபயோக மற்ற பணம் பெற்ற கருவிகள் எதற்கு?

கதிரின் அமைப்பு, செய்யும் விதம், செப்பனிடல், கதிரில் நூற்றல், நூற்ற நூலை என்ன செய்வது போன்ற பல வித விஷயங்களை காலஞ் சென்ற மகன்லால் காந்தியும் ரிச்சர்ட் கிரக் கும் சேர்ந்து ஆங்கிலத்தில் எழுதிய 'தக்ளி உபாத்தியாயர்' என்ற புத்த கத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். தமிழ் மொழிபெயர்ப்பும் அகில பாரத சர்க்கா சங்கத் தமிழ் நாட்டுக் கிளை யால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. மணிக்கு 54 கஜம் நூற்பது எப்படி யென்று தெரிய விரும்புபவர்கள் 'தக் ளியால் எப்படி நூற்பது' என்ற ஹிந்தி புஸ்தகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஒரு இந்தியனுக்கு வருஷத்துக்கு வேண்டியது சராசரி 15 கஜம் துணி என்று கணக்கிட்டிருக்கின்றார்கள். கைக் கதிரில் பிரதி தினமும் அரை மணி நேரம் நூற்றால் தனக்கு வரு ஷத்திற்கு வேண்டிய இத்துணிக்கு வேண்டிய நூல் நூற்று விடலாம். கைக் கதிர் கதர் இயக்கத்தின் ராம நாமம், தீனபந்து, ஏழை பங்காளன் என்று உணரும் தலைவர்களும் தொண் டர்களும் நாள் தோறும் அரை மணி நேரமாவது கைக் கதிரால் நூற்றார் களேயானால்இதுகாறும் சோம்பேறித் தனத்திலும் அறியாமையிலும் மூழ் கிக் கிடக்கும் இதர சகோதரர்களும் பின்பற்றுவார்கள். கதர் இயக்கம் காட்டுத் தீ போல் பரவும்.

சூயஸ் கால்வாய்—அதன் வரலாறு

——ஜே. சி.

சர்வ தேசங்களின் கண்களும் இப்பொழுது சூயஸ் கால்வாயை உறுத்துப்பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால், மேனாட்டு வியாபாரச் சரக்குகளெல்லாம், இந்தக் கால்வாயின் வழியே கீழ் நாட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதனாலேயே எல்லா நாடுகளும் இதன் மீது கவனஞ் செலுத்துகின்றன. இந்தக் கால்வாயின் பூர்விக வரலாற்றைச் சிறிது கவனிப்போம்.

எகிப்தில் பூர்வ காலத்தில் ஆண்ட மன்னர்கள், செங்கடலுக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடையில் ஒரு நீர் மார்க்கம் தேவையென்பதை உணர்ந்தார்கள். எகிப்திலே ஆண்ட ஓர் அரசி, செங்கடலில் சென்று ஆராய்ச்சி செய்ய ஐந்து கப்பல்கள் அடங்கிய ஒரு பெரிய படையை அனுப்பினாள். இது காரணமாக ஒரு கால்வாய் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் மூலம் சிறிது காலம் போக்கு வரத்துகள் நடைபெற்றன. ஆனால் கி. பி. 776ம் வருஷத்தில் இது நின்று விட்டது. இதற்குப் பிறகு கீழ் நாட்டுக்கும் மேனாட்டுக்கும் தரை மார்க்கமாகவே போக்கு வரத்து நடைபெற்றது. இந்த வியாபாரத்திலே அரபியர்களும் வெனீஷியர்களும் அதிகமாகக் கலந்து கொண்டார்கள். கடைசியில் கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டில், தென்னாப்பிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கை முனைவழியாகக் கீழ் நாட்டுக்குச் செல்லலாம் என்ற உண்மையை வாஸ்கோடிகாமா என்பவன் உலகுக்கு வெளிப்படுத்தினான். இதன் மூலமாகப் பின்னர் வியாபாரம் நடைபெற்று வரத்தொடங்கியது. ஆயினும், செங்கடலையும் மத்தியதரைக்கடலையும் இணைத்து வந்த கால்வாயைப்பற்றிய நினைவு பாரையும் விடவில்லை. இதனை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று பல யோசனைகள் செய்யப்பட்டன.

1798ம் வருஷம் நெப்போலியன், தனது இஞ்சினியரான லேபேரே என்பவன் மூலம் இந்தக் கால்வாயை சர்வே செய்தான். ஆனால் அளவெடுக்கிறபோது, சில அடிகள் வித்தியாசம் ஏற்பட்டு விட்டபடியால், இந்தக் கால்வாயைப்பற்றிய ஆராய்ச்சி பின்னர் விட்டுவிடப்பட்டது.

ஆனால் ஒரு சிலர் மட்டும், இந்தக் கால்வாயை நல்ல உபயோகத்திற்குக் கொண்டு வரலாமென்று நம்பிக்கை கொண்டிருந்தனர். இவர்கள் மேற்படி லேபேரே என்பவனுடைய அளவுகளில் வித்தியாசக் குறைவு இருக்கிறதென்றும், கப்பல் போக்கு வரத்

துக்கு அநுகூலமாக இந்தக் கால்வாயைச் சரிப்படுத்தலாமென்றும் முடிவு கொண்டார்கள். இப்படி இவர்கள் முடிவுக்கு வந்தது ஏறக்குறைய கி.பி. பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில். 1830ம் வருஷத்தில் நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியாவுடன் வியாபாரப் போக்குவரத்து நடைபெறுவது பிரிட்டிஷாரின் ஏக போக உரிமையாகிவிட்டது. இதனால் பிரிட்டிஷார், இந்தியாவுக்கு ஐரோப்பாவிலிருந்து செல்ல வேறு மார்க்கம் கண்டுபிடிக்கப்படுவதையோ, அல்லது அதனை அநுபவபூர்வகமான ஒரு பிரச்னையாகக் கொள்வதையோ விரும்பவில்லை. பிரான்ஸானது, இந்தச் சூயஸ் கால்வாய் விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டிருந்தது. அப்படி பிரான்ஸ் இந்த விஷயத்தில் வெற்றி பெற்றுவிடுமானால், பிரான்ஸின் ஆதிக்கம் அதிகப்பட்டு விடுமே யென்று பிரிட்டன் அஞ்சியது. ஆனால் நன்னம்பிக்கை முனை வழியாக, எந்த வல்லரசு வியாபார ஆதிக்கம் செலுத்தி வருகிறதோ அதே வல்லரசுதான் இந்தக் கால்வாய் வழியாக வியாபார ஆதிக்கம் செலுத்தும் என்ற உண்மையை அப்பொழுதைய பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் உணரவில்லை. இதனால் இவர்கள் சூயஸ் வாய்க்கால் பிரச்னையைப் புறக்கணித்தே வந்தார்கள்.

எகிப்தில் 1854ம் வருஷம் சையத் பாஷா என்பவன் ஆண்டு வந்தான். இவன் இந்த சூயஸ்கால்வாயைத் தோண்ட வேண்டுமென்பதில் சிரத்தை கொண்டான். ஏற்கனவே, இதற்கென்று தயாரிக்கப்பட்ட பிளான்களும் அப்பொழுது ஆராய்ச்சி செய்யப்பட்டன. இந்தப் பிளான்களில் அதிகமான சிரத்தை கொண்டவன் பெர்டினந்து டிலெஸ்ஸெப்ஸ் (Ferdinand de Lesseps) என்பவன். இவன் கெய்ரோவில் பிரெஞ்சு அரசாங்கத்தின் ஸ்தானீகனாயிருந்தான். இவன், மேற்படி சையத் பாஷாவைத் தூண்டி 1854ம் வருஷம் நவம்பர் மாதம் 30ந் தேதி, மேற்படி வாய்க்காலைத் தோண்டுவதற்கு அவசியமான உரிமையைப் பெற்றுக் கொண்டான். நான்கு வருஷங்கள் கழித்த பிறகுதான்—1858ம் வருஷத்தில்—வாய்க்காலின் நிர்மாணத்திற் கென்று ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டு அதற்குப் பங்குகளும் சேர்க்கப்பட்டன. ஆனால் எதிர்பார்த்தபடி அதிகமான பங்குகள் சேரவில்லை. எனவே, மிகுதிப் பங்குகளை மேற்படி சையத்பாஷாவே எடுத்துக் கொண்டான். 1859ம் வருஷம் ஏப்ரல் மாதம், கால்வாய் தோண்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

இதனைப் பிரிட்டன் விரும்பவேயில்லை. பலமாக எதிர்த்து வந்தது. கம்பெனியை ஆரம்பிக்கும் உரிமையை எகிப்திய அரசாங்கம் கொடுத்தபோது, துருக்கிய சுல்தான் இதனை அங்கீகரிக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையின் பேரிலேயே கொடுத்தது. இந்த நிபந்தனையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் பூரணமாக உபயோகித்துக் கொண்டது. துருக்கிய சுல்தானைத் தூண்டி விட்டு, இந்த ஒப்பந்தங்களை அங்கீகரிக்க வேண்டாமென்று கூறியது. சுல்தானே, இந்த ஒப்பந்தத்தைக் கண்டித்து, எகிப்திய அரசாங்கத்திற்குத் தாக்கீதுகள் மீது தாக்கீதுகள் அனுப்பி வந்தான்.

ஆயினும் டிலெஸ்ஸெப்ஸ் என்பவன், கால்வாயைத் தோண்டும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டு வந்தான். அநேக இடையூறுகள் இவனுக்கு ஏற்பட்டன. கண்ட்ராக்டர்கள், ஒப்பந்தப்படி சாமான்களை ஒப்புவிக்கவில்லை. தொழிலாளர்கள் சிதோஷ்ணம் தாங்க மாட்டாமல் இறந்து போனார்கள். கூலிவிகிதங்களோ எதிர்பாராதபடி உயர்ந்து வந்தன. ஆயினும் டிலெஸ்ஸெப்ஸ் இவை எதற்கும் சளிப்புக் காட்டிக் கொள்ளவில்லை.

கடைசியில் 1864ம் வருஷம் துருக்கிய சுல்தான் இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு, பிரிட்டிஷாரின் அபிப்பிராயமும் மாறத்தொடங்கியது. இந்தக் கால்வாயினால் உண்டாகிற சாதகங்களையெல்லாம் உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்தார்கள். 1869ம் வருஷம் நவம்பர் மாதம் 18ந் தேதி சூயஸ் கால்வாய் எல்லா ஆடம்பரங்களுடனும் திறக்கப்பட்டது. திறந்த இரண்டு வருஷங்கள் வரை, இந்தச் சூயஸ்கால்வாய் கம்பெனிக்குப் பணத்தொந்திரவு இருந்தது. கப்பல் போக்குவரத்து அதிகமாக அதிகமாக இதன் வருமானமும் பெருகியது. 1875ம் வருஷத்திலிருந்து கம்பெனியின் வருமானம் அதிகப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. மேலே கூறப்பட்ட காரணங்களால், ஆரம்பத்தில் பிரிட்டிஷார் இந்தக் கம்பெனியில் அதிகமான பங்கெடுத்துக் கொள்ளவில்லை. 1875ம் வருஷம், எகிப்திய மன்னனை கேடிவ் இஸ்மெயில் என்பவன் பணமுடையினால், சூயஸ் கால்வாயில் தனக்குச் சொந்தமாயிருந்த 176,602 பங்குகளை, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு 4,076,662 பவுனுக்கு விற்றுவிட்டான். இது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப் பெரிய லாபமாயிருந்தது. இந்தப் பங்குகளை 1875ம் வருஷம் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வாங்கின பிறகு, பிரிட்டிஷ் அரசாங்க பொக்கிஷத்திற்கு டிவிடெண்டுகளாக மட்டும் 40,000,000 பவுன் கிடைத்திருக்கிறது. இது மட்டுமின்றி, அரசியல் விவகாரங்களில் இது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எவ்வளவு பெரிய அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறது! யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும், கட்டணஞ் செலுத்துகிற எந்த நாட்டுக் கப்பலும் இந்தக் கால்வாயின் வழியாகப் போகவும் வரவும் செய்யலாம். ஆனால், தற்காலத்திய யுத்தத்தில், எந்த வல்லரசுக்கு சூயஸ் கால்வாய் கம்பெனியில் அதிகமான ஆதிக்கம் இருக்கிறதோ அது, இந்த மார்க்கத்தை அடைத்து விடக்கூடும். இது காரணமாகவே, 1936ம் வருஷம், ஆங்கிலோ—எகிப்திய ஒப்பந்தம் ஏற்பட்டதென்று கூறுகிறார்கள்.

சூயஸ் கால்வாயின் அநுபவஉரிமை 99 வருஷத்திற்குத்தான். இது 1968ம் வருஷம் நவம்பர் மாதம் 16ந் தேதியுடன் முடிவாகும். அப்பொழுது, எகிப்திய அரசாங்கம், கால்வாய்க்கு ஏற்பட்ட எல்லாச் செலவுகளையும் கொடுத்து, மேற்படி உரிமையை ஏற்றுக் கொள்ளும். அப்பொழுது பிரிட்டிஷாரின் நிலைமையென்னும்? இதைப்பற்றி, பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இப்பொழுதே சர்ச்சை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஊக்கமாக வேலை செய்!

—வ. பார்த்தசாரதி

அப்பா! கொலம்பஸின் வரலாற்றைக் கேட்டு உன் மனம் கல்லாகி விட்டதா என்ன? இந்த நன்றி கெட்ட உலகத்திற்கு நாம் ஏன் நன்மையைச் செய்ய வேண்டுமென்று நினைத்து விடாதே. அப்படி நினைப்பது பயங் கொள்ளித்தனமாகும்; மனிதத் தன்மையுமாகாது. இந்த உதாரணங்களை யெல்லாம் படிக்கப் படிக்க, நமது பகவத் கீதையின் மூலாதாரமான 'நிஷ்காமிய கர்ம'த்தின் பெருமை உனக்கு நன்கு புலனாகும்.

சில பேர் நினைக்கிறார்கள், அதிருஷ்டம் துணை செய்தால்தான் நமது முயற்சி கை கூடுமென்று. அப்படி நமது முயற்சி, நாம் எதிர்பார்க்கிற பலனைக் கொடாவிட்டால், அதிருஷ்டத்தைக் குறை கூறுகிறார்கள். ஓர் உண்மையைக் கூறுகிறேன் உனக்கு. அதிருஷ்டம், மனிதர்களைப்போல் அவ்வளவு குருடானதில்லை. அநுபவ பூர்வமாக நீ பார்ப்பாயானால், எவனொருவன் உழைப்பாளியாயிருக்கிறானோ அவனுக்குத்தான் அதிருஷ்டமும் துணை செய்கிறது. எப்படி, சிறந்த கப்பல் மாலுமிகளுக்கு சமுத்திர அலையும் காற்றும் துணை செய்கிறதோ அப்படியே உழைப்பாளிக்கும் அதிருஷ்டம் துணை செய்கிறது. மனிதன், உயர்ந்த ஆராய்ச்சிகளைச் செய்கிற போதுகூட, சாதாரணமாக எல்லாருக்கும் இருக்க வேண்டிய கவனம், உறுதி, பிடிவாதம் முதலியன தேவையாகவே இருக்கின்றன. சிறந்த அறிவு மட்டும் இருந்தால் போதாது. அதனை விடா முயற்சியுடன் ஒழுங்காக உபயோகிக்கிற முறையும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். உலகத்திலே பெரும் புகழ் படைத்த மஹான்கள் சிறந்த அறிஞர்களாயிருக்கவில்லையென்பதும், தங்களுடைய புத்தி கூர்மையினால் மட்டும் அவர்கள் முன்னுக்கு வரவில்லை யென்பதும் உனக்குத் தெரியுமா? கூர்மையான அறிவு என்றால் என்ன? பொறுமையான உழைப்பின் முடிவு தான் என்று ஓர் அறிஞன் கூறுகிறான்.

நியூடனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா? இவன்தான் ஆகர்ஷண சக்தியைக் கண்டு பிடித்தவன். இன்னும் பல ஆராய்ச்சிகளையும் செய்திருக்கிறான். 'இந்த ஆராய்ச்சிகளை யெல்லாம் எப்படிச் செய்தீர்கள்?' என்று ஒருவன் நியூடனைப் பார்த்துக் கேட்ட போது, 'அவைகளைப் பற்றிச் சதா சிந்தித்துக் கொண்டிருந்தேன்' என்று பதில் கூறினான். என்ன சுலபமான பதில்? ஆனால் இந்தப் பதிலில் எவ்வளவு ஆழ்ந்த கருத்திருக்கிறது!

ஆகையால் நீ என்ன செய்ய வேண்டும்? சதா வேலை செய்து கொண்டிருக்கும் பழக்கத்தைப்பெற வேண்டும். இந்தப் பழக்கம் மட்டும் உனக்கு நிரந்தரமாக ஏற்பட்டுவிட்டதே யானால், பிறகு உனக்கு அதிக மான கஷ்டங்கள் தோன்ருது. வேலை செய்யச் செய்ய, அதிலேயே ஒரு சுலபத்தைக் காண்பாய். முதலில் அந்த வேலையில் ஏற்பட்ட சிரமம், பிறகு உனக்குத் தோன்ருது. அதற்குப் பிறகு, அந்த வேலையைச் செய்யா விட்டால், ஏதோ குறைவாயிருப்பதாகவே உனக்குத் தோன்றும். ஆகையால் இந்த வேலை செய்யும் பழக்கத்தை முதலில் நீ ஏற்படுத்திக் கொள்.

அப்படி நீ செய்கிற வேலையானது. உனக்கு உடனே வெற்றியைத் தராமலிருக்கலாம். அதற்காக நீ சோர்வடையவே கூடாது. உயர்ந்த பலனை நீ எதிர்பார்க்கிற காரியங்களில் நீ மெதுவாகத்தான் முன்னேற முடியும். நல்ல பலன்களை எளிதிலே அடைய முடியாது. நாம் நடந்துசெல்கிறபோது எப்படி அடி அடியாகச் செல்கிருேமோ அப்படியே தான் மெது மெதுவாக முன்னேறிச் செல்ல முடியும். 'எப்படிக் காத்துக் கொண்டிருப்பதென்பதுதான் வெற்றியின் ரகசியம்' என்கிருன் ஓர் அறிஞன். விதைத்த பிறகுதானே அறுவடை செய்ய முடியும். ருசியுள்ள பழம் மெதுவாகவே பழுக்கிற தென்ற உண்மை உனக்குத் தெரியுமா?

பொறுமையாக இருந்து உன் வேலையைச்செய்து கொண்டு போனல் மட்டும் போதாது. உற்சாகத்துடனும் வேலை செய்ய வேண்டும். தொடர்ந்து வேலை செய்வதற்கு உற்சாகம் ஒரு மருந்து மாதிரி. இதனுல் உன் ஒழுக்கமும் உயர்வடைகிறது. அறிவுள்ள மனிதனைக்கணிக்க வேண்டுமானல் அவன் காட்டுகிற உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் பொறுத்திருக்கிறது. இந்த இரண்டுந்தான், வெற்றியின் உயிரும் ஆத்மாவும் போல. மனிதனுடைய சந்தோஷமும் இந்த இரண்டில்தான் இருக்கிறது. வாழ்க்கையிலே பரமானந்தம் என்பது என்னவென்று ஒருவன் கேட்கப்பட்டபோது, அவன் 'மனம் வைத்து உற்சாகத்துடன் வேலை செய்வது' என்று சுருக்கமாகப்பதில் கூறினன்.

பொது ஜனத்தொண்டு செய்ய முன் வருகிருர்களே, அவர்கள் எவ்வளவு இடையூறுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது தெரியுமா? அவர்கள் செய்கிற பிரசாரங்கள், உடனே பயனைக் கொடுக்காம விருக்கலாம். அதற்குமாருக எதிர்ப்புகள் பல ஏற்படலாம். அவர்கள் விதைக்கிற நல்ல விதையானது, காலதேவதையின் ஆழமான சேற்றில் அழுந்திப் போயிருக்கலாம். இந்த விதை முளை யெழும்புகிற காலத்தில், எந்தப் பலனை உத்தேசித்து இந்த விதை விதைக்கப்பட்டதோ அந்தப் பலன், தேவையில்லாமலே போய்விடலாம். அதற்காக அந்தப் பொதுநலத்தொண்டன், வேறோர் இடத்தில் நல்ல விதையை விதைக்காமல் இருந்து விடுவானு?

ஆகையால் என் மகனே! நம்பிக்கையை மட்டும் இழந்து விடாதே. அதை இழந்து விட்டாயானல், அதற்கு நஷ்ட ஈடு படுத்த உன்னிடத்தில் வேறொன்றும் இராது. 'எவ்வளவு உழைத்து என்ன பயன்? உழைப்புத்தான் மிச்சம்' என்று

ஜெர்மானியர்கள் நினைப்பது என்ன?

—எச். பவிஸ் க்ரீன்வுட்

போதுவாக, ஜெர்மனியைப்பற்றி ஒரு தலைச் சார்பான விஷயங்களே பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன என்றும், ஜெர்மனியின் உண்மையான மனப் பான்மையைப் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் பலர் அறிந்து கொள்ள வில்லை யென்றும், பிரிட்டிஷ் அறிஞர் பலரே கருதுகின்றனர். இவர்களில் லார்ட் லண்டன்டெரி, எச். பவிஸ்க் ரீன்வுட் முதலியோர் முக்கியமானவர்கள். இவர்கள் ஜெர்மன் நாகரிகத்தினையும், ஜெர்மானியர்களின் மனப் போக்கையும் நன்குணர்ந்தவர்கள். இந்தக் கட்டுரையை எழுதியுள்ள ஆசிரியர் க்ரீன்வுட், 'ஜெர்மானியப் புரட்சி' என்ற ஆதார பூர்வகமான தொரு நூலை எழுதியிருக்கிருர். ஜெர்மானியர்கள், பிரிட்டிஷ் கோள்கைகளைப் பற்றியும், உலக நிலையைப்பற்றியும் என்ன கருதுகின்றனர் என்பதை இந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிருர்.

பொதுவாக ஐரோப்பாவிலும் சிறப்பாக இங்கிலாந்திலும், தங்களுடைய நாட்டைப் பற்றிச் சரியாக அறிந்து கொள்ளப்பட வில்லை என்ற எண்ணம் ஒவ்வொரு ஜெர்மானியருக்கும் இருக்கிறது. ஜெர்மானியர்களுக்கு இந்த எண்ணம் இருக்கிற தென்பதை அறியாமல் போனுல், நாம் ஜெர்மனியைப் பற்றிச் சரியாக அறிந்து கொள்ள முடியாது. ஜெர்மானியர்களுக்கு இந்த எண்ணம் சென்ற ஒரு நூற்றுண்டாகவே இருந்து வருகிறது. ஆனுல் இந்த எண்ணம் இப்பொழுது மிகவும் வலுத்திருக்கிறது. 1918ம் வருஷம் வார்சேல் சமாதான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்தில், தாங்கள் பெரிதும் அவமானப்படுத்தப்பட்டதாக எல்லா ஜெர்மானியர்களும் கருதுகிருர்கள். நாஜி புரட்சியானது, தங்களுக்சேற்பட்ட இந்த அவமானத்தைப் போக்கிய தென்றும்,

---

மட்டும் நீ நினைத்து விடுவாயானுல், உன்னுடைய கதி அதோ கதி தான்.

கிறிஸ்தவப் பாதிரிகள் உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்று, தங்கள் மதத்தைப் பரப்புகிருர்களே, அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது தெரியுமா? தாங்கள் எந்த ஜனங்களிடத்தில் பழகச் செல்கிருர்களோ, அந்த ஜனங்களின் மதாநுஷ்டானங்களையும் பழக்க வழக்கங்களையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த ஜனங்களின் பாஷையைத் தெரிந்து கொண்டு அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டி யிருக்கிறது. இவையெல்லாம் அடைய எத்தனையோ வருஷங்கள் ஆகின்றன வல்லவா? இதற்கு எவ்வளவு பொறுமைவேண்டுமென்பதைப்பற்றி நீ சிறிது யோசித்துப்பார்த்தாயானுல், அவர்களுடைய பொறுமையையும், விடா முயற்சியையும், சலியா உழைப்பையும் கண்டு நீ பிரமித்துப் போவாய்.

ஆகையால் மகனே! உழைப்பதற்குச் சங்கற்பம் செய்து கொள்.

தங்களுக்குத் தன் மதிப்பையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்திக் கொடுத்ததென்றும், பொதுவாக உலக நாகரிகம் அபிவிருத்தி யடைவதற்கு, இந்தப் புரட்சியின் மூலம் பெரிதும் உதவி செய்ததாகவும், பெரும்பாலான ஜெர்மானியர்கள் கருதுகிறார்கள். கி. பி. பத்தொன்பதாவது நூற்றாண்டில் எப்படி பிரெஞ்சு புரட்சியானது, பொருளாதார, சமுதாய அபிவிருத்தியின் முன்னணியில் நின்றதோ, அதைப்போல், இந்த இருபதாவது நூற்றாண்டில் ஜெர்மானியப் புரட்சியானது எல்லா வகையிலும் முன்னணியில் நிற்க வேண்டுமென்று நாஜிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். சாதாரணமாக ஒரு புரட்சி ஏற்பட்டு அதன் விளைவுகளாகச் சில தீய அமிசங்களும் ஏற்படத்தான் செய்யும். இஃது எல்லாப் புரட்சிகளுக்கும் ஏற்பட்ட ஒரு பொதுவான விதி. ஆனால் ஜெர்மனியைத் தவிர்த்த மற்ற அந்நிய நாட்டுப் பத்திரிகைகளும் பொது ஜனங்களும், ஜெர்மானியப் புரட்சியின் தீய அமிசங்களைப்பற்றித்தான் வலியுறுத்திக் கூறுகிறார்களே தவிர, நாஜி கட்சி செய்திருக்கும் மகத்தான வேலைகளையோ, அதனால், ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நன்மைகளையோ எடுத்துக் கூறுவதேயில்லை யென்ற எண்ணம் எல்லா ஜெர்மானியர்களிடத்திலும் இருக்கிறது. இதனால் தாங்கள் தவறாகக் கருதப்படுவதாகவே ஜெர்மானியர்கள் எண்ணி வருத்தப்படுகிறார்கள்.

ஹிட்லர் முதற் கொண்டு எல்லா நாஜி தலைவர்களும் பேசுகிற பேச்சுக்களிலும் இந்த மனப்பான்மை நன்கு தொனிக்கிறது. தங்களைச் சரியாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யாமல் தங்களைக் குறை கூறுவதை ஜெர்மானியர்கள் விரும்பவில்லை. இதனாலேயே தங்களைக் குறை கூறுகிறவர்களைப்பற்றி அவமதிப்பாகப் பேசுவதோடு, அவர்களுடைய குறைகளை எடுத்துக் காட்டுவதில் முனைகிறார்கள்; நாஜி கட்சி அடைந்துள்ள வெற்றிகளைக் குறித்துப் பேசுகிறார்கள். நாஜி கட்சித் தலைவர்கள் கூறும் இந்த அபிப்பிராயத்தை ஜெர்மானியப் பொது ஜனங்கள் அப்படியே அங்கீகரிக்கவில்லை யென்று கருதுவது தவறு. வெளி நாட்டாரில் யாராவது, ஜெர்மனியின் பொருளாதார முறைகளைப் பற்றிக் குறை கூறினால், உடனே ஜெர்மானியர்கள் 'ஓ! ஜன நாயக நாடுகள் என்ன சாதித்து விட்டன? வியாபார மந்தம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவைகளைச் சமாளிக்க முடியாத போது, நாங்கள் வியாபாரச் செழிப்பை உண்டு பண்ணி, வேலையில்லாத் திண்டாட்டத்தையும், குறைத்தோம்' என்று கூறுகிறார்கள். 'யூதர்களை இப்படி இம்சிக்கலாமா' வென்று கேட்டால், 'பாலஸ்தீன், இந்தியா, ஐர்லாந்து முதலிய நாடுகளில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்' என்று திருப்பிக் கேட்கிறார்கள்.' அதனோடு, 'எங்களுடைய நாஜி புரட்சியானது ஜெர்மனிக்குள்ளாவது சமாதானத்தை உண்டு பண்ணியிருக்கிறது. ஆனால் பாலஸ்தீனத்தில் இன்னும் பிரிட்டிஷாரால் சமாதானத்தை உண்டு பண்ண முடியவில்லையே என்று பதில் கூறுகிறார்கள்.

கிறிஸ்தவப் பாதிரிமார்களும் பிறரும் துன்புறுத்தப் படுகிறார்களென்று, சொன்னால் 'நீங்கள் மட்டும் ஏன் பொதுவுடமைக் கொள்கையையும்,

நாஸ்திகத்தையும் ஆதரிக்கிறீர்களென்றும், கிறிஸ்தவ தர்மத்திற்கு இவைகள் பெரிய இடையூறுகளாயிருக்கின்றனவென்றும்' ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள்.

உண்மை யென்ன வென்றால், நாஜி ஜெர்மனியைப்பற்றி ஜன நாயக நாடுகள் கூறும் குறைகள் யாவும் குறி தவறிப் பாய்வனவாக இருக்கின்றன. இதனால் அநாவசியமான மனஸ்தாபங்களே ஏற்படுகின்றன. நாம் என்ன நோக்கத்தோடு குறை கூறுகிறோமோ அதற்கு மாறான பலனே உண்டாகிறது. உதாரணமாக, ஜெர்மனி இப்பொழுது அநுஷ்டித்து வரும் கொள்கையானது, யுத்தத்திலேயே கொண்டு போய் விடும் என்று சொல்வோமானால், அதை ஜெர்மானியர்கள் பெரிதும் வெறுக்கிறார்கள். இந்த யுத்தப் பிரச்னையை நாம் இரண்டுவித நோக்கத்தோடு கவனிக்கலாம். ஒன்று, நாம் உண்மையைக் கூறுவதனாலேயே ஜெர்மானியர்கள் இவ்வளவு பலமாகக் கண்டிக்கிறார்கள் என்று கருதலாம். அல்லது, தங்களிடம் இல்லாத ஓர் எண்ணத்தைக் கற்பிப்பதைக் கண்டு ஜெர்மானியர்கள் வருந்துகிறார்களென்றும் கூறலாம். பொதுவாக, நான் கவனித்து வந்த அளவில் ஜெர்மானியர்களில் பெரும்பாலோர் சமாதானத்தையே விரும்புகிறார்களென்று சொல்ல வேண்டும். ஆனால் தலைவர்கள் சொல்வதை இவர்கள் மீறி நடப்பதில்லை. சிறப்பாக ஹிட்லரின் உண்மையான மனப் பான்மையில் இவர்களுக்கு அபார நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கையை வெளி நாட்டார், யாரேனும் குறைக்கப் பார்த்தால், ஜெர்மானியர்கள், இந்த நம்பிக்கையில் இன்னும் அதிகமான உறுதி கொள்கிறார்கள்.

ஹிட்லரின் சமாதான எண்ணத்தில் தனக்குப் பூர்ண நம்பிக்கை இருக்கிறதென்பதை பிரிட்டிஷ் பிரதம மந்திரியான நெவில்லி சேம்பர்லேன் பகிரங்கமாகத் தெரிவித்ததாலேயே, ம்யூனிக் ஒப்பந்தம் ஏற்பட்டது. சேம்பர்லேன் இங்ஙனம் கூறியது, ஜெர்மானியப் பொது ஜனங்களிடத்தில் பிரிட்டிஷாரைப் பற்றி ஒரு நல்லபிப்பிராயத்தை உண்டு பண்ணி விட்டது. 'ஜெர்மனியைப் பற்றிச் சரியாக உணர்ந்து கொள்ளக் கூடிய ஒருவர், பிரிட்டிஷ் அரசாங்க நிருவாகத்தின் தலைமையில் இருக்கிறார் என்ற' திருப்தி ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக ஆங்கிலோ-ஜெர்மன் நட்பு விருத்தி யடையும் என்று பலரும் நம்பினார்கள்.

ஆனால் இப்பொழுது இந்த நம்பிக்கைக்கு ஜெர்மனியில் ஏமாற்றம் ஏற்பட்டு விட்டது. ம்யூனிக் ஒப்பந்தமானது, இங்கிலாந்துக்கு ஏற்பட்ட ஒரு பெரிய அவமானம் என்று பிரிட்டிஷாரில் பலர் நினைக்கின்றனர் என்று, ஜெர்மானியர்களுக்குத் தெரிந்ததும், அவர்கள் வெறுப்படையலானார்கள். இதனோடு, இங்கிலாந்து தனது ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு வருவதையும், ஜெர்மனிக்கு விரோதமாகப் பிரசாரம் செய்யப்படுவதையும் ஜெர்மானியர்கள் விரும்பவில்லை.

பிரிட்டன், தன் ஆயுத பலத்தை அதிகப்படுத்திக் கொள்வதைப்பற்றிக் கூட ஜெர்மனி கவலைப்படவில்லை. ஏனென்றால், அதுவும் தன் ஆயுத பலத்தை அதிகமாகப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்த ஆயுதப் பெருக்கத்துக்குப் பிரிட்டன் கூறுகிற சமாதானத்தைக் கண்டு,

தான், ஜெர்மனி வெறுக்கிறது. மற்றும், ஜெர்மனிதான் யுத்த சந்நாகங்களைச் செய்து கொண்டு வருகிறதென்று சொல்லிக் கொண்டே, பிரிட்டன், தன் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொள்வதையும் ஜெர்மனி கவனித்து வருகிறது. பொதுவாகக் கூறப்போனால், இப்பொழுது இங்கிலாந்தில் யுத்தத்தைப் பற்றிப் பேசப்படுவதைவிட அங்குக் குறைவாகப் பேசப்படுகிறதென்றே சொல்ல வேண்டும். ஜெர்மனியில், ஜனங்கள், எப்பொழுதும் போல் சகஜமாகவே தங்கள் தங்கள் அலுவல்களைக்கவனித்துக் கொண்டு வருகிறார்கள். மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளுடன் ஜெர்மனியை இப்பொழுது யுத்தத்திற்கு முட்டவிடுவதென்பது, எத்தகைய சர்வாதிகாரியாலும் முடியாத காரியம். ஏனென்றால், எந்த அரசாங்கமும் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் போக முடியாது. ஆனால், நாஜி ஜெர்மனியை பிரிட்டிஷ் பத்திரிகைகள் தாக்குவதும், பிரிட்டிஷ் ஆயுதப் பெருக்கம் ஜெர்மனியை யுத்தேசித்தே வென்று கூறுவதும், ஜெர்மனியின் நோக்கங்களைப் பற்றித் திரித்துக் கூறுவதும் பிரிட்டனுக்குச் சாதகமாயுள்ள ஜெர்மன் பொதுஜன அபிப்பிராயத்தை விரோதப் படுத்திக் கொள்வதாகும்

பருத்தித் துணி

கி. பி. 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவி லிருந்து பிரிட்டனுக்கு அதிகமான துணிகள் ஏற்றுமதியாயின வென்பதும், இங்கிலாந்தி லிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான துணிகள் குறைவானதேன்பதும் தெரிந்த விஷயமே. ஓர் உதாரணம்.

வருஷம்	பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி	இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதி
	கஜம்	கஜம்
1814	818,208,	1266,608
1821	19,138,726	1534,495
1828	42,822,077	422,504
1835	51,777,277	306,068



அறிவுத்துறை

மின்சார உழவு

"விஞ்ஞான போதகர்"

மற்றெல்லா வேலைகளைவிட ஓர் நிலத்தை உழுது பண்படுத்துவது மிகக்கஷ்டமான வேலையாயினும் அது நலந்தரத் தக்கதான வேலையாம். மேனாடுகளில் மிருகங்களுக்குப் பதிலாகப் 'பெட்ரோல்' இயந்திரங்களைக் கொண்டு உழவு நடந்து வருகிறது. இதனால் பலகஷ்டங்களுண்டு. ஏனெனில் இவ்வியந்திரங்கள் வெகு கனமாயிருப்பதால் உழுதுகொண்டு போகும் போதே உழுதபாகங்களை அவைகளின் சக்கரங்கள் அழுத்தி மறுபடியும் கடினமாக்கி விடுகின்றன. மேலும் எண்ணெயில் அதிகச்செலவும், திடீரென்று தீபற்றும் விபத்துக்களும் அதிக நஷ்டத்தைத் தருகிறது.

சிலதேசங்களில், உழவேண்டிய நிலத்தின் இருபுறங்களில் இரண்டு இயந்திர வண்டிகளை நிறுத்தி நீண்ட, கூர்மையும், உறுதியும், கனமுமுடையதான ஓர் கலப்பையை இரு இயந்திரங்களுக் கிடையில் வடத்தால் பிணித்துவிட்டு ஒருபுற இயந்திரத்தால் கலப்பையை நிலத்தில் நன்குறப்பதிந்து வரும் படியாய் ஒரு புறத்தில் இழுத்துப் பின்பு மறுபுற இயந்

திரத்தால் கலப்பையை மறுபுறம் இழுக்கப்படுகிறது. இப்படிக் கலப்பையை அங்குமிங்குமோடி நிலத்தை ஆழமாக வெட்டும்போதே இரு இயந்திர வண்டிகளும் மெதுவாக நகர்ந்து செல்லுகின்றன. இப்படியாக நிலங்கள் பல முறை உழுது பண்டுத்தப் படுகின்றன.

இதில் இயந்திரங்களை "பெட்ரோல்" முதலிய எண்ணெய்களால் நடத்துவதைப் பார்க்கிலும் மின்சாரத்தால் நடத்துவது வெகு சுலபம். முதலாவது அதிகச்செலவில்லை. தண்ணீர் முதலியவைகள் தேவையின்றி அதிகச் சிரமமில்லாமல் உழுதுவிடலாம். இத்தாலி தேசத்தில் (1914) குதிரை உழவில் ஒரு ஏக்கர் நிலத்திற்கு* 24 ஷிலிங்கும், நீராவி இயந்திர உழவில் 18 ஷிலிங்கும், மின்சார இயந்திர உழவில் $12\frac{1}{2}$ ஷிலிங்கும் (மற்றெல்லாச் செலவும் உள்பட)செலவாகிறது. ஆனால் மகாயுத்தத்திற்குப் பிறகு (1920) சகல செலவும் உள்பட மின்சார இயந்திர உழவுக்கு $10\frac{1}{2}$ ஷிலிங்கும், "பெட்ரோல்" இயந்திர உழவுக்கு 26 ஷிலிங்கும் செலவாகிற தென்றால் மின்சார இயந்திர உழவின் அநுகூலத்தை அதிகமாக விரித்துரைக்க வேண்டியதில்லை.

சிலசமயம் இரண்டு மின்சார இயந்திரங்களைக் கொண்டு கலப்பையை அங்குமிங்கும் இழுப்பதற்குப் பதிலாக ஒரே இயந்திரத்தை உபயோகப் படுத்தலாம். இங்கே இயந்திர வண்டியிலிருந்து வடம் புறப்பட்டு மறுபக்கத்திலிருக்கும் சாதாரணமானதோர் வண்டியின் மேலுள்ள ஓர் சக்கரத்தில் சென்று மறுபடியும் மின்சார இயந்திர வண்டியை வந்தடைகிறது. ஆகவே ஒரே இயந்திரம் வடத்தின் ஒரு பாகத்தை இழுத்து மறுபக்கத்தைச் சோரவிட்டு மறுபடியும் சோரவிட்ட பாகத்தை இழுத்து, இழுத்த பக்கத்தைச் சோரவிட்டு இப்படியாக கலப்பையை அங்குமிங்கும் ஓடச் செய்கிறது.

விவசாயப் பெருக்கையும், விவசாயச் சிறப்பையுமே, இந்தியாவின் பிரகாசம்,பெரும்பாலும் தழுவிநிற்கிறது. தற்போது கிராமங்களில் வேலைகள் செய்ய ஆட்கள் அகப்படாததால் அதிகக் கூலி கொடுக்கவேண்டி யிருக்கிறது. இதனுல் அதிகப் பயனடைய முடியாததால் அநேக நிலங்கள் தரிசுகளாயிருக்க ஏற்படுகிறது. ஆதலால் மனிதராலாகும் வேலையை மாற்றி இயந்திரங்களால் செய்து முடிக்க வேண்டியதா யிருக்கிறது. மேனுடுகளில் நீராவி, எண்ணெய் முதலியவைகளால் ஓடும் சாதாரண இயந்திரங்களைக் கொண்டு விவசாயம் முதலிய வேலைகளை நடத்தி வருகின்றனர்.

விவசாயக் கைத்தொழில், மற்ற பல கைத்தொழில்களைப்போலல்ல. இத்தொழிலின் விருத்திக்குக் காலங்களை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு பெரிய ஜமீன்தார் தனக்குள்ள ஏராளமான நிலங்களை வருஷத்தில் ஒருசில மாதங்களுக்கு மாத்திரம் உபயோகப்படுத்தி மற்றக்காலங்களில் உபயோகப்படுத்த முடியாமல் போகிறது. ஆகவே செலவுக்குத் தனக்குக் கிடைக்கும் தானியம் முதலிய உணவுப் பொருட்களை அதிகமாக விற்று இலாபம் பெற முடியாமல் பெரும்பாலும் தன் உபயோகத்துக்குச் சேர்த்து வைக்கவேண்டி யிருக்கிறது. அப்படியல்லாமல் வருஷ முழுவதும்

* ஒரு ஷிலிங் முக்கால் ரூபாய்.

பலவித விவசாயங்களைச் செய்து கொள்ள முடியுமானால் செலவுக்குக் கொஞ்சம் போக மீதியான அதிக பாகத்தை விற்று இலாபமடையலாமல்லவா? மேலும் தன் தொழிலாளர்களுக்கும் மற்ற ஆடுமாடுகளுக்கும் விவசாயமில்லாக் காலங்களில் வீண் செலவுகள் செய்துகொண்டிருக்கவும் ஏற்படுகிறது. ஆதலால் வருஷ முழுவதும் எளிதில் விவசாய விருத்தி ஏற்பட்டால் எவ்வளவோ அனுகூலங்களுண்டு என்பது பிரத்தியட்சம். இதற்காக மேனாடுகளைப்போல இயந்திரங்களை உபயோகப்படுத்த வேண்டும். இவ்வியந்திரங்களுக்கு மின்சார சக்தியை உபயோகித்தால் காரியங்கள் வெகு சீக்கிரத்தில் அதிகச் செலவின்றி நடைபெறுகின்றன. மின்சாரம், விவசாய இயந்திரங்களுக்காவதன்றியும், விளக்குகளுக்கும், உஷ்ணப்படுத்துவதற்கும், சமைப்பதற்கும் இன்னும் ஏராளமான வகைகளில் உபயோகப்படுகிறது. விவசாயக் கைத்தொழில்களும் மின்சார இயந்திர உபயோகத்தை விட எண்ணெய், நீராவி இயந்திர உபயோகம் 2¼ பங்கு அதிகமாயும், குதிரை முதலியவைகள் உபயோகம் 6 பங்கு அதிகமாயும், மனிதர்களின் உபயோகம் 17 பங்கு அதிகமாயும் செலவாகிறதென்று காணப்படுகிறது. ஆதலால் வேளாண்மையில் மின்சார உபயோகத்தால் குறைந்த செலவில் மிகுந்த பிரயாசையின்றி, சின்னாட்களில் தகுந்த இலாபம் கிடைக்கும் என்பதை நிரூபித்திருக்கின்றனர்.

மின்சாரம் பெறுவதெப்படி?

மின்சார சக்தி வெகு சுலபமாக அருகிலிருந்து கிடைக்காவிட்டால் சொந்தமாக "டைனமோ" வென்ற மின்சாரம் உண்டாக்கும் இயந்திரத்தைத் தங்கள் நிலங்களுக்கருகில் அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த டைனமோவைச் சுழலச் செய்வதற்கு நிலக்கரி, எண்ணெய் (பெட்ரோல்) நீர் வீழ்ச்சி, காற்று முதலியவைகளிலொன்று முக்கியமாய் வேண்டியதாயிருக்கிறது. "பெட்ரோல்" எண்ணெய்க்கு அதிகச் செலவு ஏற்படுவதால் அதை உபயோகப்படுத்துவதில் கஷ்டம் ஏற்படும். ஒரு உயரமான விடத்தில் (இரண்டு இலேசான, நீண்ட, உறுதியான தகடுகளைக் குறுக்காக அமைத்துத் தானாகக் காற்றினாலும் சுழலும்) பெரிய காற்றாடியைக் கொண்டு டைனமோவைச்சுழலச்செய்யலாம். ஆனால் நாம் எப்பொழுதும் காற்றை எதிர்பார்த்த வண்ணமாயிருக்க வேண்டி வரும். மேலும் காற்று ஒரேவிதமான விரைவுடன் வீசிக்கொண்டிராது. நீர் வீழ்ச்சி மிகவும் உபயோகமானது. மைசூர் இராஜ்ஜியத்தில் காவேரி நதியின் நீர் வீழ்ச்சியால், சுழலும் சக்கரங்களைக் கொண்டு அநேக டைனமோக்கள் நடத்தப்பட்டு வேண்டிய அளவு மின்சாரம் கிரகிக்கப்படுகிறது. ஆனால் நமது வேலைக்கு (வேளாண்மைக்கு) டைனமோவை நடத்த எக்காலத்திலும் நீர் வீழ்ச்சி தேவையாயிருக்கிறது. இது முடியாத காரியம். கோடைகாலத்தில் ஆற்று நீர் வற்றிப் போகும். ஆகவே நீர் வீழ்ச்சியாலும் அதிக சௌகரியமில்லை. நிலக்கரி, மரக்கட்டைகளைக்கொண்டு நீராவி இயந்திரத்தால் டைனமோவைச் சுற்றி மேலே குறித்த கஷ்டங்களேற்படாது. ஆதலால் நிலக்கரி, மரக்கட்டைகளை உபயோகித்து எக்காலத்திலும் வேண்டிய அளவு டைனமோவிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தால்

அநேக இயந்திரங்களை நடத்தி வேளாண்மைக்குரிய பல வேலைகளைச் செய்து கொள்ளலாம்.

மின்சாரம் பெறும் முக்கிய வழியைப்பற்றியும் நிலத்தை உழுது பண்படுத்துவதற்குச் சில சமயம் இரண்டு மின்சார இயந்திரங்களைக் கொண்டு கலப்பையை அங்குமிங்கும் இழுப்பதற்குப் பதிலாக ஒரே இயந்திரத்தை உபயோகப்படுத்தலாமென்பதைப்பற்றியும் மேலே ஆராய்ந்தோம்.

விட்டாலும் மற்ற சில்லரைக்குடியானவர்களுக்கு வாடகைக்கு வேலை செய்துவர விடவேண்டும். அப்படியில்லாவிட்டால் இயந்திரத்தாலடையும் இலாபம் குறைந்து விடும். மின்சார இயந்திரத்தை மற்ற வேலைகளுக்கும், கதிர்களறுக்கவும், அடிக்கவும் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு மணிக்கு ஒரு "கிலோவாட்" (Kilowatt) மின்சாரத்திற்கு 1 பென்



1. கலப்பை இழுக்கும் மின்சார இயந்திர வண்டிகள். 2. கலப்பை. 3. சாதாரண வண்டி

இரண்டு இயந்திரங்களையுடைய கலப்பைக்கு வடம் அதிகம் தேவையில்லை. எவ்வித காடுமுரடான நிலத்திலும் உபயோகப்படுத்தலாம். சுமார் 650 கெஜ தூரம் கலப்பையை இழுத்து உழலாம். ஆனால் இரண்டு இயந்திரங்களுக்கு அதிகச் செலவாகிறது. ஒரே இயந்திரத்தையுடைய கலப்பையில் செலவு கொஞ்சமானாலும் வடம் அதிகம் வேண்டும். மேலும் மேட்டுப்பாகங்களில் உபயோகப்படுத்த முடியாது.

மின்சார இயந்திரக் கலப்பையை ஓய்வில்லாமல் உபயோகப்படுத்த வேண்டும். தனக்கு வேலை முடிந்து

னியிலிருந்து 3 பென்ஸ் வரை செலவாகும். ஒரு மணிக்கு 3 மைல் அங்குமிங்கும் இழுக்கப்படும். 3 அடி அகலக் கலப்பையால் ஒரு நாளைக்குப் பத்து மணி நேரத்தில் குறைந்தது 8 ஏக்கர் நிலத்தை இலேசாய் உழுது பண்படுத்தி விடலாம்.

மின்சாரத்தால் தாவர விருத்தி.

பயிர்ப் பூண்டுகள் முளைத்திருக்கும் நிலத்திற்கு மேலே உலாவும் வாயுவில் * மின்சார அலைகளைச் செலுத்தி

*மின்சாரத்தை (alternating current) வெட்டவெளியில் செலுத்தினால் தண்ணீரில் உண்டாவது போல் அலைகளுண்டாகிப் பறந்தோடுகிறது.

ளுல் விளைவு அதிகப்படுவதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

பயிர்களுக்கு மேலே சுமார் 2 அடி உயரத்தில் மின்சாரம் அங்குமிங்கும் ஓடுவதற்கு நெடு நீளமாகக் கம்பிகளைச் சமதூரங்களில் அமைத்துப் பார் வைக்கு ஓர் பந்தலைப் போலிருக்க வேண்டும். கம்பிகளைத் தாங்கி நிற்க, நிலத்தின் சுற்றுப்புறங்களில் பருத்த இரும்புக் கம்பிகளை நிலை நிறுத்த வேண்டும். குறுக்காகக் கம்பிகள் செல்லக்கூடா. இக்கம்பிகளை வேண்டும் போது உயர்த்தவும், தாழ்த்தவும் பிரிக்கவும் கூடியதாயமைத்திருத்தல் வேண்டும். இப்பொழுது பலமான

வெண்கலக் கம்பிகளை $4\frac{1}{2}$ கெஜம் சமதூரமாகப் பூமிக்குமேல் 7 அடி தூரமாக அமைத்து 3 "ஆம்பியர்" அளவான மின்சாரத்தை மொத்தம் 818 மணி நேரங்களுக்கு உபயோகப் படுத்தியதில் தானியத்தில் 100 க்கு 88 வீதம் அதிகமாகத் தானியம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. மேலும் வருஷா வருஷம் விளைவு அதிகமாவதாகவும் தெரிகிறது. இவ்விதமாக வெள்ளரிக்காய், உருளைக்கிழங்கு முதலிய தோட்டங்களிலும் மின்சாரத்தை உபயோகித்துப் பலனடைகின்றனர்.

விதைப்பதற்கு முன் விதைகளை உப்

உழவின் ஆழம்.	ஒரு மணிக்கு உழவாகும் நிலம்	ஒரு ஏக்கருக்கு மணிக்குச் செலவாகும் மின்சாரம்
6 அங்குலம்	$2\frac{1}{2}$—4 ஏக்கர்	14 "கிலோவாட்"
10 ,,	$1\frac{3}{4}$,,	,,
13 ,,	$1\frac{1}{4}$,,	,,

(அதிகமான) மின்சாரத்தைக் காலை மாலை இரு வேலையும் சில மணி நேரம் வரை இக்கம்பிகளில் செலுத்திவர வேண்டும்; இவ்விதம் அமைக்கப்படும் கம்பிகளுக்கு அதிகச் செலவில்லை. இவைகளை வருஷா வருஷம் உபயோகித்து விளைவை அதிகப்படுத்தலாம். கம்பிகளிலிருந்து மின்சார ஒழுக்கு, காற்றைக்கடைந்து பயிர்களில் தாக்கிப் பூமியை நாடி ஓடுவதால் காற்றில் கலந்திருக்கும் உப்புவாயுவைப் பயிர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதல்லாமல் மண், பயிர்களுக்காகப் பண்படுத்தப் பட்டுக் காற்று, தண்ணீர் முதலியவை இலகுவில் கிரகிக்க நல்ல வசதிகளேற்படுகின்றன.

புத் தண்ணீரில் ஊறவைத்து மின்சாரத்தை அவைகளுக்குள் செலுத்திப் பின்பு காயவைத்து விதைப்பதிஞல் விளைவு அதிகப்படுவதாகக் கூறுகின்றனர். ஆனல் இம்முறையை அதிகமாக இன்னும் உபயோகப் படுத்தவில்லை. மின்சார வெளிச்சத்தைச் சூரிய வெளிச்சத்திற்குப் பதிலாகப் பயிர்களுக்கு உதவி விளைவை இரண்டு பங்கு அதிகப்படுத்தி யிருக்கின்றனர். சில (தோட்டப்) பயிர்களை மின்சார வெளிச்சத்தால் அதன் சரியான காலத்திற்கு முன்னதாகவே புஷ்பிக்கச் செய்து அதிக விலைக்கு விற்று இலாபம் பெறுகின்றனர். ஏனெனில் காலந்தவறி விளையும் விளைவுக்கு அரு

மையானால் அதிக விலைகொடுக்க வேண்டுமல்லவா?

இரசாயன சாஸ்திரப்படி நிலங்களுக்கு 'நைட்ரேட்' என்ற ஓர் உப்பு, நல்ல உரமாகிறது. இது தென்னமெரிக்காவிலிருந்து அதிகமாய் வரவேண்டும். இதற்குப் பதிலாக 'அம்மோனியா சல்பேட்' என்ற உப்பை உபயோகப்படுத்தலாம். இதற்காக உப்பு வாயுவும் வேண்டும். இந்த வாயுவை ஆகாயத்திலிருந்து மின்சாரத்தால் வெகு இலகுவில் பிரித்துக் கிரகிக்கக்கூடும். ஆகவே நிலங்களுக்கு உப்புவாயுவினாலான உரத்தை உபயோகப்படுத்தலாம்.

முன்பு கூறியபடி உழவுக்கு வேண்டிய மின்சார இயந்திர வண்டியைக் கொண்டு கதிர்களை வெகு எளிதில் அறுத்துச் சேர்த்து அடித்து தானியங்களைக் குவித்துவிடலாம். நீராவி இயந்திரங்களை விட மூன்றிலொரு பங்கு அதிகமாக மின்சார இயந்திரம் வேலை செய்யும். கதிர்களை அடித்து வைக்கோலையும், தானியங்களையும் பிரித்துக் குவிக்க மின்சார இயந்திரங்களை வெகு சுலபமாக உபயோகப்படுத்தலாம். மழையில்லாக்காலங்களிலும் ஊற்றுகளிலிருந்து மின்சாரத் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தால் வேண்டிய தண்ணீரை 25 அடி ஆழத்திலிருந்து 100 அடி உயரம் வரை வேண்டும்போது தண்ணீர் இறைத்து வேளாண்மை செய்யலாம். மனிதரையும், மற்ற இயந்திரங்களையும் உபயோகப்படுத்துவதில் காலதாமதமும், வீண் செலவும் ஏற்படுகிறது.

மின்சாரத்தால் பால் கறத்தல்

ஓர் சிறிய மின்சார "மோட்டாரை"க் கொண்டு பசுக்கள் வெகு சுலபமாகப் பால் கறக்கப்படுகின்றன. இந்த இயந்திரங்களால் பால் கறந்தவுடன் அந்தப்பால் சுத்தமாக அதற்கான பாத்திரத்தில் சென்று விழவும் அசுத்தம் சேராதவண்ணம் செவ்வையாக மூடவும் படுகிறது. கொசு முதலிய பூச்சிகள் விழுந்து கெடுக்க இடமில்லை. ஒரு குதிரைப்பவரை* (சக்தியை)யுடைய மின்சார இயந்திரத்தால் 10 பசுக்களை வெகு விரைவில் பால் கறந்து விடலாம். $8\frac{1}{2}$ குதிரைப் பவரையுடைய ஒரு இயந்திரத்தால் 70 பசுக்களை ஒரு நாளைக்கு இரண்டு தடவை பால் கறந்து வருகின்றனர். இப்படிக் கறப்பதற்கு மேல்பார்க்க ஒரே மனிதன் போதுமானது. பால் கறக்கும் இயந்திரச் செலவு ஒரு பசுவுக்கு $\frac{1}{6}$ பென்ஸு தானாகிறது. சுமார் ஒரு பைசாவென்று கூறலாம். வெண்ணெய் கடைந்தெடுக்கையில் இழுத்துக் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும் மின்சார யந்திரத்தால் வெகு சீக்கிரத்தில் பாலைக்கடைந்துவிடலாம்.

மின்சாரக் குஞ்சு பரிபாலனம்

முட்டைகள் குஞ்சு பொரிப்பதற்கு உஷ்ணம் அத்யாவசியமாயிருக்கிறது. மின்சார சக்திக்கு, உஷ்ணங் கொடுத்துத் தகிக்குங் குணமிருப்பதால், மின்சாரத்தால் முட்டைகளினின்று குஞ்சு பொரிக்கச் செய்யலாம். மரக்கட்டைகளால் இரண்டு அறைகள் ஒன்றின்மேலொன்றாயமைத்துக் கீழறையில் முட்டைகளைப் பரப்பி மேலறையில் மின்சார இயந்திரங்களை வைத்து உஷ்ணமுண்டாக்கி முட்டைகளைத் தகிக்கின்றனர். சுமார் 50 அல்

*குதிரைப்பவர்-500 பவுண்டை ஒரு விநாடியில் ஒரு அடி தூரம் உயர்த்தும் ஒன்றின் சக்தி. -746 "வாட்ஸ்" (மின்சார அளவில்).

லது 60 அளவு (Degrees) உஷ்ணம் போதுமென்கின்றனர். நியூயார்க் பட்டணத்தில் ஒரே தடவையில் 20,000 முதல் 25,000 வாத்துக்குஞ்சு களைப் பொரிக்கச் செய்கின்றனர். இந்த வாத்துக் குஞ்சுகளுக்கு ஆகாரங்களை மின்சார இயந்திரத்தாலேயே ஒன்று சேர்த்துப் பாகுபடுத்திக் கொடுக்கின்றனர். தண்ணீர் இரைக்கவும், வெளிச்சம் கொடுக்கவும் உபயோகப் படுத்திக் கொள்ளுகின்றனர்.

பகலை அதிகப்படுத்தினால் பறவைகள் அதிக உணவு உண்டு தேகாப்பியாச மெடுத்து அதிக முட்டைகளிடுகின்றன. ஆதலால் பகலை அதிகப் படுத்துவதற்கு மின்சார விளக்குகளை ஆங்காங்கு அமைத்து இரவைப் பகல் போலாக்கி மேனாடுகளில் அதிக முட்டைகளைப் பெற்று வருகின்றனர். ஒரு வருஷத்துக்கு ஒரு பறவைக்கு ¾ பென்ஸ் மின்சார விளக்குக்காகச் செலவிட்டு 100க்கு குறைந்தது 25 முட்டைகள் அதிகமாகப் பெறுகின்றனர். முட்டைகளைப் பரிசோதிப்பதற்கு ஒரு துவாரமுடைய பெட்டிக்குள் மின்சார விளக்கிட்டு அத் துவாரத்தில் முட்டையை வைத்து நோக்கினால் முட்டையின் உட்பாகம் தெளிவாகக் காணப்படுகிறது. அதிலிருந்து நல்ல முட்டைகளைத் தேர்ந்தெடுக்கலாம். சமையல் செய்யவும், குளிர் காலத்தில் வீட்டை உஷ்ணப்படுத்தவும், துணிகளைக் கசக்கி வெளுக்கவும் இதுபோன்ற பலவித வேலைகளுக்கும் மின்சாரம் உபயோகமாகிறது. வேளாண்மை விருத்திக்கான பலவித சாஸ்திரீய முறைகளில் மின்சார உபயோகத்தை மாத்திரம் இங்காராய்ந்தோம்.

மின்சாரத்தை உபயோகப்படுத்தாத நம் இந்தியாவில் திடீரென்று ஓர் எளிய வேளாளரை உபயோகப் படுத்தச் சொல்லுவது கூடாத காரியம். ஏனெனில் அவர்களுக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்தும் வழி தெரியாமலும், மின்சார இயந்திரம் முதலியவைகளை வாங்கச் சக்தியற்றுமிருப்பது யாவரும் தெரிந்த விஷயம். ஆகவே மேனாடுகளைப் போல கவர்ன்மெண்டாரின் உதவியாக இதற்காக ஓர் சங்கம் (Electric Agricultural Board) ஏற்பட வேண்டும். இச்சங்கத்தின் பொறுப்பால் மின்சாரம் உண்டுபண்ணி வேளாண்மை செய்வோர்களுக்கு விற்றுவர வேண்டும். அன்றியும் அப்பொழுதைக்கப்பொழுது இயந்திரங்கள் உதவி, அவைகளின் உபயோகங்கள் இவைகளைப் பற்றிக் கிராம வாசிகளுக்குப் போதிக்க வேண்டும். ஆனால் நம் இந்தியக் குடியானவர்கள் இவ்வழியில் கவர்ன்மெண்டாரின் உதவியைப் பெறமுடியுமா வென்பது தான் கேள்வி. சுதந்திரமுடைய நாடுகளில் இவைபோன்ற காரியங்கள் பல நடைபெற்று வருகின்றனவென்பது யாவரும் தெரிந்த விஷயம். சுதந்திரமற்ற நாட்டிலிருக்கும் எளிய குடியானவர்களுக்குப் பெரிய ஜமீன்தார்களே உதவிசெய்ய வேண்டியிருக்கிறது. இவர்களுக்கு ஏராளமான நிலங்களிருப்பதால் மின்சார வேளாண்மையைக் கைக்கொண்டால் தங்கள் வேலைகளை எளிதில் முடித்துக் கொள்ளுவதன்றியும் மற்ற எளிய வேளாண்மை செய்வோர்களுக்கும் குறைந்த வாடகைக்கு இயந்திரங்களை யுதவி அவற்றால் இருபாலாரும் தக்கபடி இலாபம் பெறுவார்களென்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் ஜனத்தொகை சுமார் 32 கோடி. இதில் விவசாயிகள் 28 கோடி. மொத்த ஜனங்களின் 2965 லட்சம் கிராமங்களிலும், 325 லட்சம் பட்டணங்களிலும் வசித்து வருகின்றனர். இப்பொழுது பயிராகும் நிலம் 22½ கோடி ஏக்கர். இன்னும் பயிர் செய்யக்கூடியது 15 கோடி ஏக்கர் நிலம். இப்படி விவசாயங்கள் செய்யக்கூடிய நிலங்கள் ஏராளமாயிருந்தும் இவைகளை வெகுஇலகுவில் விவசாயச் செலவின்றிச் செய்துமுடிக்க முயற்சியும் ஆற்றலுமில்லாமல் அநேகர் வேளாண்மையை விட்டு வியாபாரம் முதலிய மற்ற துறைகளைநாடி யோடிவிடுகிறார்கள். இவர்கள் தங்களுக்கும் தங்கள் தேசத்திற்கும் முண்டாகும் கெடுதிகளையும் நஷ்டங்களையும் பற்றிச் சற்றேனும் சிந்திப்பார்களாக.

இந்தியாவில் விவசாய நிலங்களும் அவற்றினின்று கிடைக்கிற அரிசி ஏற்றுமதி விவரமும்

வருஷம்	விஸ்தீரணம் ஆயிரம் ஏக்ரா	உற்பத்தி ஆயிரம் டன்	ஏற்றுமதி டன்
1913—14	76,908	30,138	2,419,850
1918—19	77,613	24,318	2,017,900
1930—31	79,467	31,277	2,253,784
1931—32	80,299	31,649	2,301,415
1932—33	78,912	29,958	1,828,196
1933—34	79,224	29,745	1,832,539
1934—35	78,129	29,024	1,592,537

நாஜி கட்சியின் வேலைத் திட்டம்

1933ம் வருஷம் மார்ச் மாதம், ஹிட்லர், நாஜி கட்சியின் தலைவன் என்ற முறையில், ஜெர்மன் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்டான். ஆனால் இதற்குச் சுமார் பதின் மூன்று வருஷங்களுக்கு முன்னர் நாஜி கட்சி ஏற்பட்டு அதன் வேலைத் திட்டமும் வெளியிடப்பட்டது. இந்தத் திட்டம் இருபத்தைந்து பிரிவுகளைக் கொண்டது. இதனை அப்படியே இங்கு வெளியிடுகிறோம்.

1920ம் வருஷம் பிப்ரவரி மாதம் 24ந் தேதி ம்யூனிக்கில் ஹாப்ராவ் ஹவுஸ் பெஸ்ட்ஸாலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தேசீய அபேத வாத ஜெர்மன் தொழிற் கட்சியார், தங்களுடைய வேலை திட்டத்தை உலகத்தாருக்குப்பின் வருமாறு அறிவித்தனர் :—

(கட்சிச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுப்படி இந்த வேலைத் திட்டமானது மாற்றப்படாதது என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.)

1 சமூகங்களினால் அநுபவிக்கப்படுகிற சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டு, பெரிய ஜெர்மனியை உண்டாக்குவதற்கு எல்லா ஜெர்மானியர்களும் ஐக்கியப்பட்டிருக்க வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

2 மற்றச் சமூகங்களுடன் நடவடிக்கைகள் நடத்தும்போது, ஜெர்மானியர்கள் சம உரிமை பெற்றவர்களாக நடத்தப்பெற வேண்டுமென்றும், வார்சேல் உடன்படிக்கையையும் செயிண்ட் ஜெர்மேன்* உடன்படிக்கையையும் ரத்து செய்ய வேண்டுமென்றும் நாங்கள் கேட்கிறோம்.

3 நமது ஜனங்களின் உணவுப் பொருள் தேவைக்காகவும், அதிகப்படியான நமது ஜனத்தொகையைக் குடியேற்றுவிக்கவும் நமக்கு நிலமும் தேசங்களும் (குடியேற்ற நாடுகள்) வேண்டுமென்றும் கேட்கிறோம்.

4 ஜெர்மானிய சமூகத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறெவரும், அரசாங்கத்தின் பிரஜையாக இருக்கக் கூடாது. ஜெர்மானிய ரத்தக் கலப்புள்ளவர்களைத் தவிர வேறெவரும், அவர்கள் எப்பிரிவினராயிருந்தாலும், சமூகத்தின் அங்கத்தினர்களாயிருக்கக்கூடாது. ஆதலின் யூதர் எவரும் சமூக அங்கத்தினராயிருக்க முடியாது.

5 அரசாங்கத்தின் பிரஜையாக இல்லாது ஜெர்மனியில் வசிக்கும் யாரும் விருந்தினராகவே கருதப்படுவர். அந்நிய நாட்டுச் சட்டங்களுக்குட்பட்டவராகவே அவர்கள் நடத்தப்படுவர்.

* செயிண்ட் ஜெர்மேன் என்பது பிரான்ஸிலுள்ள ஒரு நகரம். இங்கு, 1919ம் வருஷம் செப்டம்பர் மாதம் நேசக் கட்சியாருக்கும் ஆஸ்திரியாவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் மூலம் ஆஸ்திரியாவின் எல்லைகள் நிர்ணயிக்கப்பெற்றன.

6 தேச அரசாங்கத்திலும் சட்ட சபையிலும் வாக்குக் கொடுக்கும் உரிமையை தேசப் பிரஜைகள் மட்டுமே அநுபவிக்கலாம். ஆதலின், ராஜ்யத்திலோ, நாட்டிலோ, அல்லது சிறிய பிரதேசங்களிலோ உள்ள எல்லா அரசாங்க உத்தியோகங்களும் தேசப் பிரஜைகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

7 தேசப் பிரஜைகளின் ஜீவனோபாயத்தையும் கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் பிரதற் கடமையாக இருக்க வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம். தேச மக்களனைவரையும் போஷிப்பது சாத்தியமில்லாமற் போனால், அந்நியப் பிரஜைகளை (தேசப் பிரஜைகளல்லாதாரை) ஜெர்மன் ராஜ்யத்தினின்று விலக்க வேண்டும்.

8 ஜெர்மானியரல்லாதார், ஜெர்மனிக்குள் வந்து குடிபுவதைத் தடுக்க வேண்டும். 1914ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் இரண்டாந் தேதிக்குப் பிறகு ஜெர்மனிக்குள் பிரவேசித்த ஜெர்மானியரல்லாதார் அனைவரும், ஜெர்மன் ராஜ்யத்தினின்று புறப்பட்டுப் போய் விடவேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

9 உரிமைகள், கடமைகள் என்பவற்றைப் பொறுத்த மட்டில் தேசப் பிரஜைகள் யாவரும் சமமானவர்களே.

10 தனது அறிவினாலேயோ அல்லது தேகத்தினாலேயோ வேலை செய்ய வேண்டியது ஒவ்வொரு பிரஜையினுடைய முதற் கடமையாக இருக்க வேண்டும். தனிப்பட்ட ஒருவருடைய உழைப்பானது, பொது ஜன நன்மைக்கு முரண்பட்டதாயிருக்கக்கூடாது. சமூக சட்டத்திற்குட்பட்டு எல்லாருடைய நன்மைக்கும் ஏற்றதாக அந்த உழைப்பு இருக்க வேண்டும்.

ஆதலின் நாங்கள் கோருவது என்னவென்றால்:—

11 உழைப்பினால் சம்பாதிக்கப் பெறாத வருமானத்தையெல்லாம் ஒழித்தல் வேண்டும்.

12 ஒவ்வொரு யுத்தத்தினாலும் ஏராளமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்படுவதால், யுத்தத்தின் காரணமாக ஒருவன் பணக்காரனாவதென்பது, தேசத்திற்குச் செய்த குற்றமாகக் கருதப்பட வேண்டும். ஆதலின் யுத்தத்தினால் பெற்ற லாபங்களையெல்லாம் கண்டிப்பாகப் பறிமுதல் செய்ய வேண்டும்.

13 தற்போது வரை, கம்பெனிகளாக (டிரஸ்டுகள்) நிர்மாணிக்கப்பட்டுள்ள வியாபாரங்கள் யாவும் தேசீயமயமாக்கப்பட வேண்டும்.

14 மொத்தவியாபாரத்தில் கிடைக்கும் லாபத்தை எல்லாரும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும்.

15 வயோதிக மடைந்தவர்களுக்குச் செய்யப் பெற்றுள்ள ஏற்பாட்டை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டும்.

16 திறமையுள்ள மத்திய வகுப்பினரைச் சிருஷ்டி செய்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். மொத்த வியாபாரம் செய்யும் ஸ்தலங்களை சமூக உடைமையாக உடனே செய்ய வேண்டும். அவற்றைச் சில்லரை வியாபாரி

களுக்குக் குறைந்த கட்டணத்தில் குத்தகைக்கு விட வேண்டும். சாமான்களைச் சில்லரையாக விநியோகிக்கும் எல்லாருக்கும், அதிகமான சலுகை காட்டப்பட வேண்டும்.

17 நமது தேசத் தேவைகளுக்குத் தக்க மாதிரி நிலச் சீர்திருத்தம் செய்யப்பெற வேண்டும். குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்காக உபயோகிக்கப் பெறும் நிலத்தை நஷ்ட ஈடு கொடாமல் பறிமுதல் செய்யலா மென்று சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அடமானங்களின் மீது வட்டி வாங்குவது ஒழிக்கப்பட வேண்டும். பண வருவாயை உத்தேசித்து நிலமானது கைமாறுவதை நிறுத்த வேண்டும்.*

18 பொது நன்மைக்கு விரோதமாயிருப்பவர்களனைவரையும் கண்டிப்பான தண்டனைக் குள்ளாக்க வேண்டும். தேசத்திற்கு விரோதமாகக் குற்றஞ் செய்கிறவர்களை அநியாயமாக வட்டி வாங்கு கிறவர்களை, கொள்ளை லாபம் சம்பாதிப்போரை, அவர்கள் எந்த வகுப்பினரா யிருந்தாலும், எந்த ஜாதி யினராயிருந்தாலும் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்.

19 லௌகிகத் துறைக்குப் பயன் படுகின்ற ரோமன் சட்டத்தை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ஜெர்மனி முழுவதற்கும், பயன்படக் கூடிய சட்ட முறையை ஏற்படுத்த வேண்டும்.

20 திறமையும் உழைப்பும் உள்ள ஜெர்மானியர்கள் உயர்தரக் கல்வி பெற்று முன்னேற்றமடையும் பொருட்டு, நமது தேசீயக் கல்வி முறையைத் திருத்தியமைக்க வேண்டிய அவசியத்தை அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும். எல்லாக் கல்வி ஸ்தாபனங்களினுடைய பாட முறைகளையும், அநுபவ வாழ்க்கைககுப் பயன் படத்தக்க விதமாகத்திருத்தியமைக்க வேண்டும். தேசத்தைப்பற்றிய எண்ணத்தைப் பிள்ளைகளுக்கு அறிவு வளர்ச்சி பெறத் தொடங்குவதிலிருந்து புகுத்துவதே பள்ளிக்கூடத்தின் லட்சியமாக இருக்க வேண்டும். ஏழைப் பெற்றோர்களுடைய புத்திசாலிப் பிள்ளைகளை—அவர்கள் எந்த வகுப்பினரா யிருந்த போதிலும், எந்தத் தொழில் செய்து கொண்டிருந்த போதிலும்—அரசாங்கச்செலவில் படிப்பிக்க வேண்டும்.

21 தாய்மார்களையும் கைக்குழந்தைகளையும் காப்பாற்றுவதன் மூலமும், குழந்தைப் பிரசவத்தைத் தடுப்

---

* 1928ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13ந் தேதி அடோல்ப் ஹிட்லர் பின்வரும் அறிக்கையை வெளியிட்டான் :—

பதினேழாவது திட்டத்திற்கு நமது எதிர்க் கட்சியினர் தவறான வியாக்கியானம் செய்கிறார்களாதலால் அதற்கு விடை கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

தேசிய அபேதவாத ஜெர்மன் தொழிற் கட்சியினர், தனிப்பட்டவர்களுடைய சொத்துரிமையை அங்கீகரிக்கிறார்களாதலால், "நஷ்ட ஈடு இல்லாமல் பறிமுதல் செய்வது" என்ற சொற்றொடரானது சட்டத்திற்கு முரணாக ஆக்ரமித்துக் கொள்ளப்பட்ட நிலத்தையும், தேச நன்மைக்கு ஏற்றவிதத்தில் நிருவகிக்கப் பெறாத நிலத்தையும் பறிமுதல் செய்ய சட்ட ரீதியாக அதிகாரம் வேண்டுமென்பதற்காகவே பொறிக்கப் பட்டதென்பது வெளிப்படை. தேச நன்மையை முன்னிட்டே இங்ஙனம் செய்யப்பட்டிருக்கிறது. முதலாவது, இந்தத் திட்டமானது, நிலத்தை வைத்துக் கொண்டு பண மாறுதல் செய்யும் யூதர் கம்பெனிகளுக்கு விரோதமாகவே ஏற்படுத்தப் பெற்றது.

(ஒப்பம்) அடோல்ப் ஹிட்லர்

ம்யூனிக் 13—4—1928

பதன் மூலமும், சட்ட பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட விளையாட்டுகளைக் கட்டாயமாகச் செய்யச் சொல்லுவதன் மூலமாகவும், இளைஞர்களின் தேகப் பயிற்சிக்காக ஏற்படுத்தப் பெறும் சங்கங்களை ஆதரிப்பதன் மூலமாகவும் தேச மக்களின் தேகாரோக்கியம் விருத்தியடைவதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

22 சம்பளத்திற்காக உழைக்கும் ராணுவத்தை எடுத்து விட்டு தேசிய ராணுவத்தை அமைக்க வேண்டும்.

23 மனமறிந்து கூறப்படும் அரசியல் பொய்களையும் அவற்றைப் பத்திரிகைகளில் பிரசாரம் செய்வதையும் தடுக்க, சட்ட ரீதியான யுத்தம் தொடுக்கப்பெற வேண்டும். ஜெர்மன் தேசியப் பத்திரிகை ஸ்தாபனமொன்றை நிறுவுவதற்குச் சுலபமாக நாங்கள் கீழ்க்கண்டவைகளைக் கோருகிறோம்:—

(அ) ஜெர்மன் பாஷையில் வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் அவர்களின் உதவியாளர்களும் ஜெர்மன் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும்.

(ஆ) ஜெர்மானியரல்லாதார், பத்திரிகைகள் வெளி யிடுவதற்கு முன்னர், அரசாங்கத்தினுடைய விசேஷ உத்திரவு பெறவேண்டும். இவை ஜெர்மன் பாஷையிலேயே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

(இ) ஜெர்மானியரல்லாதார், ஜெர்மன் பத்திரிகைகள் விஷயத்தில் பண உதவி செய்வதையோ வேறுவிதமான செல்வாக்கை உபயோகிப்பதையோ சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டும். இந்தச் சட்டத்திற்கு விரோதமாக நடக்கும் எந்த பத்திரிகையும் நிறுத்தப்பெற்று அதில் சம்பந்தம் பெற்ற ஜெர்மானியரல்லாதாரை நாடு கடத்த வேண்டும்.

தேச நன்மையை நாடாத பத்திரிகைகள் வெளியாவது நிறுத்தப்பட வேண்டும். நமது சமூக வாழ்வைச் சீர்குலைக்கும் வண்ணம் தோன்றும் கலை, இலக்கியம் முதலியவற்றின் போக்கை சட்டரீதியாக அடக்க வேண்டும். மேற்படி தேவைகளுக்கு விரோதமாகப் போராடும் ஸ்தாபனங்களை அடக்கிவிட வேண்டும்.

24 தேசத்திலுள்ள எல்லா மதத்தினருக்கும் சம உரிமை வழங்கப் பெற வேண்டும். ஆனால் இவை, ஜெர்மானிய சமூக ஒழுக்கத்திற்கு விரோதமாக இல்லாமல் இருக்க வேண்டும்.

தேசிய அபேதவாதக் கட்சியானது, ஒழுங்கான கிறிஸ்தவ மதத்தை ஆதரிக்கிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு கொள்கைக்குத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளவில்லை. நமக்குள்ளேயும் வெளியேயும் இருக்கிற யூதர்களின் உலகாயதக் கொள்கையை நமது கட்சி எதிர்க்கிறது. நமது சமூகமானது நிரந்தரமான ஆரோக்கியத்தைப் பெற வேண்டுமானால் சுய நலத்துக்கு முன்னர் பொது நலம் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

25 மேற் கூறப்பெற்ற அனைத்தும் நிறைவேறுவதற்கு அரசாங்கத்தின் பலமான மத்திய ஸ்தாபனம் ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும். ஜெர்மன் ராஜ்யத்தின் மீதும் அதன் ஸ்தாபனங்களின் மீதும் எல்லையற்ற அதிகாரம் செலுத்தும் உரிமை, அந்த அரசியல்

மத்திய பார்லிமெண்டுக்கு இருக்க வேண்டும். ஜெர்மன் ஐக்கிய அரசிய லுக்குட்பட்ட எல்லா நாடுகளிலும் பிரயோகிக்கப்படுகிற சட்ட திட்டங் களை நிறைவேற்ற அரசியல் ஸ்தாப னங்களும் தொழிற் ஸ்தாபனங்களும் ஏற்படுத்தப்பெற வேண்டும்.

விளைவது இன்னது என்று கருதா மல் கட்சித் தலைவர்கள் நேராக முன் னுக்குச் செல்ல உறுதி கொள்கிறார் கள். அவசியமானால், மேலே கூறிய திட்டங்களை நிறைவேற்றி வைக்கும் வகையில் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

முஸோலினியின் அன்றாட வேலை

இத்தலியின் சர்வாதிகாரியான முஸோலினி, தினந்தோறும் கோடை காலத்தில் காலை ஆறு மணிக்கும் குளிர் காலத்தில் ஏழு மணிக்கும் எழுந்திருக்கிறார். உடனே இவருடைய படுக்கை யறைக்கு ஒரு வேலைக்காரன், சில பிஸ்கோத்துகளும் ஒரு கோப்பை காப்பியும் கொண்டு வருகிறான். இந்த அற்ப ஆகாரத்தை அருந்தி விட்டு, இவர் உடனே குதிரை சவாரி செய்யப் புறப்படுகிறார். இவர், தமது குதிரை சவாரி செய்யப் புறப்படுகிறார். இவர், தமது குதிரை சவாரியை அநேகமாக, தமது விசாலமான தோட்டத்திற் குள்ளேயே செய்கிறார். குதிரையைத் தாண்டி யோடச் செய்வதி லும், சர்க்கஸ் குதிரை மாதிரி வட்டமிட்டுச் செல்லச் செய்வதிலும் இவர் கெட்டிக்காரர். குளிர் காலத்தில் தமது நெருங்கிய நண்பர்கள் யாருடனாவது குஸ்தி போடுவார். இவர், கத்தி விளை யாட்டு பழகுவதில் மகா சமர்த்தர். பின்னர் வீட்டுக்கு வந்து, தமது குடும்பத்தினருடன் உட்கார்ந்து, அன்றாடச் செய்திப் பத் திரிகைகளைப் படிப்பார். இவர், ஜெர்மன் பாஷையையும் பிரெஞ்சு பாஷையையும் நன்றாகப் பேசுவார். இங்கிலீஷ் பாஷையையும்சுமா ராகப்பேசுவார். இது தவிர, வீட்டுக்குள்ளேயே, சினிமாபார்ப்பார். மாலை நேரத்தில், தினம் ஒரு மணி நேரமாவது, சிறந்த நூல் ஏதே னும் ஒன்றைப் படிப்பார். அநேகமாக இலக்கிய சம்பந்தமான நூல்களையே படிப்பார்.

தமயனின் கடிதம்-2

"தேவி தாசன்"

மலாய் நாட்டில் மோட்டார் விபத்துக் குள்ளான தம்பி, தனது காயங்கள் தெரிய எடுத்தனுப்பிய புகைப்படத்தைக் கண்டு, மனம் பொருது, தமயன் தம்பிக்கு விடுத்த, கடிதம், (முதற்கடிதம்; ஜோதி சுடர்-2, கதிர்—8,)

களங்க மற்றவுன் வதனத்திலே—இன்றோர்
களங்கம் கண்டு நான் திகைத்தேனடா
உளங் கலிதுளி கொண்டதடா—தேவி
உண்டு நமக்குத் துணையு மென்றே.

வாழ்வுக் கலமும் தம்பியடா—கால
வாரிதி தன்னில் தயங்குதடா
ஆழ்ந்து மூழ்கவும் நோக்குதடா இதற்
காதர வொன்றையுங் காணேனடா. 2

ஆகார் கலியலை துள்ளுதடா! —கலம்
அழித்திட அண்டியே வந்ததடா!
ஆகா! கலத்திற் காபத்தையோ!—என்
றண்டுவார் யாரையுங் காணேனடா!

தேவியை நம்பிக் கலம் விடுப்போம்—அவள்
திருவருள் விட்ட படி விடட்டும்!
நாமினி செய்வது யாதுளது? இந்த
நலிவுக் காலக் கடலினிலே!

சின்னச் சேயன் றிட்டதால்—தேவி
செவிமடுத் தருளமு தேந்தி வந்தாள்!
இன்று நம்மிரு தாலவளின் —செவி
இணையிற் கெட்டா திருந்திடுமோ!

அன்னை தேவியின் னருள் புரிவாள்—ஒரு
அல்லலு மினிநமக் கில்லை யடா
அன்னை ஓம்சிவ சக்தி யென்றே—நெஞ்சில்
அன்புக் கனல்மிக வளர்த்திடுவோம்!

நமது நிருபர்களுடன்

"மெயின் கேம்ப்"

ஆசிரியரவர்களே,

ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் யெழுதிய 'மெயின் கேம்ப்' எனும் புஸ்தகத்தை இந்திய பாஷை 18லும் மொழி பெயர்த்து வருகிறார்களென்றும் கூடியவிரைவில் 4, 6 அணு விலையில் விற்பனைக்கு வருமென்றார், காமன்ஸ் சபையில் இந்தியாவில் தடைசெய்யப்படுமாவென்று கேட்ட கேள்விக்கு தடை செய்யப்படாதென்று பதில் வந்ததாகவும் தெரிகிறது. அப்படியானால் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் ஜெர்மன் நாஜியரின் வேதாந்தமென்று சொல்லப்படும் 'மெயின் கேம்ப்' யெனும் நூலுக்கு மதிப்பிருப்பதைப் பார்த்தால் இந்தியருக்கு நாஜியர் வேதாந்தம் போதிக்க ஏற்பாடு எதற்காக செய்கிறார்கள்? காங்கிரஸ் சர்க்காரால் இந்த ஆட்சேபனை செய்ய முடியாதோ? அல்லது இப்புஸ்தகத்தால் இந்தியாவில் இந்தியர்களெல்லாம் நாஜியரைப்போல் ஆகிவிடுவார்களோ? அதை 'ஜோதி'யில் விளக்குமாறு வேண்டுகிறேன்.

V. பிரகாசம்.

எல்லாம் நண்பருடைய ஊகந்தானே. நண்பர் பயப்படுகிறபடி ஒன்றும் நிகழ்ந்து விடாது. பொறுத்துப் பார்க்கலாமே.

—ஆசிரியர்

உணவு

ஐயா,

நம் தமிழ்நாட்டில் பெரும்பான்மையும் புழுங்கலரிசியைச் சாப்பிடுகிறார்களே? பற்றாதென்று பர்மாவிலிருந்தும் வரவழைத்துத் தின்கிறார்களே? இந்தப் புழுங்கலரிசியில் சத்திருக்கிறதென்று நினைத்துத்தான் சாப்பிடுகிறார்களா?

நம் தமிழ்நாட்டில் உடல் பலம், தைரியம் இல்லாதிருப்பதற்கு மேற்கண்ட புழுங்கலரிசியும் ஒரு முக்கிய காரணமாகுமா?

நம் நாட்டில் அரிசிச்சாதம் சாப்பிடுவதை ஒரு மதிப்பாக நினைத்து, அதில் சத்திருக்கிறதோ இல்லையோ என்பதைப் பாராமல் வாங்கி வயிற்றைப் பூர்த்தி செய்து, பலந்தரக்கூடியதும், இரண்டொரு மழையில் விளையக்கூடியதும், நிரம்ப உழைப்பில்லாமல் பயிர் செய்யக்கூடியதுமான, காட்டு தானியங்களான கம்பு, கேழ்வரகு, சோளம் சாமை, வரகு முதலியவைகளை கைவிட்டுவிட்டார்களே? இது நம் நாட்டவர்க்குத் தீமை பயக்காதா?

நம் நாட்டில் மழையோ கொஞ்சம். அதுவும் வருஷம் ஒரு மழை. ஆகையால் கொஞ்சம் மழையில் விளையக்கூடிய மேற்கண்ட தானியாதிகளை உற்பத்தி செய்து சாப்பிடுவதால், அந்நியநாட்டு அழுகிப் புழுங்கிய புழுங்கலரிசி இறக்குமதி குறையுமா

இல்லையா? மக்களும் வயிறுரச் சாப்பிடலாமா இல்லையா? உணவுப் பஞ்சமும் குறையாதா?

நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மக்களின் உடல்பலம், தைரியம், நாட்டுக்கல்வி ஆகிய மூன்றிலும் தேர்ச்சிபெற்றிருப்பதைப்பொறுத்தே ஏற்படுமா? அல்லது மேற்கண்ட மூன்றல்லாத வேறாக இருக்க முடியுமா?

சொக்கலிங்கம் பிள்ளை

நண்பருடைய கேள்விகளுக்கெல்லாம் ஆம், ஆம் என்று பதில் சொல்கிறோம். நம் தமிழ் நாட்டில் உடல்பலம், தைரியம் இல்லையென்று நண்பர் கருதுவதை நாம் அங்கீகரிக்க முடியாது. இவைகளை வெளிப்படுத்துவதற்குப் போதிய சந்தர்ப்பமில்லையென்று தான் கூறுவோம். பொதுவாக, எந்தவிதமான சீர்திருத்தமுமே தேசீய அரசாங்கத்தில்தான் நடைபெறும்.

—*ஆசிரியர்*

காங்கிரஸ் என்றால் என்ன?

ஐயா,

இங்குள்ள கேள்விகளுக்கு, 'ஜோதி' நேயர்கள் சந்தேக விளக்கப் பகுதியிலாவது அல்லது தனிக் கட்டுரை வாயிலாகவாவது, முழுவிளக்கந் தரக் கோருகிறேன்:—

1. *"காங்கிரஸ்" எனும் மொழி எந் நாட்டினது?*

2. *வெளிநாடுகளும், தங்கள் ஸ்தாபனங்களுக்கு, "காங்கிரஸ்" என்ற பதத்தை உபயோகிப்பதேதனால்?*

3. *இந்தியா தேச விடுதலை ஸ்தாபனத்துக்கு, "காங்கிரஸ்" என்ற வார்த்தையை உபயோகிப்பதேன்?*

4. *"காங்கிரஸ்" என்ற சொல்லின் பொது அர்த்தமியாது?*

அன்பு சேவு பழனி.

காங்கிரஸ் என்னும் ஆங்கிலச் சொல்லானது, காங்கிரஸ்ஸேஸ், (Congressus) என்ற லத்தீன்மொழியிலிருந்து பிறந்தது. இதற்குக் கூட்டம் என்று பொருள். சர்வதேசப் பிரச்னைகளைப் பற்றி ஆலோசிப்பதற்கு அரசர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகள் கூடுகிற ஒரு கூட்டத்திற்கே இது முதலில் பெயராயிருந்தது. இப்பொழுது. எல்லாத் தேசங்களிலும் கூடுகிற ஒரு மகாநாட்டுக்கு காங்கிரஸ் என்று அழைக்கிறார்கள்.

—*ஆசிரியர்*

உலகத்தின் நிறை

ஐயா,

மின்னொளி பிரசுரத்தில் பதிப்பிக்கப்பெற்ற 'உலகக் கண்ணாடி' யெனும் புஸ்தகத்தில் 7-ம் பக்கத்தில் நாம் வசிக்கும் பூமி மொத்தநிறை 6,000, 000,000,000,000,000,000 டன் என்று பூமி நூலாராய்ச்சிக்காரர்கள் கணக்குப் போட்டிருக்கிறார்களென்று எழுதியிருக்கிறது. அதாவது முதலில் (6) ஆறு போட்டு அப்பால் இருபத்தி ஒன்று சைபர்கள் போட்டிருப்பதால் அதை என் சிற்றறிவுக்கெட்டியவாறு பார்த்தும் ஒன்றும் புலன்படவில்லை. ஆகையால் அதை நமது 'ஜோதி'யில் தமிழில் எவ்வளவு என்று எழுத்து

மூலம் விளக்கிக் காட்டுவீர்களென்று நம்புகிறேன்.

கே. என். ராஜன்.

அறுநூறு லட்சம் கோடி என்று சொல்லலாம்.

—ஆசிரியர்.

பிரெஞ்சு நாடு

ஐயா,

பிரெஞ்சு ஆதிபத்தியத்திற்கு இந்தியாவில் எங்கெங்கு ஊர்களிருக்கின்றன? அவ்வூர்களின் பெயரென்ன?

எஸ். ராமன்.

புதுச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர் ஆகிய மூன்று ஊர்கள்.

—ஆசிரியர்.

தாயன்பு

ஐயா,

பெற்ற தாய், தன் குழந்தையை ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு கொன்று போடுவாளேயானால், அக்குழந்தையை அன்பில்லாமல் வெறுப்புடன் கொல்வாளா? அல்லது வேறு எவ்வித மனப்பான்மையுடன்?

'சந்தேகப் பேர்வழி'

தாய்க்குக் குழந்தையின் மீது அன்பில்லாமல் இருக்க முடியாது. ஆனால் சுயநலத்தை முன்னிட்டு மேற்படி கொலையைச் செய்திருக்கலாம். அந்தச் சுயநலம், புல் கிளைகளாகப் பரிணமித்திருக்குமல்லவா? ஆனால் ஒரு விஷயம். ஒரு தாய், தன் சிசுவைக் கொலை செய்தாள் என்று சொல்கிறபோதே, அவள், உண்மையிலேயே தாய் தானா என்ற சந்தேகம் யாருக்குமே உண்டாகிறது. அவள் பெண்ணுருவங் கொண்ட பேயாயிருக்கலாகாதா? ஆகையால் இந்த மாதிரியான சந்தேகங்களைக் கிளப்பிக்கொண்டு, அதற்காக மணிக்கணக்கில் வாதஞ் செய்து நேரத்தை வீணாக்காமலிருப்பதே நல்லதென்பது நமது கருத்து.

—ஆசிரியர்

தபால் முத்திரைகள்

ஐயா,

தபால் முத்திரைகள் சேர்த்தல் என்று முன்னொரு முறை 'ஜோதி'யில் எழுதிய அன்பரை தபால் முத்திரை எப்படியுள்ளதுகளைச் சேர்க்க வேண்டும், உபயோகிக்காத முத்திரைகளேயும் ரெவினியூ ஸ்டாம்புகளையும் கையெழுத்துப் போட்டவைகளையும் ரப்பர் ஸ்டாம்பு குத்தினவைகளையும் சேர்த்து வைக்கலாமா? அபூர்வமான ஸ்டாம்புகளாயிருந்து கொஞ்சம் கோரமாக இருந்தாலும் சேர்க்கலாமா?

இது சம்பந்தமாக ரெங்கோனில் ஏதாவது சங்கங்கள், பத்திரிக்கைகள் நடக்கின்றனவா என்பதையும் இன்னொருமுறை விளக்கமாக எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிவ. முத்தையா.

இது சம்பந்தமான விவரங்களை யாரேனும் எழுதியனுப்பினால் அவற்றை மகிழ்ச்சியுடன் வெளியிடச்சித்தமாயிருக்கிறோம்.

—ஆசிரியர்

காங்கிரஸ்

அன்புமிக்க ஆசிரியரவர்களே;

நம் இந்தியாவில் காங்கிரஸ் மகா நாடு கூடிய இடங்களும், தலைவர்கள் பெயரும், 1938ஹு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தமிழ்நாட்டு மெம்பர்கள் பெயரும், 1939ஹு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் பெயரும், மெம்பர்களுடைய ஜில்லாக்கள் பெயரும், விபரமாக அடுத்த 'ஜோதி' யில் விளக்கிக்காட்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

லெ. நடராசன்

நண்பருடைய ஆவலைத் தணிக்க வேண்டுமானால் ஒரு சிறு புத்தகம் வெளியிடவேண்டியதுதான். அன்டார், தயை செய்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்திற்கு எழுதினால், இந்த விவரங்கள் பூராவும் கிடைக்கலாம்.

—*ஆசிரியர்.*

பர்மா காங்கிரஸ்

ஐயா,

1939ஹு த்திய பர்மா காங்கிரஸ் கமிட்டியின் உத்தியோகஸ்தர்களின் பெயரும் ஷை கமிட்டியின் நிர்வாக சபை அங்கத்தினர்களின் பெயரும் 'ஜோதி'யின் வாயிலாக அறிவிக்க வேண்டுகிறேன்.

மு. கணேசன்.

தலைவர்: திரு. மோஹன்லால் காளிதாஸ்.

உபதலைவர்கள்: திரு: ரதிலால் தேசாய், திரு: ஊலாமின்.

பொதுக் காரியதரிசி: திரு. ஜனார்த் தனபிரசாத் சுக்லா.

கூட்டுக்காரியதரிசி: திரு. ஜே. என். பிஸ்வாஸ்.

பிரசாரக் காரியதரிசி: திரு. ஊ பா கெய்ங்.

நிர்மாணகாரியதரிசி: திரு. எச். சிங்க்.

இவர்கள் தவிர நிருவாக சபை அங்கத்தினர் பதின் மூன்று பேர்.

—*ஆசிரியர்*

ஒரு முறை, நமது நாவைப் பொய் சொல்லப் பழக்கப்படுத்தி விட்டோமானால், பிறகு அதனை—அந்த நாவை நல்ல வழியில் திருப்பவே முடியாது.

மாண்டேன.

துலாக்கோல்



ரஜனி

பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர் வங்காளியில் இயற்றியது; மொழி பெயர்த்தவர்: எஸ். குருஸ்வாமி, பி. ஏ.; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 164 பக்கங்கள்; விலை: பன்னிரண்டு அணா.

ஸ்ரீ பங்கிம் சந்திரர், ரஜனியை ஏன் ஒரு குருட்டுப் பெண்ணாகச் சிருஷ்டி செய்தாரென்பது நமக்குத் தெரியவில்லை. கண் பார்வையுள்ள ஒரு பெண் என்னென்ன செய்கைகளைச் செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் இந்த ரஜனியும் செய்திருக்கிறாள். ஹீராலால், இவளை ஒரு நடுத்திட்டில் விட்டுவிட்டுச் சென்ற போது, இவள் இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டு மிகுந்த வேகத்துடன் தடியை வீசி ஹீராலாலைத் தாக்கியிருக்கிறாள். ஒரு குருட்டுப் பெண் இவ்வளவு சாகசமான செய்கைகளைச் செய்ய முடியுமாவென்று வாசகர்களுக்குச் சந்தேகம் தோன்றுவது இயற்கைதானே. நூலின் இரண்டாவது பாகத்திலிருந்து கதை நிரம்ப சிக்கலாக இருக்கிறது. 'என்னுடைய துயரக் கதையை எழுத எனக்கு வெகு பிரியம்' என்று ஆரம்பிக்கும் இந்தச் சுய சரிதை யாருடையது என்பதை வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. ஆனால், ஆசிரியர் பங்கிம் சந்திரர், தமது கற்பனைத் திறனைச் சில சில இடங்களில் காட்டியிருக்கிறார் :—

> இருளிலும் பூக்கள் மலர்கின்றனவல்லவா? மேகங்களினால் சூழப்பட்ட பின்பும் சந்திரன், ஆகாயத்தில் பிரகாசிக்கிறான். ஜனசஞ்சாரமேயில்லாத காட்டில் கூட குயில் கூவுகிறது. சமுத்திரத்தின் அடியில் முத்துக்கள் பிரகாசிக்கின்றன. குருடியின் உள்ளத்தில் கூட காதல் தோன்றுகிறது!

ஸ்ரீ குருஸ்வாமியினுடைய மொழிபெயர்ப்பு மிக நன்றாயிருக்கிறது.

ஸேவா ஸதனம்

ஹிந்தி மூல ஆசிரியர்: திரு. பிரேம் சந்த்; மொழி பெயர்த்தவர்; ஸ்ரீமதி அம்புஜம்மாள்; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 262 பக்கங்கள்: விலை ஒன்றரை ரூபாய்.

ஜன சமூகத்தின் அன்றாட வாழ்க்கையை அப்படியே சித்திரித்துக் காட்டுவதில் ஸ்ரீ ப்ரேம் சந்த் மகா நிபுணர். அதனோடுமட்டும் இவர் நின்றுவிடுவதில்லை. சமூகத்திலே காணப்படும்

குறைகளுக்குப் பரிகாரந் தேடிக் கொடுப்பதிலும், அதன் மூலமாக தேசிய அபிவிருத்தியைத் தேடிக் கொடுப்பதிலும் இவர் பெரிய சமர்த்தர். இவருடைய நூல்களில் பெரும்பாலன, இந்த மாதிரியான அம்சங்களையே கொண்டிருக்கின்றன. இப்பொழுது நமது விமரிசனத்திற்கு வந்திருக்கும் 'ஸேவா ஸதனம்' என்ற நவீனத்திலும் இந்தச் சீர்திருத்த அம்சங்கள் பல நிறைந்திருக்கின்றன. ஒரு சேட்டினிடத்தில் மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் சாதாரண ஒரு குமாஸ்தாவாக இருந்த கிருஷ்ண சர்மாவின் தர்ம பத்தினியாக வாழ்க்கையைத் தொடங்கிய சுமதி, பின்னர் காசி நகரத்தின் டால் மண்டி வீதியின் நட்சத்திரமாகப் பிரகாசித்து, கடைசியில் ஸேவா ஸதனத்தின் தலைவியாகிற வரலாற்றை, இன்னும் பல பின்னல்களுடன் ஆசிரியர் இந்த நவீனத்தில் கூறுகிறார். சந்தர்ப்ப பேதத்தினாலோ, அறியாமை காரணமாகவோ, அல்லது சகவாச தோஷத்தினாலோ ஒருவன் அல்லது ஒருத்தி ஒரு குற்றத்தைச் செய்து விட்டால், அதற்குப் பிறகு அவன் அல்லது அவள் மனமிரங்கிப் பச்சாதபப்பட்ட போதிலும், அவன் அல்லது அவளுக்கு மன்னிப்பே கிடையாதா? அந்தப் பாபத்திலே அவன் அல்லது அவள் மூழ்கிவிட வேண்டியது தானா? இந்த மாதிரியான கேள்விக்கு இந்த 'ஸேவா ஸதனம்' நல்ல பதில் அளிக்கிறது.

ஸ்ரீ பிரேம் சந்த், எப்பொழுதுமே அநாவசியமான வர்ணனைகளைக் கையாண்டு, கதைப் போக்கைத் தடை செய்வதில்லை. இந்த முறையினால், வாசகர்கள், கதையைச் சுலபமாகப் படிப்பதற்கும், அதனை அநுபவிப்பதற்கும் முடிகிறது.

ஸ்ரீமதி அம்புஜம்மாளின் மொழி பெயர்ப்பு மிக இனிமையாக இருக்கிறது. ஹிந்தி பாஷையில் இந்த ஸேவா ஸதனத்தைப்படித்த நாம், அதன் தமிழ் மொழி பெயர்ப்பைப் படித்த போது, ஹிந்தி மூலத்தை மறந்தே போனோம் என்று சொன்னால், அஃதொன்றே ஸ்ரீமதியாருடைய மொழி பெயர்ப்புக்குச் சிறப்பளித்ததாகாதா?

லோகமான்ய பால கங்காதர திலகர்

ஆசிரியர்; திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 108 பக்கங்கள்; விலை: அணு எட்டு; பர்மாவில் கிடைக்குமிடம்: வேதம் கம்பெனி, மொகல் வீதி, இரங்கூன்

சென்னை அரசாங்க விளம்பர மந்திரி ஸ்ரீ எஸ். ராமநாதன் இந்த நூலுக்கு ஒரு சிறப்புரை எழுதியிருக்கிறார். ஆனால் அதில் எவ்வித சிறப்பும் காணோம். ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணிய ஐயருடைய நூல்களுக்கு எப்பொழுதுமே ஒரு தனிச்சிறப்பு உண்டு. லோகமான்ய பால கங்காதர திலகருடைய சரித்திரம் இந்த நூலில் சுருக்கமாக ஆனால் அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. திலகர் பெருமானுடைய ஜீவிய சரித்திரம் விரிவான முறையில்—அவர் செய்த அரிய தொண்டுகளை எதிர் கால சந்ததியார் பாராட்டிப் பின் பற்றக் கூடிய வகையில்—தமிழில் வெளியாகவில்லையென்ற நமது குறை, இந்த நூலினால் பூர்த்தியடையவில்லையென்பதை ஸ்பஷ்டமாகத் தெரிவித்துவிட விரும்புகிறோம். ஆனால் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயருடைய லலிதமான நடை

யும், உணர்ச்சி நிரம்பிய சொற்களும் இந்நூலுக்கு ஒரு பெருமையை யளிக்கின்றன.

அற்புத உலகம்

ஆசிரியர்: திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் பி. ஏ. பி. எல்; வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை; டபிள்கிரவுன் அளவு 1x16; 176 பக்கங்கள்; விலை, ஒரு ரூபாய்

இந்த நூலின் மூலம், ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயர் தமிழ் மொழிக்குமட்டுமல்ல, கலை வளர்ச்சிக்கே ஒரு பெரிய தொண்டு செய்திருக்கிறார். இதனைப் பள்ளிக்கூடத்துப் பாட புத்தகமாக வைப்பதோடு, சிறுவர், சிறுமியர்களும்,ஏன் பெரியவர்கள்கூடபடித்தால் பயனடைவார்கள். இந்தச் சிறிய நூலில் பூகோளம், விஞ்ஞானம், விவசாயம் முதலிய பலபட்ட விஷயங்களையும் எப்படிச் சேர்க்க முடிந்தது என்று உண்மையிலேயே நாம் ஆச்சரியப்படுகிறோம். தவிர இந்தமாதிரியான நூல்களை எழுதுகிறபோது, எல்லாருக்கும் புரிகிறமாதிரியாகவும் படிப்பவர்களுக்கு ருசி ஏற்படுகிறமாதிரியாகவும் எழுதுவது மகாகடினம். இதை ஸ்ரீ அப்புஸ்வாமி வெற்றியுடன் செய்து முடித்திருக்கிறார். இதே போன்று, இன்னும் பல நூல்களை இவர் வெளியிட வேண்டுமென்பதே நமது கோரிக்கை.

தமிழர் யார்?

ஆசிரியர்; திரு. நாரண துரைக்கண்ணன்; வெளியிட்டோர்: சக்தி பிரசுராலயம், ராபர்ட்ஸன் பேட்டை, மயிலாப்பூர், சென்னை; பூல்ஸ்காப் அளவு 1x16; 112 பக்கங்கள்; விலை நான்கு அணா.

'நந்தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் தமிழ்நாட்டைத் தாய் நாடாகவும் கொள்ள விரும்புவோர் யாவராயினும்-அவர்கள் ஐரோப்பியராயினும்—அவர்களையெல்லாம் நாம் தமிழர்களென்றே-நம் சகோதரர்களென்றே ஏற்றுக் கொள்வோம்' என்பது தான் இந்த நூலின் முடிவு. இதை யார் தான் அங்கீகரிக்க முடியாது? ஆனால் துரதிரஷ்டவசமாக, தமிழ் நாட்டில் வகுப்புப் பூசல்களை அநாவசியமாக வளர விட்டுக் கொண்டிருக்கின்றனர் ஒரு சிலர். இது வளர்ச்சியடையாமலிருக்க இந்த நூல் துணை செய்யுமானால் அஃது இந்த நூலாசிரியருக்குப் பெரிதும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். நமக்குக் கூட.

மரபுத்தொடரகர வரிசை

சென்னைத் தமிழ்ப்பாதுகாப்புக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றது; டபிள் கிரவுன் அளவு 1x16; 32 பக்கங்கள்; விலை 3 அணா.

புஸ்தகத்தின் பெயரைப் பார்த்தால் கொஞ்சம் பயமாயிருக்கிறது. ஆனால் மிகவும் உபயோகமுள்ள புஸ்தகம். கட்டுரைகள் எழுதுவோருக்கும் பிரசங்கம் புரிவோருக்கும் மிகவும் பயன்படத்தக்கது.

வரப்பெற்றோம்

அமிர்தமும் விசமும்:

கோகுலகவி ந. மு. ரெ. ராமசந்திரன்இயற்றிய செய்யுள் புத்தகம்.விலை: மூன்று அணா; கிடைக்குமிடம்: 128, பினாங்கு ஸ்ட்ரீட், பினாங்கு.

புலவரை அரசராக்கிய சோழன்

—வ. மு. இ.

இக்காலம் உயர்ந்த உத்தியோகம் பெற வேண்டுமானால் ஆங்கிலம் பாங்கு பெற உணர்ந்திருக்க வேண்டும். தமிழுக்கு மதிப்பு மிகவும் குறைவுதான். ஆனால், முன்னாளில் இந்தியாவிலுள்ள தெற்குப் பகுதி, தமிழ் நாடு என்றே அழைக்கப்பட்டது. இத்தமிழ் நாட்டைச் சேர சோழ பாண்டியர் என்ற பேருடைய முடியுடை மூவரசர் ஆண்டார்கள். சோழ நாடு இருபத்து நான்கு காத தூரமுள்ளது என்பர். இன்றும் சோழ நாடு செழிப்புள்ளதாகவே இருக்கின்றது. இந்நாட்டைச் சாளுக்கிய வமிசத்துத் தோன்றிய முதற் குலோத்துங்கன் ஆண்டு வந்தான். கி. பி. 1118ம் வருஷ முதல் 1133ம் வருஷம் வரையும் இவனுடைய குமாரனான விக்கிரம சோழன் செங்கோலோச்சி வந்தான். விக்கிரம சோழன் தமிழபிமான முடையவன்; புலவரை ஆதரிக்கும் புண்ணியவான்; பிற அரசர்களும் மதிக்கும் கண்ணியவான். இவன் காலத்தில் இச்சோழ நாட்டின் கணுள்ள மலரி என்னும் ஊரில், செங்குந்தர் மரபில் ஒரு சற்புத்திரர் பிறந்தார். அப்புத்திரருக்கு சிற்சபா நாதரின் திரு நாமமாகிய கூத்தர் என்பதையே பேராகப் பெரியோர் இட்டு வாழ்த்தினர். பிற்காலத்திற் பெருங்கூத்தாடும் பெற்றியுடையராகவே கூத்தர் காணப்பட்டார். இவர், இலக்கணம், இலக்கியம் என்ற இரு பாகுபாட்டுத் தமிழ் நூல்களைச் செம்மையாகக் கற்றவர். கூத்தருக்குச் சமய நூற் பயிற்சியும், தேவார திருவாசகாதி அருள் நூற் பற்றும் மிக மிக உண்டாயின.

கூத்தர் சிறந்த புலவராகிவர உயர்ந்த உதவி புரிந்தவர் பிரபுவாகிய சங்கர முதலியார் என்பவராவர். இச் சங்கர முதலியாரின் தவப்புதல்வர் தான் கம்பர் புகழ்ந்த சடையப்பவள்ளல். ஒப்புயர்வற்ற குணக்குன்றாக விளங்கிய வள்ளல்களுடைய பெருமையைப் புலவ மணிகளன்றிப் புகழ்பவர்கள் வேறு யாவர்?

கூத்தர் உலக நடையை வென்ற வருணனைப் பாடல்களைப் பாடி வருவார். அவர் தம் பாடல்கள் அறிஞர்களுக்கு இன்ப மூட்டின. அதனால், அப்பெரியோர் கூத்தருக்குக் "கௌடப் புலவன்" என்னும் பட்டப் பேர் சூட்டினர். கூத்தருடைய பாக்களின் நயம் நோக்கி அரசனும் மகிழ்ந்தான். இரண்டு கண்ணிகளை ஒட்டிப் பாடினமையால், "ஒட்டக் கூத்தர்" என்று விக்கிரம சோழன் சிறப்பளித்துப் பேருமிட்டான். அப்பெயர் இன்று வரையும் நின்று நிலவுகின்றது.

விக்கிரம சோழன், செவிக்கும் சிந்தைக்கும் இனிய செஞ்சொற் கவி

களைக் கூத்தர் வாயாற் கேட்டு மகிழ் வான். பரிசிலினாலும் அவர் மனங் குளிர மன்னன் செய்து வந்தான். அண்ணாந்திருந்து பாட்டுக் கேட்ட பின் கவிஞரைத் தொண்ணூந்து போகச் செய்யாத உத்தமக் கொடை அந் நாள் அரசரிடம் இருந்தது.

கூத்தருக்கு இருப்பிடமன்றி கம்பளம் குண்டலம் முதலியனவும் சோழன் வழங்கினான். மன்னனின் இன் குணம் நோக்கி, கூத்தர், தனது சிறுமையையும், அன்னவன் மாண்பையும் விளக்கி ஒரு பாடல் இயற்றினார். பாடலின் பெருமையும் இலக்கண அமைதியும் அறியாத சிலர் கூறும் பாடல் போலன்றி, உயர்ந்த கருத்தமைதிகள் தொன்னாட் புலவர் கவிகளில் காணப்படும்.

இங்ஙனம் பல வரிசையுடன் நன் மதிப்பும் பெற்றுக் கூத்தர் சோணாட்டில் வாழுங் காலத்தில், கலை மகளின் கருணையும் அவருக்கு மிகவும் உண்டாயிற்று. அரும்பெரும் பாடல்களானுய அரும்பைத் தொள்ளாயிரம் என்ற நூலை அவர் பாடி அரங்கேற்றினார். சோழன் மன மகிழ்ந்து கூத்தருக்குப் பல வகை விருதுகள் அளித்தான். அப்போது மன முருகி ஒரு செய்யுள் கூறினார். அதில் விருது பெறுந்தகுதி தமக்கு இன்று என்றும், திரு ஞான சம்பந்தமூர்த்தி நாயனார், முருகப் பெருமான், அகத்தியர், பிரமன், சிவன் முதலிய செந்தமிழ்த் தெளி பொருளாளர்களே விருது பெறுந் தகுதி வாய்ந்தவர்கள் என்றும் இனிது விளங்குமாறு காட்டப்பட்டன.

இவ்வாறு கூத்தர் அமிழ்தகு தமிழ்ப் பாடல்கள் பலப்பல தந்து அங்கே தங்கியிருந்தார். விக்கிரம சோழன் தனது அருமந்த புத்திரனாகிய குமார குலோத்துங்கனுக்குக் கூத்தரைக் கொண்டு செந்தமிழ் நூல்களைக் கற்பிக்கச் செய்து வந்தான். அவனும் கல்வி யறிவால் முழு மதியன்ன பெரு மதி பெற்றான். கவி பாடும் வன்மையும் குமார குலோத்துங்கனுக்கு உண்டாயிற்று.

கூத்த முதலியாரை, அன்னை தந்தை குரு என்ற மூன்று குரவரும் ஒருங்கே சேர்ந்த உருவத்தினராக அவன் மதித்திருந்தான். அதனால், ஒட்டக்கூத்தராகிய குருவை நிழல் போலப் பிரியாது இருந்து பன்னூலாய்ந்து அவன் பேரறிஞர்களால் பாராட்டற்குரியனானான். இக்காலத்தில் விக்கிரம சோழன் விண்ணவர்க்கு விருந்தாளியாய் விட்டான்.

குமார குலோத்துங்கனுக்குப் பட்டாபிஷேகம் சிருடன் நடந்தது. அரசர், புலவர், நகர மக்கள் முதலிய பல திறத்தாருங் குழுமி, மகுடாபிஷேக வைபவங் கண்டு களித்தனர். அந்தணர் மஞ்சள் சேர்ந்த அட்சதை தூவி அரசனை ஆசீர்வதித்தனர். புலவர்கள் பாமாலை புனைந்தனர். ஒட்டக் கூத்தரும் அவன் தனது மாணாக்கன் என்று கருதாது, அரசன் என்னும் முறையில் இரண்டு வரிகள் பாடினார். அக் கவி நிறைவுறுமுன், அவன் ஆசிரியர் தன்னைத் துதித்தல் தகாது என்று கருதி உடனே "நித்தம் நவம்-பாடுங் கவிப் பெருமான் ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச் — சூடுங் குலோத்துங்க சோழன் என்றே என்னைச் சொல்லுவரே" என்று அப்பாடலை நிறைவு செய்தான். அது கண்டு யாவரும் மன்னன் மதித் திறம் புகழ்ந்தனர். ஆசிரிய மாணவ வேறுபாடில்லாத இக்காலத்திற்கு இது புளிப்பாகஇருக்

கும். இது நிற்க, இந்நாள் முதல் கூத்தருக்குப் பெருமதிப்பும் வளர்ந்தது. அரசனுக்கு இப்புலவமணி கண்ணென விளங்கினர். குலோத்துங்கனுக்கு மணம் பேசக்கூத்தரே பாண்டி நாடு சென்றார். பாண்டி நாட்டில் புகழேந்திப் புலவர் வரகுண பாண்டியன் மகளைக் கல்விச் செல்வியாகக் கவினவைத்திருந்தார். பாண்டிமாதேவிக்கும் குலோத்துங்கனுக்கும் விவாகம் நிச்சயமாயிற்று. நாளோலை எங்கும் அனுப்பப்பட்டது. புலவரைப் புரவலராக்கிச் சோழன் பாண்டி நாடு அடைந்தான். அவ்வரசனுடன், குடிகள், புரோகிதர், கணிகர், மருத்துவர், தூதுவர் என்ற ஐம்பெருங்குழுவும், மந்திரி, கருமாதிகாரி, சுற்றம், கடை காப்போர்,நகர மக்கள்,படைத்தலைவர், இவுளி வீரர், யானை மறவர் என்ற எண்பேராயமும் சென்றன. கவியரசர் என்ற பேருடனிருந்த ஒட்டக் கூத்தர் குலோத்துங்க சோழனல் புவியரசர் என்ற பேருமடைந்தார். சோழ நாட்டு மக்கள் கூத்தரை அதிகமாகப் பாராட்டினர். கூத்தருக்கு ஏழைகளிடம் இரக்கமுண்டு. தம்மை மதியாத அற்பக் கல்வியாளரிடம் வன்கண்மையாய் அவர் நடப்பதுமுண்டு. அரசர் கொடைக்கும் கூத்தர் தலையசைப்பு வேண்டியதாயிற்று. இன்றும் சில சமஸ்தானங்களில் ஈவது விலக்கும் விவேகிகள் இருப்பது வெளிப்படை.

ஒட்டக் கூத்தருக்குக் கல்விப் பொருள் ஒருவருடைய பங்கன்று என்று உணர்த்தியவர் புகழேந்திப் புலவரே. புகழேந்தியார் காராக் கிருகத்திலிருந்து பலரைப் பாவலராக்கிவிட்டார். புலவரை அவமானஞ் செய்தல் கூடாதென்று நெற்குன்றவாண முதலியார் கூத்தருக்கு அறிவுறுத்தினர். அதில் கூத்தர் கொடையும், கவித்துவமும் காணப்படும்.

பூவில் விண்ணோர்—காக்கண்ட செங்கைக் கவிச்சக்ரவர்த்தி!
நின்கட்டுரையாம் பாக்கண் டொளிப்பர்களோ கவிபாடிய பாவலரே

என்னும், பகுதி சிந்திக் கத்தக்கதாம்.

குமார குலோத்துங்கன் பாண்டிய மாதேவியான பட்ட மகிஷியுடன் சோழ நாடு அடைந்து அரசுரிமையைக் கூத்தரிடமிருந்து பெற்று இன்புடன் வாழ்ந்து வந்தான். கூத்தருக்கும் மனச்சாந்தி உண்டாயிற்று. புகழேந்தியாரும் கூத்தரும் நெருங்கிய நட்பினராயினர்.நாட்டு மக்களும் நன் மகிழ்வடைந்தனர்.

பொதுவாக ஏழைத்தமிழன் என்று எண்ணாது புலவரை ஆதரித்த அருங்குணம் அந்நாளரசரிடமிருந்தமை தெளிவாகும். தமிழ் உயர்ந்த மொழி என்றும், அதனைப் பயின்றார் பெரியர் என்றும் யாவரும் கருதினர். குமார குலோத்துங்கனைப் போலத் தமிழ் வாணர்களை இக்காலம் அரசராக்க வேண்டாம். அதற்கு இடமுமில்லை. தமிழை வளர்ப்பதும், தமிழ் கற்றாரை மதிப்பதும் தமிழ் நாட்டவர் கடமையாகும். ஒட்டக் கூத்தர் இராமாயண உத்தரகாண்டம் பாடினர். அந்நூலையும் படிப்பவர் அருமையுணரலாம். "தெருவெல்லாந் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"



1939

மார்ச்சு

29 ஒரிஸா சட்ட சபையில் இன்று ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வரப்பட்டு அது நிறைவேறியது.

ஜிப்ரால்டர் துறை முகத்தைப் பலப் படுத்த அநேக முயற்சிகள் செய்யப்படு கின்றன.

30 டெல்லி சர்வ கலாசாலையின் பட்ட மளிப்பு விழா இன்று நடைபெற்றது.

31 ஜெர்மனியால் போலந்து தாக்கப் படுமானால் அதனைக் காப்பாற்ற பிரிட்டனும் பிரான்சும் ஒற்றுமைப் பட்டிருக்கின்றன வென்று சேம்பர்லேன் இன்று காமன்ஸ் சபையில் கூறினார்.

இந்தோ-சைனாவுக்குச் சமீபத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஸ்ப்ராட்லி தீவுகளைப் ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டனர்.

ஏப்ரல்

1 வங்காளச் சட்ட சபையின் தலைவரா யிருந்த சந்தோஷ் மகாராஜா இன்று காலமாகி விட்டார்.

'எங்களுக்குப் போதுமான இடம் தேவை. அந்த இடத்தை யாராவது கொடுக்க வேண்டும்' என்று இன்று முஸோலினி ஒரு பிரசங்கத்தில் கூறினான்.

டான்ஸிக் பிரதேசத்தில் யாதேனும் மாற்றம் உண்டாகும்படி ஜெர்மனி நடந்து கொள்ளுமானால் அதைத்தான் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்று போலந்து அரசாங்கம் இன்று ஜெர்மனிக்கு எச்சரிக்கை செய்தது.

தளபதி பிராங்கோவுக்கு, அவருடைய வெற்றியைப் பாராட்டி போப்பரசர் ஓர் ஆசிச் செய்தியை அனுப்பியிருக்கிறார்.

ஜெக்கோ ஸ்லோவேகியாவை ஜெர்மனியுடன் சேர்த்துக்கொண்டது நியாய மென்று இன்று ஹிட்லர் ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

2 ஸ்பெயின் யுத்தம் முடிந்து விட்டதென்றும், பிராங்கோ கட்சிக்கு விரோதமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்த துருப்புகள் நிராயுதபாணிகளாக்கப்பட்டன வென்றும் பிராங்கோ அறிக்கை கூறுகிறது.

இன்று போலந்தின் அந்நிய நாட்டு மந்திரியான தளபதி பெக், லண்டனுக்கு விஜயஞ் செய்தார்.

சுபாஷ் சந்திர போஸ் விரைவில் குண மடைய வேண்டு மென்று எகிப்தியப் பிரதிநிதிகள், மேற்படியாருக்கு ஓர் ஆசிச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

இன்று, திரிபுரி காங்கிரஸுக்கு விஜயஞ் செய்திருந்த எகிப்தியப் பிரதிநிதிகள் பம்பாயிலிருந்து கெய்ரோவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

பிரான்ஸுக்கும் ருமேனியாவுக்கும் இன்று வியாபார ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது.

3 பர்மாவின் கவர்னரான ஸர் ஆர்ச்பால்ட் காக்ரேன் ரஜாவில் செல்ல விருப்பதால், அவருடைய ஸ்தானத்திற்கு ஸர் டூத் க்ரேவ்லி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ருமேனியாவின் ஆயுதத் தேவைகளைப் பிரிட்டன் எப்பொழுதும் பூர்த்தி செய்து வைக்கத் தயாராயிருப்பதாக காமன்ஸ் சபையில் இன்று கூறப்பட்டது.

ராஜ்கோட்டை தகராறு சம்பந்தமாக ஸர் மாரிஸ் க்வையர் இன்று தீர்ப்பளித்து விட்டார். சீர்திருத்தக் கமிட்டியின் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு ஸர்தார் படேலைச் சேர்ந்த தென்றும் ஆனால் அதனை அங்கீகரிக்கும் பொறுப்பு தாகூர் சாஹிபைச் சேர்ந்த தென்றும் இந்தத் தீர்ப்பு கூறுகிறது.

4 ஈராக் நாட்டின் மன்னர் ஒரு மோட்டார் விபத்தில் உயிர் துறந்தார்.

சீனாவிலுள்ள அமெரிக்கச் சொத்துக்களின் மீது ஜப்பானியர்கள் ஆகாய விமானக் குண்டுகள் போட்டுச் சேதம் உண்டாக்குகிறார்கள் என்று அமெரிக்க அரசாங்கத்தார் மீண்டும் ஜப்பானிய அரசாங்கத் தாருக்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

5 அல்பேனிய அரசருக்கு இன்று ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

தற்போது பிரெஞ்சு குடியரசின் தலைவராயுள்ள லெப்ரூன் மீண்டும் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

காசி மகாராஜா இன்று காலமாகி விட்டார்.

மீவார் சமஸ்தானத்தில் தொடங்கப் பெற்ற சத்தியாக்கிரகம், காந்தியடிகளின் விருப்பத்திற்கிணங்க நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

5 ஐரோப்பிய யுத்தம் ஒன்று ஏற்படுமானால் லிதுவேனியா அரசாங்கம் நடுநிலைமை வகிக்கும் என்று மேற்படி அரசாங்கப் பிரதிநிதி யொருவர் கூறினார்.

6 அல்பேனியாவின் மீது இத்தாலியர்கள் படை யெடுத்துச் சில நகரங்களைக் கைப் பற்றி யிருக்கிறார்கள். இதைப்பற்றிப் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நெவில்லி சேம்பர்லேன் பேசுகிறபோது அல்பேனியாவுக்கும் பிரிட்டனுக்கும் நேர்முகமான தொடர்பு இல்லை யென்று கூறினார்.

இந்தியா அரசாங்க பொக்கிஷ அங்கத்தினரான ஸர் ஜேம்ஸ்க்ரிக், தமது பதவியிலிருந்து ராஜீநாமாசெய்து இன்று டெல்லியிலிருந்து புறப்பட்டார்.

இன்று ராஜப் பிரதிநிதியும் காந்தியடிகளும் சந்தித்துப் பேசினார்கள்.

7 ஆஸ்திரேலியாவின் பிரதம மந்திரியாயிருந்த ஜே. லையன்ஸ் என்பவர் இறந்து விட்டார்.

பிரிட்டனும் போலந்தும் பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்து கொள்வதாக, தளபதி பெக்கின் லண்டன் விஜயத்தின் போது முடிவு கட்டப்பட்டது,

அல்பேனியாவின் மீது இத்தலி படையெடுப்பதைப்பற்றி முஸோலினியும் ஹிட்லரும் நீண்ட நேரம் டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார்கள்,

8 அல்பேனியா, இத்தலியின் கைவசமாயிற்று.

10 ஜெர்மன் பொருளாதார நிபுணர்களில் ஒருவரான டாக்டர் ஷாஷ்ட் இன்று பம்பாய் வந்து சேர்ந்தார்.

இத்தலி, அல்பேனியாவை ஸ்வீகரித்துக் கொண்டு விட்டதைப் பற்றியும், மற்ற ஐரோப்பிய நிலையைப் பற்றியும் ஆலோசிக்க இன்று பிரிட்டிஷ் மந்திரிச் சபை கூடியது.

இத்தலியில், புதிய படைகளைத் திரட்டுகிற உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

யூகோஸ்லோயாவில் இத்தலிக்கு விரோதமான உணர்ச்சி வலுத்து வருகிறது.

11 ஜப்பானியப் படைகள், ஹாங்காங் தீவுக்குச் சமீபத்தில் இறங்கி யிருக்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

ஹங்கேரியும், பெரு என்ற தென்னமெரிக்க நாடும், சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டு விட்டன.

அல்பேனியா மீது இத்தலி படை யெடுத்திருப்பதைக் கண்டு, எகிப்து அதிக கோபங் கொண்டிருக்கிறது.

சர்வதேச நிலைமை மிகவும் நெருக்கடியா யிருப்பதால், பிரிட்டிஷ் மன்னர், தமது ஈஸ்டர் விடுமுறையினின்று திரும்பி லண் டனுக்கு வந்து விட்டார்.

இத்தலியில் இப்பொழுது பத்து லட்சம் பேர் ஆயுதபாணிகளாயிருக்கிறார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது.

பல்கேரியாவிலுள்ள நாஜி கட்சி கலைக் கப்பட்டது.

12 அல்பேனியாவின் மகுடத்தை இத்தாலிய மன்னருக்கு அளிப்பதென்று இன்று, அல் பேனிய ஜனப்பிரதிநிதி சபை தீர்மா னித்தது.

13 போலந்தின் மேற்குப் பாகத்திலுள்ள பல ஜெர்மானியர்கள் இன்று கைதி செய்யப் பட்டிருக்கிறார்கள்.

அல்பேனியாவின் மகுடத்தை இத்தாலிய மன்னர் ஏற்றுக்கொண்டார்,

பாலஸ்தீனத்தில், முக்கிய அராபியத் தலை வர்களுள் ஒருவரான அப்துல் ரஜ்ஜிக் என் பவர் கைது செய்யப்பட்டார்.

கிரீஸும் ருமேனியாவும் தாக்கப்பட் டால், அதற்கு பிரிட்டனும் பிரான்ஸும் சேர்ந்து பாதுகாப்புக் கொடுக்கும் என்று பிரெஞ்சு பிரதம மந்திரி கூறினார்.

14 ஜிப்ரால்டரில் பலத்த முஸ்திபுகள் செய் யப்பட்டு வருகின்றன.

அராபியர் சிலரால் ரகசியமாக நடத்தி வரப்பட்ட ஓர் ஆயுதத் தொழிற் சாலை யைப் பிரிட்டிஷ் துருப்புகள் கண்டு பிடித்தன.

15 சுதந்திர நாடுகளை இனித்தாக்குவதில்லை யென்று ஓர் உறுதி மொழி கொடுக்குமாறு, அமெரிக்கக் குடியரசின் தலைவரான ரூஸ் வெல்ட், முஸோலினிக்கும் ஹிட்லருக் கும் செய்தி அனுப்பி யிருக்கிறார்.

போலந்திலுள்ள ஜெர்மானியர்கள் துன் புறுத்தப்படுகிறார்களென்று ஜெர்மன் பத் திரிகைகள் தலையங்கங்கள் எழுத ஆரம் பித்திருக்கின்றன.

ஈரான் தேசத்து இளவரசருக்கும் எகிப் திய மன்னரின் சகோதரிக்கும் விவாகம் நிச்சயிக்கப்பட் டிருந்ததல்லவா? இந்த விவாக தம்பதிகள் இன்று ஈரான் தேசத் துத் தலைநகராகிய டெஹ்ரானுக்கு வந்து சேர்ந்தார்கள்.

17 ஐரோப்பிய யுத்தம் ஏற்படுமானால் அப் பொழுது, ஐர்லாந்து நடுநிலைமையே வகிக்கும் என்று டிவேலரா இன்று கூறினார்.

கல்கத்தாவுக்கு 66 மைல் தூரத்தில் டாக்கா மெயில், ரெயில் பாதையினின்று இறங்கி விட்டதால் அதிக சேதம் ஏற் பட்டது. 28 பேர் மரணம்; 35 பேர் காயம்.

ஜப்பானியர்களுக்கும் சீனர்களுக்கும் நடைபெற்ற யுத்தத்தில் இன்று ஆயிரம் ஜப்பானியர்கள் கொலை செய்யப்பட் டார்கள்.

இந்தியா அரசாங்கத்தின் சட்ட அங்கத் தினரா யிருந்த ஸர் என். என். சர்க்கார் தமது பதவியி லிருந்து விலகிக் கொள்வ தன் காரணமாக இன்று டெல்லியி லிருந்து புறப்பட்டார்.

18 நியூ ஜீலந்து அரசாங்கம் யுத்த சந்நாகங் கள் செய்து கொண்டிருக்கிறது.

ஸ்பெயின் யுத்த சம்பந்தமாக நியமிக்கப் பட்டிருந்த தலையிடாத கமிட்டியைக் கலைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன.

ருமேனியாவின் அந்நிய நாட்டு மந்திரி யானவர் இன்று பெர்லினுக்கு வந்து, ஜெர்மன் அதிகாரிகளுடன் பேசிக்கொண் டிருக்கிறார்.

19 பாலஸ்தீனத்தில் பிரபல கலகக்காரர்கள் என்று பெயர் படைத்த சுமார் 250 பேரை இன்று பிரிட்டிஷ் துருப்புகள் கைது செய்திருக்கிறார்கள்.

20 இன்று, ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்குட் பட்ட நாடுகளில் ஹிட்லரின் 50வது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் விழுந்தால், அவற்றினின்று ஜனங்கள் தப்பித்துக் கொள்ள மூன்று லட்சம் எஃகுக் கொட்டகைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஜனங்களின் உபயோகத்திற்கென்று விநியோகம் செய்திருக்கின்றனர்.

இருபத்தைந்து லட்சம் பவுன் செலவில் ஒரு கப்பற் படை தளத்தைக் கட்டிக் கொடுக்க ஒரு ஜெர்மன் கம்பெனிக்குத் துருக்கி அரசாங்கத்தார் கண்டிராக்ட் கொடுத் திருக்கின்றனர்.

21 சாமான்கள் சப்ளை செய்யும் இலாகாவை மேற் பார்வை செய்ய புதிய மந்திரி ஒருவர் பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சீன அரசாங்கத்தை ஆதரித்துப் பிரிட்டன் பிரசாரம் செய்கிறதென்று ஜப்பானியப் பத்திரிகைகள் கூறுகின்றன.

யுத்த அவசியத்தை முன்னிட்டு, பிரான்ஸ் புதிய வரிகளை விதித்திருக்கிறது.

22 சர்வதேச நிலைமையைப்பற்றி பல ஐரோப்பிய நாட்டு மந்திரிகளும் லண்டனுக்கு வந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடன் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் அறிக்கையைப்பற்றி ஜெர்மனி, மற்ற ஐரோப்பிய அரசாங்கங்களுடன் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்பெயினில் பிராங்கோ அரசாங்கம் தான், சட்ட ரீதியான அரசாங்கம் என்று இந்தியா அரசாங்கத்தார் அங்கீகரித்திருக்கின்றனர்.

23 ஐர்லாந்தில புரட்சி ஏற்பட்டதன் 23வது வருஷம் கொண்டாடப்பட்டது.

இத்தாலிய அரசாங்கப் பிரதிநிதியும் யூகோஸ்லேவிய அரசாங்கப் பிரதிநிதியும் இன்று வெனிஸ் நகரத்தில் சந்தித்துப் பேசினார்கள்.

24 மகாத்மா காந்தி இன்று ராஜ்கோட்டை விட்டு பம்பாய்க்குப் புறப்பட்டார்.

இன்று காசி மகாராஜா தமது சிங்காதனத்தில் வீற்றிருக்கச் செய்யப்பட்டார்.

பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஸர் ஜான் சைமன், அரசாங்க வரவு செலவு திட்டத்தை ஆஜர் படுத்தினார். யுத்தச் செலவுகளுக்கென்று 63 கோடி பவுன் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று கூறினார்.

ஜெர்மனியில் வியாபாரஞ் செய்து கொண்டிருந்த மூன்று பிரிட்டிஷ் வியாபாரிகள், 10-5-39ல் ஜெர்மனியை விட்டு விலக வேண்டுமென்று ஜெர்மன் அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

ரோமாபுரியில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஸ்தானீகராயிருந்த லார்ட் பெர்த், இன்று ரோமாபுரியிலிருந்து லண்டனுக்குச் சென்று விட்டார்.

பாலஸ்தீனத்தில் கலகக்காரர்களின் கொடுமைகள் அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் சீனர்களுக்கு அதிகமான வெற்றி கிடைத்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

25 ஜார் சுரங்கப் பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுக்குட்பட்ட எல்லாத் தொழிலாளர்களும், ஜெர்மன் பாது காப்புக்கென்று கட்டப்பெறும் கோட்டை கொத்தளங்களில் வேலை செய்ய அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜெர்மனி, சர்வதேச விஷயங்களில் தன் கொள்கையை மாற்றிக் கொள்ளா விட்டால், பிரிட்டன் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டி வரும் என்று பிரிட்டன், தனது ஸ்தானீகர் மூலம் ஜெர்மனிக்கு எச்சரிக்கை செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஸ்தானீகராக லார்ட் லோதியன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

26 இருபது அல்லது இருபத்தோரு வயதுடைய எல்லாரும் சேனைக்குத் திரட்டப்படுவார்கள் என்று இன்று காமன்ஸ் சபையில் சேம்பர்லேன் கூறினார். இந்தக் கட்டாய ராணுவச் சேவக முறையை எல்லாத் தொழிலாளர் சங்கங்களும் எதிர்க்கின்றன.



பெல்போன் கிராமபோன்கள்
பெல்டோன் ஹார்மோனியங்களே
வேண்டுமென்று கேளுங்கள்.



பெல்போன் கிராமபோன்களில், டோன் சேம்பர், சவுண்ட் பாக்ஸ் முதலியவை, தாமே இயங்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

எங்களிடம் எல்லாப் பாஷைகளிலும் கிராமபோன் ரிகார்டுகள் இருக்கின்றன. பிலிம், செட் பிளேட்டுகளும் கல்கத்தா விலையில் கிடைக்கும்.

எல்லாச் சங்கீதக்கருவிகளையும் நாங்கள் நேரே வரவழைக்கிறோம்.

உயர்ந்த ரக பிடில்கள் எங்களிடம் இருக்கின்றன. பிடிலே சங்கீத அரசன்.

SEN BROTHERS & Co.

சென் பிரதர்ஸ், அண்ட் கோ, 338, டல்ஹவுஸி தெரு, இரங்கூன்.

வேண்டுகோள்

நமது பிரதிநிதி, திரு. சுப. சோலையப்ப செட்டியார், நாளது மாத முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் சுற்றுப்பிரயாணம் செய்வதால் அன்பர்கள் யாவரும் அவருக்கு ஆதரவு தர வேண்டுகிறோம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.,

47, 31-வது வீதி, இரங்கூன்.

விலையோ சரசம்!
வாடையோ அதி உன்னதம்!!
பேயர் பெற்றதோ அதிகம்!!!

அது யாது?

மேல் நாட்டு பிரன்ச் சென்டுகளில், வாடையிலும், பெயராலும், விலையிலும், சிறு பிள்ளைகள் முதல் வயோதிகர் வரை நன்குணர்ந்த செட்டியார் மயில் மார்க்கு சென்டுகளை உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

குறிப்பு:—மயில் மார்க்கும் செட்டியார் என்ற பெயரையும் கவனித்து வாங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

சிங்கப்பூர், பினங், முதலிய மலாய் பிரதேசங்களுக்கும் பர்மாவைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் தக்க திறமையுள்ள ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரத்துக்கு எழுதவும்-

பர்மா சோல் ஏஜண்டு:—

பெங்களூர் அகர்பத்தி வாசனை சாலை,

119 மொகல் வீதி, இரங்கூன்.

நேர்த்தியான பைண்ட்! அழகான அட்டை!

"ஜோதி"

"ஜோதி"யின் முதல் வருஷத்துப் பன்னிரண்டு இதழ்களும் இரண்டு வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

விலை ரூபா 4-8-0

தபாற் செலவு

பர்மாவுக்கு 1—6—0 இந்தியாவுக்கு 1—8—0

மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ... 2—0—0

தபாற் செலவையும் சேர்த்து மணியார்டரில் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,

47, 31-வது வீதி, இரங்கோன்.

ஜோதி ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா.

எழுதிய புதிய நூல்:

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—6,

கமால் அத்தா தூர்க்.

விலை ரூபா 1 8 0

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—7.

பாலஸ்தீனம்.

விலை 8 அணா.

பிரபஞ்ச ஜோதி வரிசையில்.

சுடர்		ரூ. அ. ப.
1—	முஸோலினி	1—4—0
2—	அபிசீனிய சக்ரவர்த்தி	0—8—0
3—	ஹிட்லர்	2—4—0
4—	ஸ்பெயின் குழப்பம்	0—10—0
5—	ஜெக்கோ ஸ்லோவேகியா	1—0—0

கிடைக்கும் இடங்கள் :—

1. சென்னை ஹிக்கின் பாதம் ரெயில்வே புக்ஸ்டால்கள்
2. பாரதி பிக்சர் பாலேஸ், காரைக்குடி.
3. சுதேசி நிலையம். 38, மார்க்கெட் ஸ்ட்ரீட் சிங்கப்பூர்.
4. P. சிவகுரு பிரதர்ஸ், தபால் பெட்டி 225, கோலாலம்பூர்.
5. வேதம் கம்பெனி, மோகல் தெருவு, இரங்கூன்.
6. சென்னை 'சண்டே டைம்ஸ்' புக்ஸ்டால்கள்

பாரத பந்தர், புத்தக வியாபாரிகள்,

47, 31வது வீதி. இரங்கூன்.

அழகிய கம்ஸ் பித்தான்கள்.

எங்கிரேவிங் நிக்கல் எனாமலில் தேசீயக்கொடி, மகாத்மா போட்டோ, ராட்டினம், வந்தேமாதரம், போட்டும் தமிழ் இங்கிலீஷில் பெயர்போட்டும் அன்பர்கள் விருப்பத்தின்படி பலகலரில் செய்து கொடுக்கப்பெறும்.

அதேமாதிரியில் இங்கிலீஷ் எழுத்துப் பித்தான்களும், தலைவர்கள் பாட்ஜு (மெடல்) களும், காங்கிரஸ் கொடி பாட்ஜும், ரெடிமேடாக கிடைக்கும்.

பொது ஸ்தாபனங்களுக்கு நூற்றுக்கணக்கில் சகாயமான விலை.

எங்களிடம் தேசீய நூல்கள் பலவும் கிடைக்கும்.

ராம. வீரப்பன்,

சுதேசி நிலையம்,

38, மார்க்கட் ஸ்திரீட், சிங்கப்பூர்.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது

பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது

கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது

எது?

அதுதான்

'மணிக் கொடி'

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

	வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	3—0—0	0—2—0
வெளிநாடு	4—8—0	0—4—0

மானேஜர்:— **'மணிக் கொடி' ஆபீஸ்,**

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதிராஸ்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932-ம் ஹு ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய பல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறுமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு :	ரூ.	4-0-0
பர்மா :	ரூ	4-8-0
வெளி நாடு :	ரூ.	6-0-0

தனிப் பிரதி அணு ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர் : : : : மதராஸ்.

சுத்தமானது!  கலப்பில்லாதது!

போஜனத்தை சுவைக்கக்கூடியது

பசுவும், கன்றும் மார்க்குள்ள

“அசல் போஜன நேசன்”

ஷை நெய்யானது கோயமுத்தூரில் புதிய வெண்ணையைக்கொண்டு நீடித்த அனுபோகஸ்தர்களால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் ஏராளமாக தருவித்து விற்று வருகிறோம்.

அநேக பெரிய கல்யாணங்களுக்கும், டின்னர்களுக்கும், சப்ளை செய்து கியாதிபெற்றிருக்கிறோம். எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

ஜில்லாக்களில் விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை.

மற்ற விவரங்களுக்கு :— **ராஜா ஸ்டோர்ஸ்,**

நெ. 101-51வது தெரு, கிழக்கு ரங்கூன்.

அமிர்தாஞ்ஜனம்.

எல்லாவிதமான நோய்களுக்கும் கைகண்ட சஞ்சீவி

தலை வலி
நெஞ்சு வலி
முதுகு வலி
பல் நோய்

கைகா லுளைச்சல்
கை கால் குளிர்ச்சி
வாய்வு நோய்கள்
பக்ஷவாதம்
செவி நோய்
வெட்டுக்காயம்
வயிறு உப்புசம்
இருமல் ஜுரம்

எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்

எங்கும் கிடைக்கும்.

படை மருந்து

எந்தவிதமான படையா யிருந்தாலும் ஆச்சரியப் படத்தக்க விதமாய் குணப்படுத்த வல்லது. மூன்று கலரில் லேபில் உள்ள "சூரியன்" மார்க் மருந்தைப் பார்த்து வாங்கவும்.

பற் பொடி

பல் சம்பந்தமான எல்லாவித வியாதிகளையும் குணப்படுத்திப் பல்லை பளிங்கென மிளிரச் செய்து, வாய் நாற்றத்தையும் பல் வலியையும் போக்கி மகிழச் செய்வது.

சிரங்கு மருந்து

சரீரத்தைக் கெடுக்கும் சொரி சிரங்கு, மேகநீர் சம்பந்தமான ஆறாத புண் முதலிய கொடிய வியாதிகளை குணப்படுத்துவதில் நிகரற்றது.

போலி ஏமாறுதீர்கள் !

குறிப்பு:-- வியாபாரிகள் சிலர் வேறு மருந்துகளைக் கொண்டு அமிர்தாஞ்சனம் என்றுவிற்று வருகிறார்கள். ஆகையால் மோசம் போகாமல் அசல் அமிர்தாஞ்சனம் ஐந்து பாஷை அடங்கிய சீட்டையும் டப்பியையும் பார்த்து வாங்கி லாபம், குண மடையவேண்டுமென எச்சரிக்கை செய்கிறோம்.

அமிர்தாஞ்ஜனம் லிமிடெட்,

மதராஸ், பாம்பே, கல்கத்தா,

பர்மா பிரதிநிதிகள்:—

கே. எஸ். என். மூர்த்தி,

94, மொகல் வீதி, இரங்கூன்.

உங்கள் அதிருஷ்டம்

காந்தி ஜோசியரால் விவரிக்கப்படுகிறது.

எல்லாம் தலைவிதி என்று ஏமாற வேண்டாம். உங்களது எதிர் கால பலனை அறிந்து அதின்படி நடப்பதால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும். மானிட வாழ்க்கைக்கு சோதிடம் இன்றியமையாததாகும். நம்மால் எழுதப்படும் இப்பலன்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்கும். ஆரோக்கியம், குடும்பம், வருமானம் அல்லது நஷ்டம், தொழில் வழி, பிரயாணம், பந்து, மித்திரர், விரோதி, வேஷக்காரர், அதிகாரி இவர்களினால் ஏற்படும் சம்பவங்கள், காதல் லாடிரீ ரேஸ் எதிர் பாராத லாபம் அதிருஷ்ட துரதிருஷ்ட நாட்கள் மற்றும் பல முக்கிய விஷயங்களையும் மாதவாரி எழுதி அனுப்புகிறோம். சிரம பலன் ஏதாவது ஏற்படுமானால் அதற்கான படி பரிகாரமும் இதில் எழுதப்படும்.

சார்ஜ் விவரம்:—ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத ரூ 3-0-0
ஒரு வருஷப் பலன் வாராந்திரமாக ரூ 10-0-0
ஆருடம் 5 கேள்விகளுக்குபதில் ரூ 1-0-0
வி. பி. தபால் சிலவு ரூ 0-6-0

குறிப்பு:—ஜாதக நகல் அல்லது ஜனன கால விவரம் இது தெரியாதவர்கள், முழுப் பெயர், கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது தொழில் இவைகளை தெரிவிக்க வேண்டும்.

சென்னை பிரபல தேசிய தமிழ் தினசரி. சுதேசமித்திரன் 30–1–37ல் எழுதுவதாவது:—

"காந்தி ஜோஸ்யர் என அழைக்கப்பட்டுவரும் திருத்தணிகை ஹநுமத் உபாசி ஸ்ரீமான் வி. கே. சடகோபாச்சாரியாரை, மித்திரன் நேயர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. சென்ற 15 வருஷங்களாக அவரது ஜோதிஷப் புலமைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் விடுதலை தினத்தைப்பற்றிச் சரியாக ஜோஸ்யம் கூறியதிலிருந்து மேற்படியாரின் புகழ் எங்கும் பரவ வாரம்பித்தது. இப்பொழுது மேற்படி புகழ் உலகெங்கும் வியாபிக்கக்கூடிய நிகழ்ச்சி நேரிட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் தேர்தல் நடந்ததல்லவா? அதில் ரூஸ்வெல்ட் ஜெயமடைவார் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் ஜோஸ்யம் கூறியது பலித்து விட்டது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமான் சடகோபாச்சாரியாரின் அபார ஜோதிஷத் திறமையை நன்கு நிதர்சனமாக்குகிறது. தனி நபர்களுக்கு பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஜோதிஷ ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹநுமத் உபாஸி, வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,

திருத்தணி. S. இந்தியா.

கலப்பற்றது

அறுசுவை உண்டிக்கு
அவசியமானது

PURE ROSE BRAND ANNASUDHI
LINGAM & Co. COIMBATORE

ரோஜா மார்க்கு

அசல் அன்ன சுத்தி

புத்தம் புதிய வெண்ணெயில் உத்திர வாதத்துடன் கைபடாமல் தயாரிக்கப்பட்டது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்.

நிகரற்றது

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

பர்மா சோல் ஏஜெண்டுகள் :—

வேதம் அண் கோ.,

89, முகல் வீதி, ரங்கூன்.

நமது வேண்டுகோள்.

நமது சந்தா நேயர்கள் சிலர் "ஜோதி" இதழ் வெளியான இரண்டு மூன்று மாதங்கழித்து, தங்களுக்குப் பழைய இதழ்கள் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கிறார்கள். பத்திரிகை, சாதாரணமாக பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் சந்தாதார்கள் கையில் கிடைக்குமாறு நாம் அனுப்பிக்கொண்டு வருகிறோம். எனவே, அந்த மாத முடிவிற்குள் பத்திரிகை கிடைக்கவில்லை யென்று தெரிவித்தால், அதற்குத்தக்கது செய்யலாம். இப்படியே விலாச மாற்றங்களையும், பத்திரிகை வெளியாவதற்குப் பத்து தினங்களுக்கு முன்னாடி தெரிவித்தல் நல்லது.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.,

47, 31வது வீதி. இரங்கூன்.